609.
167203

# இந்திய மாதர் சரித்திரம்

9.15.2
N.15.1

167203

09

# இந்திய மாதர் சரித்திரம்

4-15

(முதற்பாகம்.)

609
4 . 15
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 NOV 1915
MADRAS

தமிழ்ப்பண்டிதர்

**V. B. வேங்கடராம சாஸ்திரிகள்**

எழுதியது.

ஆர். திருமலை அண்டு கம்பெனி,

114, பவழக்காரத்தெரு, சென்னை.

1915

விலை அணா 5.] காபி ரைட். [தபாற்கூலி வேறு.

# இந்திய மாதர் சரித்திரம்

(முதற்பாகம்.)

609
4-15

OFFICE OF THE REGISTRAR OF ...
13 NOV 1915
MADRAS

தமிழ்ப்பண்டிதர்

V. B. வேங்கடராம சாஸ்திரிகள்

எழுதியது.

23 JUN 1915

ஆர். திருமலை அண்டு கம்பெனி,

114, பவழக்காரத்தெரு, சென்னை.

1915

விலை அணா 5.] காபி ரைட். [தபாற்கூலி வேறு.

2539
920

415.2
T115.1

Madras:
Printed by S. MURTHY & Co., at The "Kapalee" Press
305, Thambu Chetty Street, Madras.

147703

# PREFACE.

From the year 1854 onwards the Government have expressed their cordial sympathy and support with the efforts which have been made in the way of expansion and efficiency of female education. The following table gives us an idea of the literary per thousand.

| Years. | Males. | Females. |
|---|---|---|
| 1891 ... | 118·4 | 6·8 |
| 1901 ... | 118·5 | 9·2 |
| 1911 ... | 138·1 | 17·4 |

I do not propose to dwell into the causes that account for this slow growth. But it may safely be said that apathy is taking the place of antogonism with many and that among a small minority need for general education of women is admitted.

This book is written with the hope that a great impetus will be given to female education by making our girls study the biographies illustrating the good deeds of great and virtuous women with a brief account of their native land and her most distinguished daughters. The idea of writing a book on these lines was first suggested to me by M. R. Ry. C. S. Sundaram Ayyar Avl., B.A., L.T., Headmaster, Government Secondary Training School, Teachers' College, Saidapet.

If only we begin to realise that learning was never sealed to the women of old but on the other hand that there had been learned women in the past as portrayed in this book, much of the popular prejudice against female education will, it is hoped, be rooted out and a great impetus given to the education of girls.

The eminent Dr. Duncan's words on this question are worth their weight in gold. "A society composed of educated men and uneducated women can never be a progressive society. If India desires to take its place among the foremost peoples of the earth, to be a progressive instead of a stagnating or decaying society, it must gird up its loins and resolve at whatever cost to emancipate its women from the thraldrom of ignorance."

A wide field still lies before educated men and women in this country both in the way of translations of English books and in the production of original treatises by persons who have received Western education and assimilated western thoughts and Eastern culture.

The author will feel amply rewarded if the humble effort of his will in however small a degree promote the expansion of the education of girls.

NEWTON HOUSE, Vepery 1-5-15. — V. B. VENKATARAMA SASTRY.

சென்னை-600 008.
OFFICE OF THE REGISTRAR OF ... 19 NOV 1915

# முகவுரை.

கவர்ன்மெண்டார் பெண்கல்வியின் அபிவிருத்தியைப் பற்றிப் பிரயத்தனம் எடுத்துக்கொள்வதாயும், அங்ஙனம் முயற்சி யெடுத்துக்கொள்கின்றவர்களுக்கு, ஒத்தாசை செய்வதாயும் 1854வருஷத்தில் வாக்களித்திருக்கிறார்கள். கீழ்க் கண்டிருக்கின்ற அட்டவணையிலிருந்து படித்தவர்களின் தொகை ஆயிரத்துக்கு இவ்வளவென்று தெரிந்துகொள்ளலாம்.

| வருஷம். | ஆண். | பெண். |
|---|---|---|
| 1891 ... | 118·4 | 6·8 |
| 1901 ... | 118·5 | 9·2 |
| 1911 ... | 138·1 | 17·4 |

பெண்கல்வியின் அபிவிருத்தி மெதுவாயிருப்பதற்கு உண்டான காரணங்களை இதில் கூறப்போவதில்லை. ஆனால், ஒன்றுமாத்திரம் நிச்சயமாய்ச்சொல்லலாம். முன்பு பெண் கல்வியில் விரோதம் பாராட்டிவந்த அநேகம் மனிதர்கள் இப்பொழுது அந்த வைரம் நீங்கிச் சற்றுப் பராமுகமாயிருக்கிறார்கள். பெண்கல்வியின் அருமையை உணர்ந்து ஆமோதிக்கின்றவர்களும் சிலர் இப்பொழுது இருந்து வருகிறார்கள்.

இந்தப் புஸ்தகத்தில் தேசசரித்திரத்தில் காணப்படுகின்ற ஸ்திரீரத்னங்களின் உண்மைச் சரித்திரங்களிற் சில எழுதப்பட்டிருக்கின்றன. இந்த நூதனவழியில் என்னைத்தூண்டியவர் ம-ள-ள-ஸ்ரீ C. S. சுந்தரமய்யரவர்கள், B.A., L.T., (Headmaster, Government Secondary Training School, Teachers' College, Saidapet.)

பண்டைக்காலத்தில் ஸ்திரீகளுக்குப் படிப்பு என்றும் மறுக்கப்படவில்லை. இந்தப் புஸ்தகத்தில் சொல்லியிருக்கின்றபடி அநேகம் பெண்கள் நன்றாய்ப் படித்துப் பண்டிதைகளா யிருந்திருக்கிறார்களென்பதை நம் நாட்டுப்பெண்கள் அறியத்தொடங்கினால், பெண்கல்விக்கு ஏற்பட்டிருக்கின்ற எல்லா இடையூறுகளும் தானேவிலகி அவர்கள் மனத்தில் ஒரு புதியகிளர்ச்சி உண்டாகுமென்பது திண்ணம்.

கீர்த்திவாய்ந்த டாக்டர் டங்கன் துரையவர்கள் பெண் கல்வி விஷயமாய்ச் சொல்லியிருக்கின்ற வார்த்தை விலையற்றதாயிருக்கின்றது. “கல்வியறிவுள்ள ஆண்மக்களும் அஃதில்லாத பெண்மக்களும் ஒன்று சேர்ந்து வாழ்கின்ற ஜனசமூகமானது ஒருநாளும் முன்னுக்கு வரமாட்டாது. இந்தியர்கள் க்ஷீணமடையாமலும், இருந்த நிலைமையிலேயே இன்னும் இருக்காமலும், உலகத்திலுள்ள இதரதேசத்தார்களைப் போல முன்னுக்குவர விரும்பினால், எப்பாடுபட்டாவது அறியாமையில் மூழ்கிக்கிடக்கின்ற தங்கள் ஸ்திரீகளை உடனே கரையேற்றவேண்டியது அவர்களுக்கு இன்றியமையாத முதற்கடமையாகும்.”

இந்தநாட்டில் படித்த ஆண்பெண் இருபாலாருக்கும் இயற்றவேண்டிய நூல்கள் பலவிருக்கின்றன. மேனாட்டுச் சாஸ்திரங்களையும், கீழ்நாட்டு நாகரீகங்களையும் ஒட்டி, நூதன புஸ்தகங்களாகவாவது, அல்லது மொழிபெயர்ப்புப் புஸ்தகங்களாகவாவது, எழுதவேண்டியது அத்தியாவசியம்.

பெண்கல்வியை எள்ளளவேனும் இந்தப்புஸ்தகம் அபிவிருத்திசெய்யத் தூண்டுமானால், ஆக்கியோனுக்கு அதுவே ஒரு தக்க கைம்மாறாகும்.

நியூடன் ஹௌஸ்,<br>
வேப்பேரி.<br>
1-5-1915.

வா. பி. வேங்கடராம சாஸ்திரி.

---

OFFICE OF THE … NOV 1915 … MADRAS

# பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| இந்தியாவின் அமைப்பு ... ... | 1 |
| ஆரியர்கள் ... ... ... ... | 3 |
| வாக்கு ... ... ... ... | 5 |
| தேவஹூதி ... ... ... | 7 |
| மைத்ரேயி ... ... ... ... | 8 |
| கார்க்கி ... ... ... ... | 11 |
| ஸீதை ... ... ... ... | 14 |
| த்ரௌபதி ... ... ... | 23 |
| ஸுஜாதை ... ... ... ... | 30 |
| யசோதரா ... ... ... ... | 32 |
| கானா ... ... ... ... | 34 |
| லீலாவதி ... ... ... ... | 39 |
| அரேபியாவும் மஹம்மதியர்களும் ... | 42 |
| சம்யுக்தா ... ... ... ... | 49 |
| ரீஜியா ... ... ... ... | 69 |
| பத்மினி ... ... ... ... | 71 |
| பாமினிராஜ்யம் ... ... ... | 80 |
| தாராபாய் ... ... ... ... | 82 |
| பன்னா ... ... ... ... | 88 |
| துர்க்காவதி ... ... ... | 92 |
| சாந்த்பீபி ... ... ... ... | 98 |

# இந்தியமாதர் சரித்திரம்.

## இந்தியாவின் அமைப்பு.

**நாம்** வசிக்கும் இந்தத் தேசத்துக்கு இந்தியா என்று பெயர். இது ஆசியாகண்டத்துக்குத் தெற்கில் இருக்கிறது. இதற்கு வடக்கே இமயமலையும் மற்ற மூன்று பக்கங்களில் சமுத்திரமும் இருக்கின்றன. இமயமலை என்பதற்குப் பனி மலை என்று பொருள். உலகத்தில் உள்ள எல்லா மலைகளைக் காட்டிலும் இமயமலை மிகப்பெரியது. இதில் மகோன்னதமான சிகரங்கள் பல இருக்கின்றன. சில சிகரங்களின் உயரம் சுமார் ஆறு மைல். எப்பொழுதும் அவ்விடங்களில் பனி மூடிக்கொண்டிருக்கும். இந்த மலை இந்தியாவுக்கு வடக்கில் ஒரு பெரிய சுவர்போல இருந்துகொண்டு சத்துருக்களை இதற்குள் புகவொட்டாமல் தடுத்துக்கொண்டிருக்கின்றது. இந்த மலையிலிருந்து கங்கை, பிரமபுத்திரா, சிந்து முதலிய பெரிய நதிகள் உற்பத்தியாகி ஹிந்துஸ்தானத்தின் வழியாய் ஓடிச் சமுத்திரத்தில் சங்கமமாகின்றன. ஒருபொழுதும் இந்த நதிகளில் ஜலம் வற்றுவது கிடையாது. கோடைகாலங்களில் மலையிலிருக்கும் பனி சூரியவெப்பத்தினால் தண்ணீராகி நதியில் பெருகியோடும். இந்த நீர்வளத்தினால்தான் ஹிந்துஸ்தானம் மிகச் செழிப்புள்ள தேசமாய் விளங்குகின்றது. சமுத்திரத்தில் நீண்டிருக்கும் இந்திய தீபகல்பம் தக்ஷிணம் என்று வழங்குகின்றது. ஹிந்துஸ்தானத்தையும் தக்ஷிணத்தையும் பிரிக்

கும் மலைக்கு விந்தியம் என்று பெயர். தக்ஷிணத்துக்குக் கிழக்கிலும் மேற்கிலும் கிழக்குத்தொடர்ச்சி மலை மேற்குத் தொடர்ச்சி மலை என்று இரண்டு மலைத்தொடர்கள் இருக்கின்றன. இவ்விரண்டில் மேற்குத் தொடர்ச்சிமலை அதிக உயரம். அந்த மலையில் உற்பத்தியாகின்ற நதிகள் பலவும் கிழக்குத் தொடர்ச்சி மலையின் இடை வெளிகளிற் புகுந்து கிழக்கு முகமாகவே ஓடிவருகின்றன. இந்தியாவுக்கு மூன்று பக்கங்களிலும் சமுத்திரம் சூழ்ந்திருப்பதனால் முன் நாட்களில் சத்துருக்கள் இந்த மூன்று பக்கங்களினாலும் வருவதற்கு வழியில்லாமல் இருந்தது. ஏனென்றால், இக்காலத்தைப்போல முன் நாட்களில் புகைக்கப்பல் முதலான சாதனங்கள் இல்லை. ஆகையினால் வடக்கில் இமயமலையும் மற்ற மூன்று பக்கங்களில் கடலும் இருந்துகொண்டு இந்தியாவை விரும்பிவருகின்ற அன்னிய நாட்டார்களுக்குக் கொஞ்சமும் உள்ளே நுழைய இடம் கொடுக்காமல் காப்பாற்றிக்கொண்டிருந்தன.

வடக்கிலும் வடமேற்கிலும் உள்ள மலைகளில் சில சிறு கணவாய்கள் இருக்கின்றன. இவைகளின் வழியாய்ப் பிரயாணம் செய்வது மிகுந்த அபாயகரமாக இருந்தபோதிலும் எதற்கும் அஞ்சாத சில தீரர்கள் இந்தக் கணவாய்களின் வழியாய் இந்தியாவுக்குள் முன்பு பிரவேசித்திருக்கிறார்கள். இந்தியாவுக்கு வடக்கேயுள்ள தேசங்கள் மலைகள் அடர்ந்த மேட்டுப்பாங்கானவை. பூமியும் உழுது பயிரிடத் தகுந்ததன்று. மிகுந்த குளிர் தேசம். அந்தப் பிரதேசங்களில் வசிக்கும் ஜனங்கள் நாகரீகமற்றவர்கள். அவர்கள் தங்கள் உணவுப்பொருள்களுக்கும் ஆடு மாடுகளைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் வனங்களிலும் மலைகளிலும் கஷ்டப்பட்டு அலைந்து திரிந்துகொண்டிருப்பது வழக்கமாய் விட்டது.



குளிர் தேசத்தில் வசித்துவருவதுவே பலத்துக்குக் காரணமாதலால் அவர்கள் மகாபலிஷ்டர்களா யிருப்பார்கள். அவர்களை அதிகமாக இந்தியாவுக்குள் புகவிடாமல் தடுத்துக்கொண்டு வந்தது இமயமலைதான்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
NOV 1915
MADRAS

---

## ஆரியர்கள்.

---

இந்தியாவில் ஆரியர்கள் குடியேறுவதற்கு முன்பு இங்கு நாகரீகமற்ற ஒருவகை முரட்டு மனிதர்கள் வசித்து வந்தார்கள். அவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. அவர்கள் சரித்திரம் நமக்கு அதிகமாகத் தெரியாததற்குக் காரணமும் அதுதான். பின்பு அவர்களை விடக் கொஞ்சம் நாகரீகத்தில் தேர்ந்த ஒருவகைக் கூட்டத்தார் இந்தியாவுக்குள்ளே நுழையத்தலைப்பட்டார்கள். அப்பொழுது பூர்விகர்கள் அவர்களுக்குத் தோற்றுப்போய் மலைகளிலும் வனங்களிலும் ஓடி யொளித்து வசிக்கத் தொடங்கினார்கள். அந்த இனத்தைச் சேர்ந்தவர்களாகிய ஏனாதியர், காண்டவர், தோதவர் முதலிய மனிதர்கள் இன்னும் காடுகளில் வசித்து வருகின்றனர். குடி புகுந்தவர்களுக்குள் நாகரீகமடைந்தவர்கள் திராவிடர்கள்தாம். அவர்களுக்கு இராஜன், சேனை, வியாபாரம் முதலியவைகள் இருந்தனவாய்த் தெரிகின்றன. அவர்களுக்குப் பயிர்த்தொழிலில் அதிகம் பாண்டித்தியம் உண்டு. அவர்கள் பாஷை தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவு, தெலுங்கு முதலிய நான்கும் தமிழ்ப்பாஷையிலிருந்து பிரிந்தவைதாம். பெரும்பாலும் தமிழின் போக்கையே அநுசரித்துப் பிறங்

திருக்கின்றன. இந்த ஐந்து பாஷைகளுக்கும் பஞ்சத்திராவிடம் என்று பெயர். அவர்கள் மரம் கல் முதலியவைகளைப் பூஜைசெய்து வந்தார்கள். அந்த வழக்கம் இன்னமும் மாறவில்லை.

வெளித்தேசத்திலிருந்து வந்து இந்தியாவில் குடியேறின ஜனங்களில் மிகவும் பெயர்பெற்றவர்கள் ஆரியர்கள். தங்கள் தேசத்தில் ஜனநெருக்கம் அதிகமாகவே இடம் போதாமல் மத்திய ஆசியாவிலிருந்து அவர்கள் உணவுப் பொருள் தேடும்பொருட்டு இந்தியாவுக்கு வந்தவர்களென்று வித்வான்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். இமயமலைக்கு வடக்கிலிருந்து வந்தவர்களானபடியால் ஆரியர்கள் மகாபலிஷ்டர்களா யிருந்தார்கள். மலைப்பிரதேசத்திலிருந்து வந்த ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்து செழிப்புள்ள பூமியையும் என்றும் வற்றாத நதிகளையும் கண்டமாத்திரத்தில் இங்கேயே என்றும் இருந்துவாழத் தீர்மானித்துக் கொண்டு விட்டார்கள். அதனால் அங்கிருந்த பழைய குடிகளைச் சுலபத்திலேயே ஜயித்துப் பூமியைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அவர்கள் முதலில் குடியேறினவிடம் ஸிந்து நதிக்கரை. பின்பு காலக்கிரமத்தில் கங்கை நதி வரையில் பரவினார்கள். இவர்கள் பாஷை ஸம்ஸ்கிருதம். நமது வேதங்கள் இந்தப் பாஷையில் தான் எழுதப்பட்டிருக்கின்றன. வேதங்களிற் சொல்லியிருக்கின்ற அபிப்பிராயம் அவ்வளவும் கடவுளிடத்திலிருந்து வெளிவந்தன. வேதங்கள் நான்கு. அவை ருக்வேதம், யஜுர்வேதம், சாம வேதம், அதர்வவேதம். இவற்றில் மிகப் பழைமையானது ருக்வேதம். இதிலிருந்துதான் பூர்விக ஆரியர்களின் சில பழக்க வழக்கங்களை நாம் அறிகிறோம்.



ஆரியர்களுக்குப் பாஷை மதம் எல்லாம் ஒன்று தான். அவர்கள் காடுகளை வெட்டிக் கிராமங்களை உண்டாக்கிப் பயிர்செய்வதற்குரிய ஏற்பாடுகளைக் கண்டுபிடித்து விருத்தி செய்து வந்தார்கள். அந்தக் காலத்தில் ஜாதிபேதம் இல்லை. அவர்கள் குதிரை பூட்டின ரதங்களில் ஏறி யுத்தம் செய்வார்கள். சண்டைக்குரிய ஆயுதங்கள் பலவற்றையும் அவர்கள் செய்து வைத்துக்கொண்டிருந்தார்கள். முதலில் பொன், வெள்ளி, இரும்பு முதலிய உலோகங்களால் நாணயமான பலவகை வேலைகளைச் செய்யத்தெரிந்துகொண்டார்கள். இந்திரன், வருணன், அக்னி, சூரியன் இவைகள் காம் பூர்விக ஆரியர்களுக்குத் தெய்வங்கள். எல்லாரும் ஒரு குடும்பமாகவே வாழ்ந்து வந்தார்கள். குடும்பத்துக்கு அதிபதி தகப்பன்தான். ஆரியர்கள் தங்கள் ஸ்த்ரீகளுக்கு அதிக கௌரவம் கொடுத்திருந்ததாய்த் தெரியவருகிறது. புருஷனை இழந்த பெண்கள் பலரும் புனர் விவாகம் செய்து கொள்ளும் வழக்கம் இருந்தது. அந்தக் காலத்தில் அநேகம் பெண்கள் படித்துப் பண்டிதைகளாக விளங்கினார்கள்.

## வாக்கு.

ஆரியர்களில் பூருவம் அம்பிராணர் என்று ஒரு மகர்ஷி இருந்தார். அவர் புத்திரிக்கு வாக் என்று பெயர். அவள் ஸம்ஸ்கிருதத்தில் மகாபண்டிதை. மிகவும் பழைமையான ருக் வேதத்தில் அவள் இயற்றிய பாடல்களில் அநேகம் இன்னமும் இருந்து வருகின்றன. அந்தப் பாடல்கள் அவ்வளவும் வேதாந்தத்துக்கு அஸ்திவாரம் என்று மகான்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. அவள் தன் வாழ்

நாள் முழுமையும் ஞானியாகவே யிருந்துவிட்டாள். இந்த வாக்கின் அடியை மிதித்துக்கொண்டே அநேகம் பெண்கள் அந்தக் காலத்தில் கல்வியிற் சிறந்து விளங்கினார்கள். அவர்கள் இயற்றிய பாடல்களும் வேதங்களில் காணப்படுகின்றன.

சில காலத்துக்குள் ஆரியர்கள் கங்கைக்கரை வரையிலுமுள்ள தேசங்களைச் சுவாதீனப்படுத்திக் கொண்டார்கள். மத்திய ஆசியாவிலிருந்து மேலும் மேலும் புதிய புதிய ஆரியர்களின் கூட்டம் இந்தியாவுக்குள் புகுந்துகொண்டிருந்தது தான் இதற்கு முதற் காரணம். அதனால், புராதன ஜனங்களோடு அவர்கள் அடிக்கடி போர்புரிய நேரிட்டது. அதுபற்றிச் சிலர் எப்பொழுதும் ஆயுதபாணிகளாகவே யிருந்து போர்புரிவதில் காலத்தைக் கழிக்கவும், சிலர் வீடுகளிலிருந்து தெய்வங்களைத் தொழவும், சிலர் ஆகாரத்துக்கு வேண்டிய பொருள்களைச் சேகரிக்கவும், சிலர் தொண்டு செய்யவும் நேரிட்டது. அது தான் ஜாதி பேதம் ஏற்பட்டதற்கு முதற் காரணம். உலகப்பெருக்கத்தை விரும்பினால் எப்பொழுதும் ஜாதியும் மதமும் ஒன்றாயிருக்க முடியாதென்பது வெளிப்படை. ஒவ்வொருவருக்கும் தொழிலும் தருமமும் குறிப்பிட்டது அந்தக் காலத்தில் தான். ஜனப்பெருக்கம் அதிகரிக்கவே அவர்களுக்குத் தொழிற் பிரிவினை வேண்டியது அவசியமாயிற்று. தொழிற் பெருக்கத்தினால் ஜாதிபேதம் உண்டாக வாரம்பித்தது. ஜாதிபேதம் கடைசியில் நீதியை வெளிப்படுத்தியது.

இந்த நீதியை முதல் முதல் ஏற்படுத்தியவர் மனு என்கின்ற ஒரு தீர்க்கதர்சி. அந்தக் காலத்தில் அவர் மகாவியாபகர். அவரைப்போலக் கௌரவிக்கப் பட்டவர்



ஒருவருமில்லை. தற்காலம் வரையில் இந்தியாவில் அவர் நீதி யொழுங்குகள்தாம் அஸ்திவாரமா யிருக்கின்றன. அந்த நீதிகளுக்கு மனுநீதி என்று பெயர். தன் பெருந் தன்மையினாலும் பரோபகாரத்தினாலும் தான் நடந்து காட்டிய ஒழுக்கங்களினாலும் அவர் ஒரு பெயர்பெற்ற தெய்வ வரசராகவே மதிக்கப்பட்டுவந்தார்.

## தேவஹூதி.

அந்த மனுவுக்கு ஒரு புத்திரியுண்டு. அவள் பெயர் தேவஹூதி. அழகிலும் கல்வியிலும் நிகரற்று விளங்கினவள். அவளால் கணவனாக விரும்பப்படும் பாக்கியத்தைப் பொருந்தியவர் கர்த்தமர் என்ற ஒரு ரிஷிசிரேஷ்டர். அவர் ஞானக்களஞ்சியம். ஈசுவரபக்தியிற் சிறந்தவர். தேவஹூதியின் அன்பைத்தெரிந்துகொண்டு தானும் அவளை விரும்பி மணம் செய்துகொண்டார். தன் உயர்ந்த இராஜ்ய சம்பத்தைக் கொஞ்சமும் விரும்பாமல் தேவஹூதி தன் கணவன் வாழும் கானகத்துக்கு அப்பொழுதே அவருடன் பயணப் பட்டுவிட்டாள். குளிர், பனி, வெயில் முதலியவற்றைப் பொறுத்துக் கொண்டு "எப்பணியா லின்புறுவர் காதலர் அக்காதலரை, அப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி— ஒப்ப, மனம் குழையும் வண்ணம் மகிழ்விப்பதன்றோ கனங் குழையார் தங்கள் கடன்." என்றவண்ணம் கர்த்தமருக்குச் செய்து முடிக்க வேண்டிய உரிமைப் பணிவிடைகளில் கொஞ்சமும் சோம்பாமல் சுறு சுறுப்போடு நிறைவேற்றி அவர் அன்பைச் சொந்தமாக்கிக் கொண்டதுடன் ஈசுவரத்

தியானத்திலும், நூதன விஷயங்களைக் கண்டு பிடிப்பதிலும் கர்த்தமரோடு ஒத்து உழைத்துத் தன் அறிவை விருத்தி செய்துகொண்டாள். ‘கல்வி, ஞானம், புகழ் முதலியவற்றில் இவள் எவ்விதத்திலும் கர்த்தமருக்குக் கீழ்ப்பட்டவளல்லள்’ என்று பண்டிதர்கள் தேவஹூதியைப் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் தேவஹூதியினால் தங்கள் சந்தேகம் நீங்கப்பெற்று ஈசுவரத்தியானத்தில் நிலைத்து நின்று பல மகரிஷிகள் பிரக்யாதி யடைந்திருக்கிறார்கள். இவளை மனைவியாய் அடைந்த காரணத்தினால் கர்த்தமருக்குப் பெயரும் கீர்த்தியும் அதிகமாய்ப் பிரகாசிக்கத் தொடங்கிற்று. தேவஹூதி வைராக்கியத்திலும் வேதாந்த சாஸ்திரத்திலும் அதிகமேன்மை பெற்று விளங்கினாள். இவள் வயிற்றில் பிறந்தவர்தான் கபிலமகரிஷி. பாலியப் பருவத்திலேயே தன் புத்திரனுக்கு நல்லொழுக்கம் கீழ்ப்பணிவு ஈசுவரபக்தி முதலிய நற்குணங்களைப் புகட்டிக் கடைசியில் அவருக்குக் குருவாகவும் விளங்கினாள். தேவஹூதிக்கும் கபிலருக்கும் நடந்த சம்வாதங்களைப் பாகவதத்தில் பரக்கக் காணலாம். கபிலமகரிஷி தன் வயதில் மிகவும் வியாபகரானதற்கு முதற்காரணம் தேவஹூதியின் பழக்க ஒழுக்கங்கள்தாம் என்று சாதுக்கள் சொல்கிறார்கள்.

## மைத்ரேயி.

முன்காலத்தில் ஒரு புருஷன் தன் நிலைமைக்குத் தகுதியாக நான்கு ஐந்து மனைவிகளுக்கும் அதிகமாய் மணம் செய்துகொண்டிருந்தானென்று சரித்திரம் கூறுகின்றது. உதார



ணமாக, யாக்ஞ்யவல்கியர் என்ற மகரிஷிக்கு இரண்டு மனைவிகள். மூத்தவள் பெயர் காத்யாயனி. இளைய மனைவிக்கு மைத்ரேயி என்று பெயர். காத்யாயனி வீட்டுவேலைகளைக் கவனித்துக் கொண்டு வருவாள். மைத்ரேயிக்குப் படிப்பும் அறிவும் அதிகமாயிருந்தபடியால் எப்பொழுதும் நல்லவிஷயங்களை விசாரணை செய்து தீர்மானிப்பதிலேயே அவள் காலம் கழிக்கப்பட்டது. விஷயங்களை நூதனமாய்க் கண்டறிவதற்கு வேண்டிய விடாப்பிடியும் சுறு சுறுப்பும் மைத்ரேயிக்குச் சொந்தமாயிருந்தன. மைத்ரேயி சிலசமயங்களில் தான் உத்தேசித்த ஒன்றைத் தீர்மானப் படுத்துவதற்காக யோசித்துக்கொண்டே இரண்டு மூன்று நாள் வரையில் பட்டினியாக இருந்து விடுவதும் உண்டு. கடவுளைக் காண முடியுமா? அதற்கு வழி எது? கண்டதனால் உண்டாகும் பயன் யாது? என்ற மூன்றும் மைத்ரேயிக்கு விஷயங்கள். அந்தக் காலத்தில் யாக்ஞ்யவல்கியரைக் கல்வியில் வெல்பவர் எவரும் இல்லை. சுகப்பிரம்மரிஷிக்கும் சந்தேகம் நீங்கச் செய்த ஜனகமகாராஜர் இவருக்குச் சிஷ்யர் என்றால் வேறு இவரைப் பற்றிப் புகழ்ந்து பேசுவானேன்?

சில நாள்களுக்குப் பின்பு யாக்ஞ்யவல்கியர் “நான் வனத்துக்குச் சென்று தவம் செய்ய விரும்புகிறேன். “பகர்ச்சிமடவார் பயில நோன்பாற்றல் திகழ்ச்சி தரும் நெஞ் சத்திட்பம்—நெகிழ்ச்சி பெறும் பூங் கொடியிடைப் பேதாய் பலகால் எறும்பூரக் கற்குழியுமே.” என்றிருப்பதனால் அங்கு உங்கள் பழக்கம் எனக்குக் கெட்டது. நீங்கள் இருவரும் சொத்துக்களைப் பாகித்துக்கொண்டு இங்கு வாழ்ந்திருங்கள்.” என்றுகூறினார். மைத்ரேயி அவரை நோக்கித் “தலைவரே! தங்கள் கட்டளை மிகவும் ஆச்சரியமானது.

மரணத்தை மாற்றும் சக்தி தங்கள் பொருளுக்கிருக்கின்றதா? கடவுள் தரிசனத்தைக் கூட்டுவிக்குமா? திரும்பவும் தங்கள் சேர்க்கைக்காவது அநுகூலம் செய்யுமா? இந்தப்பொய்ப் பொருள் எங்களுக்கு என்னபயனை உண்டாக்கிவிடும் என்று நினைத்துக் கொடுக்கிறீர்கள்? நாங்கள் இருவரும் தங்களைப் பின்பற்றி வந்தோமேயன்றித் தங்கள் பொருளைப் பின்பற்றி வரவில்லை. பொருளைக் கொண்டு நாங்கள் ஒருவித பயனையும் எதிர் பார்க்கவில்லை. "கூத்தாட்டவைக்குழாத்தற்றே பெரும் பொருள் போக்கும் அது விளிந்தற்று." இது பொருளின் லக்ஷணம். "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்றதுணை" என்ற அமுத மொழி உண்மையாயிருந்தால் தாங்கள் தவம் செய்து பெறக்கூடிய உயர்ந்த பயன் யாது? தவத்துக்கு நாங்கள் இடையூறு என்று கட்டளையிட்டீர்கள். தாங்கள் சொல்வது உண்மையானால் பெரியோர்கள் எப்பொழுதும் பெண்களை மணந்து கொண்டிருக்க மாட்டார்களே. தங்கள் உயர்தரப் படிப்பையும் ஞானத்தையும் உலகம் கொண்டாடுகின்றது. இவ்வளவு மேன்மை பொருந்தி விளங்கும் தங்களுக்கே மனத்தைச் சலிப்பற வசப்படுத்தும் சக்தி குறைந்திருந்தால் மற்று யாவர்க்குத்தான் அது வசப்படமுடியும்? தலைவரே! நாங்கள் சிற்றின்பத்தில் ஆசை வைத்துத் தங்களைக் கட்டாயப் படுத்துவதாக நினைக்க வேண்டாம். எங்களுக்கு வேண்டியது உண்மை வழி ஒன்றே யொன்றுதான். எந்த உபாயத்தினால் மரணம் தடுக்கப்படும்? எதனால் பிறப்பு நீங்கப் பெறும்? இவற்றை எங்களுக்குச் சந்தேகமில்லாமல் உபதேசம் செய்ய வேண்டும்" என்று இவை போன்ற பல வினாக்களைக் கேட்டு யாக்ஞவல்கியர் எண்ணத்தை முழுவதும் மாற்றி விட்டாள். சாந்தோக்கியம் என்ற உபநிஷத்தில் இது விஷயமாக மைத்ரேயிக்கும் யாக்ஞவல்கியருக்கும் நடந்த சம்பாஷணைகளை விவரமாய்க் காணலாம். அந்த சம்பாஷணைகளைப் படித்துப் புகழ்ந்து பேசாத பண்டிதர்கள் எவரும் இல்லை. ஆண்மக்களைப் போலவே பெண்மக்களும் அந்தக் காலத்தில் அதிக தைரிய முள்ளவர்களாக இருந்து வந்தார்கள். பரிஷத்துக்களுக்குச் சென்று மனம் தளராமல் தங்கள் நோக்கங்களை எடுத்துச் சொல்லும் சாமர்த்தியம் அவர்களுக்குப் பொருந்தியிருந்தது. எவ்வளவு பாண்டித்தியம் இருந்திருந்தால் உபநிஷத்துக்கள் இவர்கள் வாக்கியங்களை அங்கமாய்க் கொண்டு விளங்கும்?



---

## கார்க்கி.

இன்னும் பாருங்கள். இந்த மைத்ரேயியின் காலத்திலேயே வாசுகர் என்று ஒரு மகரிஷி இருந்தார். அவருக்குக் கார்க்கி என்று ஒரு புத்திரி விளங்கினாள். அவள் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அக்காலத்துப் பண்டிதர்கள் நடுக்கம் கொள்வார்கள். தர்க்கம், வியாகரணம், ஜ்யோதிஷம், கணிதம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களில் அவள் நிகரற்றவளா யிருந்தாள். அவள் சாமர்த்தியத்தை ஓரே யொரு உதாரணத்தால் தெரிந்து கொள்ளலாம். அவள் காலத்தில் மிதிலாபுரத்தை ஜனகர் என்ற ஒரு பெரியவராசர் பரிபாலித்து வந்தார். நியாய விசாரணையில் எல்லா வர்சர்களும் அவரைப் பின்பற்றி வந்தார்கள். மகரிஷிகள் கூடத்தங்கள் தீராச் சந்தேகங்களை அவரிடம் தெரிவித்துத்

தெளிவடைவது வழக்கமாயிருந்தது. அவர் ஒரு சமயம் மகாஸத்ரம் என்ற ஒரு பெரிய யாகம் செய்யத்தொடங்கினார். அதற்கு வனத்தில் தவம் செய்துகொண்டிருந்த எல்லா ரிஷிகளும் பண்டிதர்களும் வந்து அந்த யாகசாலையை அலங்கரித்தார்கள். யாகம் வெகு விமர்சையாய் நிறைவேற்றப்பட்டது. அப்பொழுது ஜனகமன்னவர் நன்றாய் அலங்காரம் செய்து ஒவ்வொரு கொம்புக்கும் பப்பத்து மோஹராக்கள் கட்டப்பட்ட தெய்வலக்ஷணம் பொருந்திய பசுக்கள் ஆயிரத்தைக் கொண்டுவந்து சபையில் நிறுத்திப் "பண்டிதர்களே! ஈசுவரனிடத்தில் நிச்சய புத்தியும் நம்பிக்கையும் உள்ளவர்களுக்கு இந்தப் பசுக்கள் சொந்தம்; அவர்கள் ஓட்டிச் செல்லலாம்" என்றார். ஒரு முகூர்த்த சாவகாசம் வரையில் அந்தப் பெரிய சபை சந்தடியற்று மௌனமாயிருந்தது. எவரும் ஆஸனத்தை விட்டு எழுந்திருக்கவில்லை. பின்பு யாக்ஞ்யவல்கியர் தன் சிஷ்யனுக்குப் பசுமாடுகளை விடுதிக்கு ஓட்டிச் செல்லக் கட்டளையிட்டார். சிஷ்யன் எழுந்து குருவின் கட்டளையை நிறைவேற்றத் தொடங்கினான். அப்பொழுது மகரிஷிகளுக்கு யாக்ஞ்யவல்கியர் மீது பொறாமையும் கோபமும் உண்டாயிற்று. ஒருவரையொருவர் விழித்துப் பார்த்தும், சைகை செய்தும், முணுமுணுத்தும், தங்கள் பொறாமையைக் காண்பித்தார்களேயன்றி ஒருவராவது யாக்ஞ்யவல்கியரைத் தடுத்து வாதிக்க வெழுந்திருக்கவில்லை. அனைவரும் அவர் கல்விக்கு அந்த ஜங்கத்தில் பயந்து கொண்டேயிருந்துவிட்டார்கள்.

அந்தப் பெரிய சபையின் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்த பெண் ஒருத்தி எழுந்திருந்து தன் மலர்ந்த கண்களால் சபையை ஒரு தடவை விழித்துப் பார்த்தனள்.



அப்பொழுது அனைவர் கண்களும் அவள் மீது பாய்ந்தன. அவளைத் தெரியாதவர்கள் 'மகரிஷியை வாதிக்க முடியுமென்றும், முடியாதென்றும், பைத்தியக்காரி என்றும், வெட்கமற்றவுள் என்றும்' பலவாறு பேசிக்கொண்டார்கள். தெரிந்தவர்களோ "இருவரும் சமமானவர்கள்; இவர்கள் தர்க்கம் சிலாக்கியமானது; இன்று அநேக விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம்;" என்று சந்தோஷப்பட்டார்கள். அப்படி எழுந்து நின்றவள் யார் தெரியுமா? அவள்தான் நம்பண்டிதை கார்க்கி. பின்பு கம்பீரமான தோற்றத்தோடு யாக்ஞ்யவல்[illegible]ரைப் பார்த்துக் "கனம் பொருந்திய ஐயா, இங்கு உள்ளவர்களுக்குள் [illegible]தாம் ஈசுவர பக்தியில் மிகுந்தவர்களோ?" என்று வினயமாய்க் [illegible] ரிஷி "பெண்ணே! அதை நிச்சயப் படுத்துவதற்கு நான் அதிகாரம் பெறவில்லை; எனக்குக் கடவுளிடத்தில் நிச்சயமான நம்பிக்கை உண்டு; அதனால், நான் பசுக்களை ஓட்டிச் செல்கிறேன்;" என்றார். கார்க்கி "ஐயா! முதலில் கடவுள் எப்படிப்பட்டவர் என்பது நிச்சயமாகட்டும்; இரண்டாவது நம்பிக்கையைப்பற்றி விசாரிக்கலாம் என்று அந்தப் பண்டித கேசரியோடு வாதம்செய்ய ஆரம்பித்தாள். ஜயாபஜயம் என்பது இம்மியும் இல்லாமல் அந்தவாதம் இருபத்தொரு நாள் வரையில் நடந்தேறிற்று. மகரிஷிகள் பலரும் சபாஷ்! சபாஷ்!! என்று இருவரையும் புகழ்ந்து கரகோஷம் செய்துகொண்டாடினார்கள். பின்பு காரியாவசரத்தினாலும், ஒவ்வொருவரும் ஆச்சிரமத்தை விட்டுவந்து அதிக நாளாய்விட்டதினாலும், பண்டிதர்களும் ரிஷிகளும் ஒன்றுகூடி 'இருவரும் சமமாகவே யிருந்தாலும் முதலில் பசுக்களை ஓட்டிச்செல்ல வெழுந்தவர் யாக்ஞ்யவல்கியராதலால் பசுக்கள் அவருக்குச் சொந்தம், என்று தீர்மானித்தார்கள். அப்பொ

ழுது கார்க்கி மிகுந்த பணிவோடு "சபிகர்களே! பசுக்கள் வேண்டும் என்ற அக்கறை எனக்கு இருந்திருந்தால் ஜாக்கிரதைப் பட்டிருப்பேன்; ஏகாங்கியும் விரக்தையுமாகிய எனக்கு ஆயிரம் பசுக்கள் ஏன்? என் விவாதத்துக்குக் காரணம் விஷயமேயன்றிப் பசுக்கள் அன்று என்பதைத் தாங்கள் அறியுங்கள்;" என்று விடைபெற்றுச்சென்றாள். கார்க்கியின் கல்வித்திறமையும், சொல்வன்மையும், சபையஞ்சாமையும் எவ்வளவு புகழ்வதற்கு யோக்கியமாயிருக்கின்றதென்பதை யோசித்துப் பாருங்கள். இந்தவாதத்தின் சில அவசியமான பாகங்களைமாத்திரம் சாந்தோக்கிய உபநிஷத்தில் காணலாம்.

---

## ஸீதை.

பூருவத்தில் விதேகராஜ்யம் நிமிவம்சத்தரசர்களுக்குச் சொந்தமாயிருந்தது. மிதிலாபுரி அதற்கு ராஜதானி. ஜனக மன்னவர்தான் அதற்கு அரசர். அவர் ஒருசமயம் யாகத்துக்கு நிலத்தை உழுது சமன் செய்யும் பொழுது படைசாலில் ஒருபெரிய பெட்டி அகப்பட்டது. அதில் மிகவும் இளைய அழகியபெண்குழந்தையொன்று பொருட் குவியலின் மீது விளையாடிக்கொண்டிருந்தது. ஜனகர் அந்தச்சிசுவுக்குச் சீதை என்று பெயரிட்டுவளர்த்துவந்தார். பருவம் ஏறவேற, ச்சீதைக்கு அறிவும்பலமும் அதிகப்பட்டுக்கொண்டுவந்தது. தகுந்தபண்டிதர்களின் பாதுகாப்பில் விடப்பட்டதனால் சில வருஷங்களுக்குள் சீதை கல்வியில் நிகரற்று விளங்கினாள். கலைகள் பலவும் அவளுக்குக் கரதலாமலகமாய் விட்டது. யுத்த சாஸ்திரத்திலும் அவளுக்குப் பாண்டித்தியம் அதி



கம். நாளடைவில் மணப்பருவம் அவளை அலங்கரிக்கத் தொடங்கிற்று. அந்தக் காலத்தில் அரசகுமாரிகளுக்குச் சுவயம்வரம் என்பது சாஸ்த்ரீயமா யிருந்தது. எல்லா வரசர்களும் நிரம்பியிருக்கின்ற சபைக்கு அரசகுமாரிகள் வந்து தங்களுக்கு இஷ்டமான புருஷனைத் தெரிந்தெடுத்துக் கொள்வதற்குச்சுவயம்வரம் என்றுபெயர். சீதைக்கு அப்படிப்பட்ட சுவயம்வரம் ஒன்றும் ஏற்படுத்தப்படா விட்டாலும், அவள் அழகிலும் அறிவிலும் மேம்பட்டிருந்தபடியால் அரசர்கள் போட்டி செய்யத் தொடங்கினார்கள். ஜனகருக்கு அது ஒரு பெரிய தொந்தரவாய் விட்டது. அதன்பொருட்டு யுத்தத்துக்கு வந்த சில அரசர்களை அபஜயப்படுத்தியும் அனுப்பினார். இன்னும் சிலரை உபாயங்களினாலும் ஒழித்தார். என்ன செய்தும் என்ன? தேன் துளிக்கு மொய்க்கும் ஈக்கூட்டங்களைப்போல அவர்கள் தொகை நாளடைவில் அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. சதுர்வித உபாயங்களாலும் அவர்கள் ஸீதையை அடையப்பார்க்கிறார்கள். ஜனகருக்கு ஜீவஹிம்சையில் கொஞ்சமும் இஷ்டம் கிடையாது. அவர் ஒரு பெரிய வேதாந்தி. விரக்தி மார்க்கத்தில் இருப்பவர். அவர் மந்திரிகளோடு நன்றாய்க்கலந்து ஆலோசனை செய்து ஒரு விளம்பரத்தை வெளிப்படுத்தினார். அதன் விவரமாவது 'தன் பூஜைவீட்டிலிருக்கின்ற பெரிய வில்லை வளைத்து விடுகின்றவனுக்குச் ஸீதை மனைவியாக்கப்படுவாள்.' என்பது தான். வில்லைக்கண்டதும் அரசர்களைப் பற்றியிருந்த ஆசைப் பைசாசம் முழுவதும் விட்டுத்தொலைந்தது. வில்லைத் தூக்கி நிறுத்தவும் சக்தியற்றவர்களாய் அவர்கள் அனைவரும் அவமானத்தோடு அகன்று விட்டார்கள். அந்த வில் தெய்வபலம் பொருந்தியதென்றும், தெய்வீகலக்ஷணம் பொருந்திய மனிதனுக்கன்றி அது வளைக்கப்பட மாட்டா

தென்றும் ஒரு வதந்தி உலாவிவந்ததனால் பின்பு ஒருவரும் அதைக் கண்ணாலும் காணவிரும்பவில்லை. சீதை ஒரு நாள் தன் விளையாட்டு அவசரத்தில் அந்தவில்லின் கீழ் அகப்பட்டுக்கொண்ட பந்தை எடுத்துக்கொள்வதற்குத் தன் இடது கரத்தினால் வில்லைத் தூக்கி விட்டதை அறிந்த ஜனகர் அந்தப் பெரிய வில்லை எடுத்து வளைப்பவனுக்குத்தான் அவள் மனைவியாகவேண்டும் என்று நிச்சயப்படுத்தினார்.

விதேகராஜ்யம் மேம்பாடுற்று விளங்கிய காலத்தில் கோஸல ராஜ்யமும் வலிமை யடைந்திருந்தது. சூரியவம்சத்துச் சக்கிரவர்த்திகள் அதைப் பரிபாலித்துவந்தார்கள். அவர்களுக்கு இராஜதானி அயோத்தி. அதில் தசரதரென்ற ஒரு முதியவரசர் சக்கிரவர்த்தியாய் விளங்கினார். அவருக்கு நான்கு குமாரர்கள். இராமர், இலக்ஷ்மணர், பரதர், சத்ருக்னர் என்று அவர்களுக்குப் பெயர். விசுவாமித்திரர் வேள்வியைக் காப்பாற்றுவதற்குச் சக்கிரவர்த்தியினால் கட்டளை பெற்றுப் புறப்பட்ட இராம லக்ஷ்மணர்கள் அது நிறைவேறியபின்பு முனிவருடன் மிதிலைக்கு வந்து ஜனக மன்னவருக்கு விருந்தினர்களாயிருந்தார்கள். அப்பொழுது இராஜசபைக்கு வீரர்களால் எடுத்துக்கொண்டு வரப்பட்ட அந்தப் பெரியவில்லை இராமர் என்பவர் சுலபமாக எடுத்து வளைத்து ஒடித்துவிட்டார். அதனால், அவருக்குச் சீதை சொந்த மனைவியாயினாள். பெண்கள் அநுசரிக்கவேண்டிய தர்மங்கள் பலவும் தாய்வீட்டிலேயே நன்றாய்க் கற்பிக்கப்பட்டதனால் சீதை இராமரோடு அயோத்திக்கு வந்து அனைவருக்கும் கண்ணாகவே விளங்கினாள்.

பின்பு குடும்பத்தில் நேர்ந்த சில அந்தரங்க உடன்படிக்கையின் நிமித்தம் இராமர் வனத்தில் பதினான்கு வருஷம்



வாசம் செய்யப் புறப்பட்டார். அப்பொழுது அவர் தன் மனைவியைப்பார்த்து "என் அன்புள்ள சீதா! நான் தந்தை கட்டளையின் வண்ணம் வனவாசம் செய்யச் செல்கிறேன். நீ என் தாய்தந்தைகளுக்குப் பணிவிடை செய்துகொண்டு அயோத்தியில் இரு. வனவாசத்தில் துக்கம் அதிகம். தவணை கழிந்ததும் உன்னைவந்து காண்கிறேன்" என்றார். சீதை "என் ஆருயிர்த் தலைவரே! நான் தங்களோடு என்றும் பிரியாதிருக்கக் கற்பிக்கப்பட்டேனேயன்றித் தங்களைப் பிரிந்து வேறுவிதமாகத் தங்கியிருக்கக் கற்பிக்கப்படவில்லை. மனிதனை விட்டு அவன் நிழல் வேறு பிரிந்திருக்கமாட்டாது. மேலும், வாழ்விலும், தாழ்விலும் இன்பத்திலும் துன்பத்திலும் ஒருவரை யொருவர் பிரியக்கூடாதென்று அக்னிமுன்னிலையில் சத்தியம் செய்து கொண்டிருக்கிறோம். ஆரண்யவாசத்தில் அதிகதுக்கம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. தங்களைப்பிரிந்து வாழ்வதைக்காட்டிலும் வேறு அதிக துக்கம் இருக்கமாட்டாதென்பது என் அபிப்பிராயம். பாரிய வில்லைக் கரத்திற்கொண்டு விளங்கும் ஒரு சக்கிரவர்த்தியின் திருக்குமாரருக்குத் தன்னையே விரும்பித் தொடர்ந்த எளிய பெண் பிள்ளையொருத்தியைக்காக்கத் திறனில்லாதிருப்பது நகைப்புக்கிடம். என்றும் சீதை இராமரை விட்டுத் தனித்திராள்." என்று வனவாசகாலத்தில் அவரைப் பின்பற்றினாள். தன் அன்புள்ள சகோதரனைப்பிரிய மனமில்லாமல் இலக்ஷ்மணரும் வனத்துக்குப் புறப்பட்டார்.

சீதை ஆரண்யத்தில் நடந்து காட்டிய ஒழுக்கங்கள் மிகவும் அற்புதமானவை. ஒரு ஏழைக்குடும்பத்துப் பெண் பிள்ளையாலும் பட்டிருக்க முடியாத அவ்வளவு கஷ்டங்களை மிகவும் எளிதில் பொறுத்துக்கொண்டு அவருக்கு ஊழியம்

செய்து வந்தாள். அவள் கானகத்தில் கடும்பட்டினியினாலும், குளிர்பனியினாலும், கொடுவெயிலியினாலும், தாக்குண்டு வருந்தினும் இயற்கையழகு இம்மியும் சீர்குலையாமல் சுடச்சுட ஒளிரும் பொன்னைப்போல மாற்று அதிகப்பட்டுக் கொண்டே வந்தது. அரண்யவாசம் செய்யும் முனிவர் மனைவிகள் அனைவரும் சீதையின் உயர்ந்த ஒழுக்கங்களைப் பின்பற்றத் தொடங்கினார்கள். இங்ஙனம் சீதைக்குத் தண்டகவனத்தில் பதின்மூன்று வருஷமும் இரண்டு திங்களும் புகழோடும் இன்பத்தோடும் கழிந்தன. அப்பொழுது இலங்கைத் தீவுக்கு அரசனாகிய இராவணன் என்பவன் சீதையின் இயற்கை யழகைப் பலராலும் கேள்வியுற்று அவளைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொள்ள விரும்பினான். கோதாவரியைச் சார்ந்த பஞ்சவடி என்னுமிடத்தில் சீதை வாசம் செய்கையில் ஒருநாள் அவள் தழைவீட்டுக்குப் பிக்ஷு ஒருவன் உள்ளே நுழைந்தான். சீதையினால் அந்த பெரியவருக்கு உபசரணை செய்யப்பட்டது. இரண்டொரு நிமிஷம் இருவர்க்கும் சம்பாஷணை நடந்ததும் பிக்ஷு தன்னை இராவண ராக்ஷஸனாக முழுவதும் மாற்றிக்கொண்டு விட்டான். அப்பொழுது கொண்ட சீதையின் தைரியம் மிகவும் பாராட்டத் தகுந்தது. அவள் அந்த ராக்ஷஸனை நோக்கித் "துஷ்டா! அநியாயமாக அழிந்துபோகாதே; நான் உனக்காகப் படைக்கப்படவில்லை; இராமர் என்ற அரச குமாருக்கு மனைவியாயிருக்கிறேன்; என் உடல் பொருள் ஆவி முழுவதும் அவருக்குச் சொந்தம்; பிறன் உண்டு ருசி பார்த்த எச்சிற் கலத்தை நாயும் விரும்பமாட்டாது; உன் அழகுக்கும் அதிகாரத்துக்கும் நான் என்றும் வசப்படமாட்டேன்; நான் ஒரு உயர்குலப்பெண்; ஆகாயத்தில் அழகாய்ச் சந்திரன் பிரகாசித்து அனைவருக்கும் ஆனந்தத்தை



உண்டாக்கினால் முறைமைதவறி அதைக் கவர நினைப்பது நீதியாகுமா? 'அறம் புகழ் கேண்மை பெருமை இந்நான்கும் பிறன்றாரம் நச்சுவார்ச் சேரா. பிறன்றாரம் நச்சுவார்ச் சேரும் பகை பழி பாவமென் றச்சத் தோடின்னாற் பொருள்." என்பதை நினைந்துப் பார்" என்று நிர்ப்பயமாய்க் கூறினாள். இராவணனுக்கு அந்த நீதிகளில் ஒன்றும் பயன்படவில்லை. பிறகு பலாத்காரமாகச் சீதை இராவணனால் கொண்டுபோகப்பட்டாள். இராவணன் மகா கொடியவன். அவன் பெயரைக்கேட்கவும் குலப்பெண்கள் நடுங்குவார்கள். அசோகவனம் என்ற ஒரு பார்வைத் தோட்டத்தில் அநேகம் இராக்ஷஸப் பெண்களுக்கு நடுவில் சீதை காவலில் வைக்கப்பட்டாள். அந்தக்காலத்தில் இராக்ஷஸர்கள் மனிதர்களைக் கொன்று தின்று வந்தார்கள். இராவணன் எண்ணத்துக்கு இணங்காதிருக்கும் வரையில் சீதை என்றைக்காவது ஒரு நாள் இராக்ஷஸர்கள் பெருவயிற்றுக்கு உணவாக வேண்டியதுதான் என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆபத்து அவமானம் என்ற இரண்டும் சீதையை நாள்தோறும் நெருங்கிக்கொண்டு வந்தன. இப்படி ஒருநாளைப்போல ஒன்பது திங்கள் இராக்ஷஸர்களால் நெருக்கப்பட்டுச் சீதை வருந்தினாள். அவள் ஒரு முறை இராவணனுக்குக்கூறிய பதில் மிகவும் சிலாக்கியமானது.

இராவணன் ஒரு நாள் இரவு சீதையைக்காணவந்தான். அவன் அப்பொழுது செய்துகொண்டு வந்த அலங்காரம் சாதாரணமான பேதைப் பெண்களின் மனத்தை இளகச் செய்து அவன் வசப்படுத்துவது நிச்சயம். அழகு ஆண்மை குலம் கல்வி முதலியவற்றில் அவன் அதிகம்

புகழ்படைத்தவன். எப்படியாவது தன்னைக் காதலிக்க வேண்டும் என்று சீதையை வணங்கி வேண்டிக்கொண்டான். அதற்குச் சீதை ஆங்குக் கீழேகிடந்த ஒரு துரும்பை நோக்கித் "துஷ்டா! நான் உன்னை இந்தத் துரும்பளவும் மதிக்கவில்லை. உன் பணத்தாலும் பலத்தாலும் நீ எத்தனையோ அக்கிரமம் செய்திருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். நான் உயிரோடு இருக்குந்தனையும் உனக்கு என்றும் வசப்படமாட்டேன். குலப்பெண்களுக்கு உயிரைக் காட்டிலும் மானம் உயர்ந்தது. பரிசுத்தமான என்புகழுக்கு நீ ஒரு தூமகேதுவாகத் தோன்றினாய். பெண்கள் கற்பை வேண்டிய போழ்தெல்லாம் விடாயைத் தணிக்கின்ற இனிமையான குடி தண்ணீர்க் குளம் என்று நினைத்துவிட்டாய் போலும்; அந்தோ! உன் அறிவின்மைக்கு என்ன செய்வேன்? அது மிகவும் குளிர்ந்து காணப்படுகின்ற பரிசுத்தமான விஷத்தண்ணீர்ப் பொய்கை என்பதை மறந்து விட்டாய். கற்பென்பது பெண்களுக்குக் கவசம். எப்படிப்பட்ட திவ்வியாயுதங்களுக்கும் அதைப் பிளந்து செல்லும் சக்தி கிடையாது. சூரியன் சந்திரன் முதலிய கிரகங்களும், பிரமன் விஷ்ணு முதலிய தேவர்களும் அதன் ஆற்றலுக்கு முன் நிற்க மாட்டார்கள். நான் ஒன்பதுமாத காலமாக உன் வீட்டில் காவல் செய்யப்பட்டிருக்கிறேன். ஆதித்தனுடைய அற்புதமான கிரணங்களுக்கு முன்பு ஆகாயத்தில் உடுக்களையும் கிரகங்களையும் காணமுடியாததுபோல என் ஆருயிர்த் தலைவர்க்கு முன்பு நீ இருப்பதாகவே தெரியவில்லை. என் உயிர் ஸ்ரீராமர். என்னைக்கேவலம் ஒரு எளிய பெண்பிள்ளையாக நினைத்துவிடாதே; உன்னையும் உன்குலத்தையும் ஒரு நிமிஷத்தில் நானே சாம்பராக்கிவிடுவேன். ஏன் சுயம்வரகாலத்தில் எந்த வில் உன்னால்



தூக்கி நிறுத்தவும் முடியாமற் போய்விட்டதோ அந்த வில்லை நான் அதிபாலியத்தில் இடது கரத்தினால் எடுத்து வைத்திருக்கிறேன். யுத்தசாஸ்திரத்தில் எனக்கு நல்ல பயிற்சியுண்டு. இவ்வளவு இருந்தும் உன் வீட்டில் ஒன்பது மாதம் சிறையிலிருப்பதற்குக் காரணம் சத்தியம் தான். தண்டகவனத்தில் வாழும் மகரிஷிகள் வேண்டுகோளின் வண்ணம் உன்னையும் உன் குலத்தார்களையும் என் பிராண நாயகர் தான் கொல்வதாகச் சபதம் செய்திருக்கிறார். அந்த வாக்கியத்தை ஆதரிப்பதற்கு நான் பொறுமையைக் கைக்கொள்ளவேண்டியிருக்கின்றது. ஸ்ரீராமர் அல்லாமல் பிறரொருவர் உன்னைக் கொல்லப் பொறுக்கமாட்டேன். ஒருகால் அப்படி யுத்தம் நேர்ந்தால் நான் அவர்களோடு சண்டைசெய்து உன்னையும் உன் புத்திரர்களையும் காப்பாற்றுவேன். சீக்கிரத்திலேயே அவர் இங்கு வந்து உன்னை நாசம்செய்யப்போகிறார்." என்று வெகுகோபத்தோடு கூறினாள். இராவணன் அதனால் அவமானமும் கோபமும் அடைந்தவனாய் வீடுநோக்கிச் சென்றான்.

பின்பு சில நாளைக்கெல்லாம் ஸ்ரீராமர் வானரப்படைகளோடு இலங்கையை ஒரு மாதம் வரையில் முற்றுகையிட்டு இராவணன் முதலிய இராக்ஷஸர்களைக்கொன்று தன் சபதத்தை நிறைவேற்றினார். ஆனால், சீதையை அங்கீகரித்துக்கொள்ளவில்லை. சீதையின் கற்பில் சிறிது சந்தேகம் கொண்டுவிட்டார். அப்பொழுது சீதை அவரை நோக்கிப் "புருஷ சிங்கமே! நான் உயர்குலத்தில் உதித்தவள். பிரவேசித்த குலமும் அதற்குக் கீழ்மையானதன்று. இராவணன் வீட்டில் நான் பத்துத்திங்கள் இருந்ததனாலேயே நான் குற்றவாளியாகேன். என் மனம் மறுவற்றது. பெருங்

தன்மையான சுவபாவ முடையவர்களுக்கு அற்ப விஷயங்களில் மனம் செல்லமாட்டாது. தசரத சக்கிரவர்த்தியின் திருக்குமாரராய்த்தோன்றிய தாங்கள் இப்படி என்மீது சந்தேகம் கொள்வது மிகவும் ஆச்சரியம். இரும்புத்தூணைச் செல் அரிக்குமா? ஜ்வலித்துக்கொண்டிருக்கும் நெருப்பை எங்ஙனம் அழுக்கு மூடிக்கொள்ளும்? என் பரிசுத்த ஹ்ருதயம் ஸ்ரீராமருக்கன்றி மற்றொருவருக்கும் இளகி இடம் கொடுக்கமாட்டாது. பதிவிரதைகளின் இலக்ஷணத்தைத் தாங்கள் இன்னும் நன்றாய்த் தெரிந்துக் கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். நால்வர் தேவர்கள் நளனுருக் கொண்டு தன்னை ஏய்க்கவந்த காலத்திலும் தமயந்தி உண்மை நளனைத் தெரிந்துகொள்ளவில்லையா? கற்பின் வல்லமைக்கு முன்பு ஆதித்தனும் ஒளி மழுங்கி விடுவான். உலகத்தைப் பஸ்மம் செய்கின்ற அக்னியும் அவர்களுக்குக் குளிர்ந்த நீரோடையாக மாறிவிடும். சந்திரமதி அக்னியாற்றைக் கடந்து சென்றது இதற்குப் போதுமான சாக்ஷியாகும். வேண்டுமானால் நானும் தங்களுக்குச்செய்து காட்டுகிறேன். இனியேனும் அவர்கள் ஆற்றலை அறிந்து கொள்ளுங்கள்." என்று குழியில் தீவளர்க்கச் செய்து அதில் இறங்கிக் குளித்து எழுந்து வந்தாள். எவ்வளவு தைரியமும் கல்வியும் இடுக்கணழியாமையும் பரிசுத்த ஹ்ருதயமும் இருந்தால் இப்படிப் பேசியிருக்கலாம் என்பதை யோசித்துப் பாருங்கள். இவள் கீர்த்தி தற்காலத்தில் உள்ள ஒவ்வொரு பாஷையிலும் புஸ்தக ரூபமாக விளங்கி வருகின்றது.

---



## துரௌபதி.

இவள் சீதைக்கு வெகுகாலம் பின்பட்டவள். தக்ஷிண பாஞ்சாலத்தரசர் துருபதவேந்தர் புத்திரி. யாகத்திற்பிறந்தவள். தெய்வபலம் பொருந்தியவள். பிறக்கும் பொழுதே இவள் உடம்பிலிருந்து நீலோத்பல வாசனை கமகமவென்று வீசிக் கொண்டிருந்ததாக அந்தக் காலத்துப் பண்டிதர்கள் எழுதியிருக்கிறார்கள். கருமை நிறத்தோடு பிறந்ததனால் கிருஷ்ணை என்று பெயரிடப்பட்டது. நல்ல உயர்தரக் கட்டழகி. பெண்கள் குணம் அவ்வளவும் பொருந்தி விளங்கியவள். உண்மை நெறியிலும் கல்வியறிவிலும் உயர்ந்து நின்றவள். கடவுள் கட்டளையால் கிருஷ்ணை பருவகாலத்தில் தனக்கு ஐந்து நாயகர்களை அங்கீகரிக்கலாயிற்று. அந்தக் காலத்திலிருந்த மகர்ஷிகள் பலரும் அதற்கு அநுமதி கொடுத்தார்கள். ஒரு பெண் தனக்கு ஒன்றுக்கு மேற்பட்ட புருஷர்களை மணம் செய்துகொள்ளும் வழக்கமும் அக்காலத்தில் அருகி வழங்கி வந்ததுபோலும்; கிருஷ்ணையின் புருஷர்கள் அசாதாரணமானவர்கள். கல்வி கேள்விகளிலும் நீதி யொழுங்குகளிலும் அவர்கள் அனைவரையும் விஞ்சியிருந்தார்கள். அவர்கள் ஐவரும் பிராதாக்கள். யுதிஷ்டிரன் பீமன் அர்ச்சுனன் நகுலன் சகதேவன் என்று அவர்களுக்குப் பெயர். சந்திர வம்சத்து ஜ்யேஷ்ட சந்ததியிற்பிறந்த பாண்டு மகாராஜாவின் புத்திரர்கள். மகாவியா ப்கராகிய பீஷ்மர் அவர்களுக்குப் பாட்டனார். தற்காலத்தில் டெல்லி என்று வழங்குகின்ற இந்திரப் பிரஸ்தம் அவர்களுக்கு ராஜதானியாயிருந்தது. எவராலும் செய்திருக்க முடியாத ராஜசூயம் என்னும் அரியயாகத்தைப் பாண்டவர்

கள் இந்திரப்பிரஸ்தத்தில் அழகாய்ச் செய்து முடித்தார்கள். பலசாலிகளும் சூரர்களுமாகிய அந்தப் பிராதாக்களை நாயகர்களாகப் பெற்றும் துரௌபதிக்குச் சௌக்கியம் சொந்தமாயிருக்கவில்லை. துக்கக்காற்று அவள் மீது அடிக்கடி வீசியடித்துக் கொண்டேயிருந்தது. கல்வியிலாவது அழகிலாவது ஒழுக்கத்திலாவது அவளை வெல்கின்றவர் ஒருவரும் இல்லை. எப்படிப்பட்ட உயர்ந்த சபையாயிருந்தாலும் அவசியம் நேர்ந்தால் நிர்ப்பயமாய்ச் சென்று வாதிக்கத்தகுந்த அற்புத சக்தியை அடைந்திருந்தாள்.

ஒரு சமயம் அஸ்தினபுரத்தில் சூதாட்டத்தின் முன்னிலையில் யுதிஷ்டிரர் தனக்குச் சொந்தமான எல்லாவற்றையும் பந்தயம் வைத்துத் தோற்றுவிட்டார். உடன்பிறந்தவர் நால்வர், மனைவி கிருஷ்ணை ஆகிய ஐவரும்கூட அவ்வாட்டத்தில் தோற்கப்பட்டார்கள். நெடுநாள்களாய்த் துரௌபதியை அடைய வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்த ஹஸ்தினபுரிக் கரசனாகிய துரியோதனன் தற்செயலாய்க் கிடைத்த அந்த நற்சமயத்தை வீணாக்கிக் கொள்வதற்கு விரும்பவில்லை. அந்தப்புரத்தில் இருந்த கிருஷ்ணையை அந்தச் சபைக்கு அழைத்து வரும் வண்ணம் தன் தம்பி துச்சாதனனை அனுப்பினான். நிர்நிமித்தமாய்த் தனக்கு நேரிட்ட அந்த ஆபத்துக்குத் துரௌபதி கொஞ்சமும் அஞ்சாமல் உடனே இராஜ சபைக்கு வந்து நிர்லக்ஷ்யமாய் அனைவரையும் நோக்கிப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினாள்.

“சபையோர்களே! உலகில் தருமத்தை நிறுத்துவது அரசன் தொழில். மந்திரிகள் மதம்கொண்ட யானையை அதன் மனம் போனபடி விடாமல் அடக்கித்திருப்பும் பாக



னையும் அங்குசத்தையும் போன்றவர்கள். இதில் தவறுகின்றவர்களுக்குக் கடவுள் தண்டனை தவறமாட்டாது. என் வழக்கைக் கேளுங்கள். யுதிஷ்டிர மன்னவர் சூதாட்டத்தில் முதலில் அடிமைகளைத் தோற்றார். பின்பு தன்னையும் தம்பிமார்களையும் தோற்றார். கடைசியில் என்னை வைத்துத் தோற்றார். தன் சுவதந்திரத்தை இழந்து பிறனுக்கு அடிமையான பின்பு என்னை எங்ஙனம் வைத்துத் தோற்கலாம்? அன்றித், தன்னையும் தன் பிராதாக்களையும் வைத்துத் தோற்று விட்டதனாலேயே ‘புருஷனுக்கு அவன் மனைவி வேறன்று. அதனால், நீ அடிமைதான்’ என்று சொல்வீர்களானால், என்னை வேறு படுத்தி மற்றொரு ஆட்டம் ஆடவேண்டியது அநாவசியமாகின்றது. யோசித்துப் பார்த்தால் எவ்விதத்திலும் நான் அடிமையல்லேன். தாங்கள் தருமத்தைப் பரிசீலனை செய்து தீர்ப்புச் சொல்லுங்கள்.” என்று கூறினாள். நியாயசாஸ்திர நிபுணர்களாகிய பீஷ்மர் துரோணர் கிருபர் அசுவத்தாமர் விதுரர் முதலிய பெரியோர்கள் இருந்தும் அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. சபை அடங்கலும் மௌனமாயிருந்துவிட்டது. துரியோதனன் நியாயத்தினால் துரௌபதியை அடிமை கொள்ள முடியாமற்போனாலும் தன் அதிகாரத்தினால் அடிமை! அடிமை!! என்றே கூவினான். ‘அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்’ என்றபடி சிலர் அவன் வசனத்தையும் அங்கீகரித்தார்கள். பின்பு அடிமைகளுக்குத் தகுதியான ஆடையை அணிந்துகொள்ளும்படி துரியோதனன் கட்டளையிட்டான். தான் அடிமையல்லாத பொழுது அவர்கள் ஆடையை அங்கீகரிக்க முடியாதென்று கிருஷ்ணை அந்த உத்தரவை நிராகரித்துவிட்டாள். குற்றமே வடிவமான துரியோதனன் அதை எப்படிப் பொறுக்க முடியும்?

உடனே அவள் ஆடையைக் களைந்து விடும்படி துச்சாசனனுக்கு உத்தரவு செய்தான். அப்பொழுது துரௌபதி “துஷ்டவரசனே! இராஜ சபையில் குலப் பெண்களின் ஆடையைக் களைந்து விடுவது தருமமன்று. வெட்கம் கெட்ட வேசைகளும் இதைச் செய்துகொள்ள ஒப்பமாட்டார்கள். நியாயத்துக்கு நான் கட்டுப்படுகிறேன். இதோ அனைவரும் இருக்கிறார்கள். எந்த நீதியினால் என்னை அடிமையாக்கிக் கொண்டாய்? அதைச் சொல். அவர்கள் பதில் சொல்லட்டும். குலப் பெண்களின் மானம் உனக்கு அவ்வளவு எளியதாகமாட்டாது. உன் வீண் மிரட்டல்களுக்கு நான் எவ்வளவும் பயப்படமாட்டேன். சபை அடங்கலும் நமக்காகவே பேசும் என்று நினைத்துக் கொண்டு விட்டாய் போலும்; அந்தோ! கதிரவனைக் கையால் மறைக்கப் பார்க்கிறாய்; உலகம் நிலை பெற்று விளங்குவது என்றும் அரசனாலன்று. “வானம் பொய்யாது, வளம் பிழைப்பறியாது, நீணில வேந்தன் கொற்றம் சிதையாது, பத்தினிப் பெண்டிர் இருந்த நாடென்னும் அத்தகு நல்லுரை அறியாயோ நீ” என் மானம் காத்துக்கொள்ளும் சத்தியை எனக்குக் கடவுள் கொடுத்திருக்கிறார். என்றும் என் மானம் உன்னால் அழிக்கப்பட மாட்டாது. ஏன் வீண் சிரமம் எடுத்துக்கொள்கிறாய்? உலகத்தை நன்னிலைமையில் நிறுத்திப் பாதுகாத்து வருகின்ற கற்பரசிகளுக்குத் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் சத்தி இல்லாமற் போய்விடுமா? உன் நன்மையை நாடி இவ்வளவும் எடுத்துச் சொன்னேனேயன்றி வேறன்று. ‘தான் கெடினும் தக்கார் கேடு எண்ணற்க இது பழமொழி. இனி உன் இஷ்டம்” என்று நிறுத்தினாள். என்ன சொல்லியும் என்ன? துரியோதனன் தன் கட்டளையை மாற்றவேயில்லை. உடனே துச்சா



சனன் துரௌபதியின் மேலாடையை அவிழ்க்கத் தொடங்கிவிட்டான். அப்பொழுது என்ன நடந்தது தெரியுமா? என்றும் எவரும் எதிர்பாராத விதமாய்த் துரௌபதியின் உடம்பிலிருந்து விதம் விதமான வஸ்திரங்கள் வளர்ந்து கொண்டேயிருந்தன. அவிழ்த்தெறிந்த வஸ்திரங்கள் மலையைப்போலச் சபையில் குவிக்கப்பட்டன. அவனால் அப்புறம் அவள் ஆடையை அவிழ்த்தெறிய முடியாமலே போய்விட்டது. துரியோதனன் இராஜ சபையில் ஒரு பெண்பிள்ளையினால் தன் கட்டளை அவமான மடைந்ததற்குப் பெரிதும் வருந்தி வெட்கமுற்றான். கிருஷ்ணை அப்பொழுதும் விடாமல், “அரசனே! ஏன் தரையை நோக்கிய வண்ணம் குனிந்துகொண்டிருக்கிறாய்? வெட்கப்படவேண்டாம்; உன்கட்டளை எவ்வளவு தூரம் நிறைவேறியிருக்கின்றதென்று என்னை நிமிர்ந்துபார்! உன்போன்ற மூடர்களின் கோபமும் கட்டளையும் குலப்பெண்களை ஒன்றும் செய்யமாட்டாதென்பதை அறிந்து கொண்டாயா? அந்தோ! பாபம்! பதிவிரதைகளின் கோபத்தை நீ என்றும் பார்த்தது கிடையாது. என் கோபம் உன்னை இந்த நிமிஷத்திலேயே இவ்வுலகத்தை விட்டு நீக்கிவிடும். அதைமாற்ற ஒருவராலும் முடியாது. ஆனால், நான் இப்பொழுது கோபம்கொள்ளவில்லை. இனிப் பெண்களிடத்தில் மரியாதையாய் நடந்துகொள்”? இந்த அவமானம் உனக்குப் போதுமானது.” என்று அவன் மனம் உளையும் வண்ணம் கூறினாள்.

பின்பு அவள் நாயகர்கள் துரியோதனனோடு செய்துகொண்ட ஒருவித உடம்படிக்கையினால் கிருஷ்ணையை அழைத்துக்கொண்டு வனத்துக்குச் சென்றார்கள். அகண்ட பூமண்டலங்களும் அரை நிமிஷத்தில் அநியாயமாய்

அகன்று கழிந்ததற்கு அந்த உண்மை நாயகி தன் தலைவர்களை ஒரு பொழுதும் வெறுத்துக் கூறவில்லை. வனவாசத்தில் அவள் அடைந்த சிரமம் மிகுதி. கஷ்டங்கள் அத்தனையும் கிருஷ்ணைக்குப் புகழ்வடிவமாயின. திரௌபதி தன் காட்டுவாழ்க்கையிலும் பன்னீராயிரம் அந்தணர்களுக்கு அன்னம் படைத்துக்கொண்டு வந்தாள். சூரியனால் கிடைக்கப்பெற்ற ஒருவகைப்பாத்திரம் அதிதிபூஜை செய்வதற்கு அங்ஙனம் அநுகூலமாயிற்று. தன் நாயகர்களை ஒழிப்பதற்கென்று துரியோதனனால் உண்டுபண்ணப்பட்ட ஆபத்துக்கள் அவ்வளவையும் கிருஷ்ணை மிகுந்த சாமர்த்தியத்துடன் பலதடவைகளிலும் நீக்கிக்கொண்டு விட்டாள்.

பின்பு குருக்ஷேத்திரம் என்றவிடத்தில் அந்த உண்மைப் பிராதாக்கள் பாகத்துக்காகத் துரியோதனனுடன் சண்டைசெய்யத் தொடங்கினார்கள். அது நம் இந்தியாவில் எப்பொழுதும் நடந்திருக்கமுடியாத ஒரு பெரும் போர். ஆயுதபாணிகளான வீரர்கள் பலரும் அந்த யுத்த களத்தை அலங்கரித்தார்கள். இரவும் பகலும் ஓயாமல் அந்தப் பெருஞ்சண்டை பதினெட்டுநாள் நடந்தது. அப்பொழுது நடந்துகொண்ட துரௌபதியின் ஒழுக்கம் மிகவும் வியக்கக் கூடியது. ரணகளத்தில் படுகாயமடைந்த ஒவ்வொரு வீரனையும் தான் நேரில் கண்டு காயம் கட்டி உற்சாக மூட்டி வருவாள். காயம் பட்டவர்களுக்கு உணவு முதலியவற்றைத் தானே பக்குவப்படுத்தி எடுத்துக்கொண்டு சென்று இன் சொல்லோடு அவர்களை உண்பிப்பாள். தன் நாயகர்களுக்கு ஆயுதங்களைத் திருத்திக்கொடுத்தும், அவர்களுக்கு யுத்தகோலம் செய்தும், அவர்கள் வீரச்செயலைப் புகழ்ந்தும், காலையில் சண்டைக்கு அனுப்புவாள். அவர்கள் யுத்தம்



செய்து திரும்பிவருகையில் எதிர் சென்று கவசங்களை அவிழ்த்தும் வில் அம்புப் புட்டில் வாள் முதலியவற்றை வாங்கிக்கொண்டும் யுத்த தந்திரங்களை விசாரித்தும், அடுத்தநாள் ஆகவேண்டிய காரியங்களுக்கு ஆலோசனை சொல்லியும் சந்தோஷப்படுத்துவாள். தன் வயிற்றிற்பிறந்த ஐந்து மக்களும் அந்தச் சண்டையில் இறந்துவிட்டார்கள். அதற்குக் கிருஷ்ணை கொஞ்சமும் கண்ணீர் வடிக்கவில்லை. யுத்தவீரர்களில் ஒருவர் அவள் மக்கள் இறந்ததற்கு வருந்தி உபசாரம் கூற வந்ததற்கு "ஐயா! என் மக்கள்பொருட்டு எனக்குக் கொஞ்சமும் துக்கம் தோன்றவில்லை. எங்கள் பொருட்டுச் சண்டையில் தங்கள் உயிரைக்கொடுத்து வீரசுவர்க்கம் சென்ற வீர புருஷர்களைக் காட்டிலும் சுவயநயத்துக்கு உயிரைத்துறந்த என் மக்கள் எங்ஙனம் உயர்ந்தவர் ஆவார்கள்?" என்று பதிலளித்தாள். புன்சிரிப்போடு கூடிய அவள் முகம் எவ்வளவு ரணத்தையும் எளிதில் ஆற்றும் வல்லமை பொருந்தியிருந்தது. காயமடைந்தவர்கள் நினைக்கும் பொழுதெல்லாம் கடவுள்போல அவர்கள் கண்முன் தோன்றுவாள். விடாமுயற்சியும் ஊக்கமும் அவளிடம் குடிகொண்டிருந்தன. அந்தச் சண்டையில் அவள் நாயகர்களே ஜயம் பெற்று இராஜ்யத்தை அடைந்தார்கள். குடும்ப நிர்வாகத்தில் கிருஷ்ணையின் சாமர்த்தியம் அகோசரமானது. கிருஷ்ணமூர்த்தியின் மனைவி சத்தியபாமைக்குக் குடும்பம் நடத்தும் விதத்தைப்பற்றி இவள் உபதேசம் செய்த ஒழுங்குகளைப் பாரதம் வனபருவத்தில் விளங்கக்காணலாம்.

## ஸுஜாதை.

சுத்தோதனர் புத்திரராகிய கௌதம புத்தர் அரசைத் துறந்து நெடுநாள் வரையில் அரண்யத்தில் அலைந்து திரிந்தும் அவருக்கு உண்மை ஞானம் உதயமாகவில்லை. அப்பொழுது பாகீரதி நதிக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்துக்கு வெளியில் அவர் மிகுந்த பசியினால் களைப்புடன் உட்கார்ந்திருந்தார். அந்தக் கிராமத்தில் பெருஞ் செல்வமுள்ள ஒரு பிரபு இருந்தார். அவருடைய அன்புள்ள மனைவியின் பெயர் ஸுஜாதை. அவள் தன் ரூபலாவண்யத்தினாலும் கல்வியொழுக்கங்களினாலும் அந்தப்பிரபுவைக் களிக்கச் செய்து வந்தாள். மலர்ந்த முகம், அலர்ந்தவிழி, இனிய வசனம் இவைகள் எப்பொழுதும் அவளை அலங்கரித்துக் கொண்டிருந்தன. மறந்தும் பொய் பேசியறியாள். "பொன்னுடையரேனும் புகழுடையரேனும் மற்றென்னுடையரேனும் உடையரோ? இன்னடிசில் புக்களையும் தாமரைக் கைப் பூநாறும் செய்யவாய் மக்களை இங்கில்லாதவர்." என்றபடி புத்திரனில்லாத குறை ஒன்று அந்தக் கற்பரசியின் உள்ளத்தை அரித்துக்கொண்டிருந்தது. அறுதியில், சிலபெரியவர்கள் கட்டளையின் வண்ணம் தனக்குப் புத்திரன் பிறந்தால் பொற்றட்டில் அன்னத்தோடு பாலும் பலகாரமும் காயும் கனியும் கலந்த அன்னத்தை வனதேவதையுள்ள ஒருமரத்தடியில் கொண்டுபோய்ப் படைப்பதாகப் பிரார்த்தனை செய்துகொண்டாள். அந்தவருஷத்திலேயே கடவுள் கருணையினால் சுஜாதைக்கு ஒரு ஆண் குழந்தை உதயமாயிற்று. பிரார்த்தனையை நிறைவேற்றுவதற்காகப் பின்பொருநாள் தன் சேடியை வனதே



வதை விற்றிருக்கின்ற மரத்தடியைச்சுத்தம் செய்து வருவதற்கு அனுப்பினாள், சேடி மரத்தடியை அடைந்ததும் ஆங்கு திவ்விய சுந்தரத்தோடு அதிகம்பீரமாய் உட்கார்ந்திருந்த கௌதமபுத்தரை வனதேவதையென்று நிச்சயஞ்செய்துகொண்டு யஜமானியிடத்தில் வனதேவதை பிரத்தியக்ஷமாய் எழுந்தருளியிருக்கின்ற விதத்தைத் தெரியப்படுத்தினாள். சுஜாதை மனமகிழ்ந்து தானும் கௌதமபுத்தரை வனதேவதை என்றே தீர்மானித்து அன்புடன் அன்னமூட்டினாள். கௌதமருக்குக் கொஞ்சம் களை தீர்ந்ததும் சுஜாதையை நோக்கி "அம்மா! நான் வனதேவதையன்று; உங்களைப்போன்ற மிகவும் சாதாரணமான மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவன், சில வருஷங்களாய் நல்ல வழியைத் தெரிந்துகொள்ள நினைந்து காட்டில் அலைந்து திரிகிறேன்" என்றார்.

சுஜாதை "ஐயா! 'நன்மைவிதைத்தால் நன்மை விளையும்' மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் என்னால் இதுகாறும் செய்யப்பட்ட வனைத்தும் நன்மைகள் தாம். "இன்சொல்விளை நிலனா, ஈதலேவித்தாக, வன்சொற்களை கட்டு, வாய்மை எருவட்டி, அன்பு நீர்ப்பாய்ச்சி, அறக்கதிர் ஈனவோர் பைங்கூழ்சிறுகாலைச் செய்" என்ற வாக்கியத்தை நான் என்றும் மறக்கவில்லை. இந்தப்பயிர் இப்பொழுதே விளைந்து எனக்குப் பலன் தராவிட்டாலும் மறுமையிலாவது பலன் தருவது நிச்சயம். என் குழந்தையை நான் பார்த்து வருவது போலவே ஜீவவர்க்கங்களையும் காண்கிறேன். இதனால் கடவுள் பார்வையும் என்மீது அன்புகொண்டதாயிருக்கும் என்பது நிச்சயம். இங்கு எனக்குக் கிடைக்கின்ற சுக துக்கங்கள் அனைத்தும் கடவுளால் அனுப்பப்பட்ட என்

வினைப்பலன்கள் தாம். அதனால் மரணத்துக்கும் நான் பயப்படவேண்டிய நிமித்தம் இல்லை. எது நடந்தாலும் எனக்குச் சந்தோஷம்தான். இந்த ஒழுங்குகள் தங்கள் மனதுக்குத் திருப்தியாயிருந்தால் தாங்களும் அநுசரிக்கலாம்" என்று நிதானமாய்க் கூறினாள்.

கௌதமர் "அம்மா! சுகத்தைக்கண்டறியும் மார்க்கம் உமக்கு சொந்தமாய்விட்டது. மனச்சமாதானம் எவற்றிலும் உயர்ந்தது. மனோலயம் மோக்ஷமும் மனோதுக்கம் நரகமும் என்பது சாதுக்கள் கொள்கை. நன்மையைக் கடைப்பிடித்து மரணத்துக்கு அஞ்சாதபொழுதே நீங்கள் சுகமடைந்தவர்களாய் விட்டீர்கள்." என்று கூறினர். சுஜாதை அவரிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டுக்குத்திரும்பவும் கௌதமர் ஆங்கு ஒரு அரசமரத்தின் கீழ் உட்கார்ந்து அந்தப் பதிவிரதையின் பரிசுத்த வாக்கியங்களை ஒருவாரம் சிந்தித்துக் கொண்டிருக்க அவருக்குப் பூரண ஞானோதயம் உண்டாயிற்று. அன்று முதல் கௌதமர் புத்தராயினர்.

---

## யசோதரா.

இவர் முன்பு கபிலவஸ்து என்னும் பட்டணத்தில் இருக்கும் பொழுது இல்லறத்தை மேற்கொண்டிருந்தார். இவர் மனைவிக்கு யசோதரா என்று பெயர். அந்தப்பெண்ணரசி அழகிலும் குணத்திலும் நிகரற்று விளங்கியதற்கு அதிகமாகக் கல்வியிலும் அசாமான்யையாயிருந்தாள். தன் கணவன் விரக்தி மார்க்கத்தைத் தழுவி உண்மை நெறியறி



ந்து புத்தரானபிறகு தன் மகன் ராகுலனை அழைத்துக்கொண்டு தானும் அந்தமதத்தைத் தழுவிச் சந்நியாசினியாயினள். பின்பு யசோதரா காஸ்மீரம் முதலிய விடங்களுக்குச் சென்று பிரஸங்கித்துத் தன் சொல்வன்மையினால் அந்தத் தேசத்தவர்களையெல்லாம் புத்தமதத்தை தழுவச்செய்துகொண்டு மிகவும் பிரஸித்தி பெற்று விளங்கினள். யசோதரா 'மகா பண்டிதர்களும் மூக்கின்மீது விரல் வைத்துத் திகைத்து நிற்கும் வண்ணம் விஷயங்களை மிகத்தெளிவாய் எடுத்துப் பிரசங்கிக்கும் அற்புத சக்தியை அடைந்திருந்தாள்' என்று அந்தக்காலத்துப் புலவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

அசோக மகாராஜர் பௌத்தமதம் உலகத்தில் பரவுவதற்கு எடுத்துக்கொண்ட சிரமம் மிகுதி. இவர் நன்முயற்சியினால்தான் இந்தியா, சீனா, திபேத், பர்மா, இலங்கை முதலிய விடங்களில் அந்த மதம் செழித்தோங்கி வளர்ந்து வந்தது. புத்தமதத்தைப் பரவச்செய்தவர்களிற் பெரும்பாலாரும் பெண் மக்கள் தாம். அந்தக்காலத்துப் பெண்கள் தேசங்கள்தோறும் சென்று பிரசங்கித்துப் புத்தமதத்தைப் பரவச்செய்தார்கள். இவர்கள் அனைவரும் சந்நியாசினிகள். புத்தஸங்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் அசோகமகாராஜர் சகோதரி ஸங்கமித்திரா என்பவள் சமுத்திர யாத்திரை செய்து இலங்கைத் தீவுக்குச் சென்று பிரசங்கித்து அனைவரையும் பௌத்தர்களாக்கினள். இன்னும் இலங்கைத் தீவில் ஸங்கமித்திரா தெய்வத்தோடொப்பக் கொண்டாடப்பட்டுவருகிறாள். அந்தக்காலத்தில் ஆண்மக்களைக் காட்டிலும் பெண்மக்கள் எல்லா விதத்திலும் மேன்மை பெற்று விளங்கி வந்தார்கள். இவர்கள் புகுந்து அலங்கரிக்காத

சபைகள் ஒன்றும் இருக்கமாட்டாது. எந்த விஷயமானாலும் எந்தச் சாஸ்திரமானாலும் இவர்கள் தலையிட்டுத் தெரிந்து கொள்ளாதிருக்க மாட்டார்கள். இராஜாக்களும் பண்டிதைகளைக் கவுரவப்படுத்தி வந்தார்கள். சபைகளும் சங்கங்களும் அவர்களை மேலும் மேலும் படித்தறிந்துகொள்ளும் வண்ணம் உற்சாக மூட்டிவந்தன.

---

## கானா.

---

அசோகராஜாவுக்குப் பிறகு அநேக வம்சத்தரசர்கள் சிற்சிலகாலம் உன்னத தசையிலிருந்து இந்தியாவைப் பரிபாலித்து வந்தார்கள். இவர்களில் குப்தவம்சம் ஒன்று. இந்த வம்சத்தில் ஏகச்சக்கிராதிபதியாயிருந்து பெரும் புகழ்வாய்த்து அரசுபுரிந்தவர்களில் முக்கியமானவர் விக்கிரமாதித்யர். இவர் மிகுந்த கல்விமான். இவர்காலத்தில் நவரத்தினங்கள் என்ற ஒன்பது பெரும் புலவர்கள் இராஜசபையை அலங்கரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் வராகர் என்பவர் ஒருவர். அவர் ஒரு பெயர் பெற்றவான சாஸ்திரி. அவருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அது உலகத்தில் பத்து வருஷகாலம்தான் ஜீவித்திருக்கும் என்று நாழிகைத்தவறுதலால் அவர் ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் கண்டறிந்தார். அதனால் அந்தக் குழந்தையின்மீது அவருக்கு வெறுப்புண்டாய் விட்டது. 'பத்து வருஷம் வளர்ந்து அதிக துக்கம் உண்டாக்குவதைக் காட்டிலும் இப்பொழுதே அதைத் துறந்துவிடுவதுமேல்' என்று நினைத்துக் குழந்தையை ஒரு பெட்டியிலிட்டு அடையாளம் செய்து ஆற்றில் மிதக்கவிட்டு விட்டார். அந்தப்பெட்டி ஆற்றில் மிதந்துகொண்டு கொஞ்சதூரம் சென்றதும் ஆற்றுத்தண்ணீர் திரட்டவந்த சிலராக்ஷஸப் பெண்கள் குழந்தையை எடுத்துக்கொண்டார்கள். மிஹிர் என்ற பெயரோடு இராக்ஷஸர்கள் வீட்டில் அந்தக் குழந்தை வளர்ந்து வந்தது. இராக்ஷஸர்களுக்கு ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் மிகுந்த பயிற்சி யிருந்ததனால் மிஹிரும் அந்தச் சாஸ்திரத்தைக் கற்றுக்கொண்டு வந்தான். அந்தக்கிராமத்திலேயே கானாவென்ற ஒரு பெண்பிள்ளையும் அழகாய் வளர்ந்து ஜ்யோதிஷத்தில் அதிமேதாவியாய் விளங்கினாள். அவளும் இராக்ஷஸர்களால் ஆற்றில் கண்டெடுக்கப் பட்டவள்தான். அவளுக்கும் தாய் தந்தைகள் இன்னாரென்று தெரிய மாட்டாது. அவளுக்கு ஞாபக சக்தியும் விடாப்பிடியும் அதிகம். ஜ்யோதிஷத்தில் அரியபெரிய விஷயங்களையெல்லாம் தன் வளர்ப்புத் தந்தையிடம் அவள் வெகு சுலபமாய்த் தெரிந்து கொண்டிருந்தாள். கானாவுக்கு மணப்பருவம் தலையெடுக்கவே இராக்ஷஸர்கள் அவளை மிஹிருக்கு விவாஹம் செய்து கொடுத்தார்கள். சிலநாள் அந்தத் தம்பதிகள் இராக்ஷஸர்களின் கிராமத்திலேயே வாசம் செய்து வந்தார்கள். பின்பு தங்கள் ஆரிய ஜனங்களைக் காண உத்தரவு கொடுக்க வேண்டுமென்று ஒருநாள் அவர்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். இராக்ஷஸர்கள் உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்க இவர்களால் ஜ்யோதிஷ சாஸ்திரம் விரும்பப்பட்டது. அவர்கள் அவ்வண்ணமே சாஸ்திரங்களை ஒரு இராக்ஷஸப் பெண்ணின் தலையிற் சுமர்த்தி "ஜ்யோதிஷத்தில் இவர்கள் வியாபகர்களா யிருந்தால் புஸ்தகங்களை எடுத்து வந்துவிடு. அன்றிக் குறைந்திருந்தால் கொடுத்து விட்டு வா;" என்று கட்டளையிட்டு அனுப்பி விட்டார்கள். அங்ஙனமே மூவரும் காட்டைக் கடந்து ஆரியர்கள் குடியேறியிருந்த ஆரியாவர்த்தம் என்ற நாட்டை அடைந்ததும்

இராக்ஷஸப் பெண் அப்பொழுது கன்றுபோடும் தறுவாயிலிருந்த ஒரு பசுவை மிஹிருக்குக் காட்டி 'இந்தப் பசுவின் கன்று என்ன நிறமாயிருக்கும்' என்று கேட்டாள். மிஹிர் 'வெள்ளைநிறம்' என்று பதில் சொன்னான். அடுத்த நிமிஷத்தில் அந்தப் பசு ஒரு கருப்புக்கன்றை ஈன்றது. இராக்ஷஸப் பெண் 'உனக்கு இன்னும் ஜ்யோதிஷம் சித்திக்கவில்லை. புஸ்தகங்கள் உனக்கு அவசியம் தான்' என்று தான் கொண்டுவந்திருந்த சாஸ்திரங்களை மிஹிர்கையில் கொடுத்து விடைபெற்றுச் சென்றாள். அவள் பிரிந்து சென்றவிடம் ஒரு ஆற்றங்கரை. அத்தனை நாள் வருந்திக்கற்றும் ஜ்யோதிஷத்தைச் சரியாய்த் தெரிந்து கொள்ள முடியவில்லையே யென்ற துக்கத்தினால் மிஹிர் வெறுப்படைந்து அந்த அருமையான புஸ்தகங்களை அநியாயமாக ஆற்றில் எறிந்து விட்டான். கானா திடுக்கிட்டுக் கணமும் தாழ்க்காமல் உடனே ஆற்றில் குதித்துத் தன் சாகஸத்தினால் அவற்றில் இரண்டு புஸ்தகங்களை எடுத்துக் கொண்டு கரையேறினாள். ஆற்றில் அடித்துக்கொண்டு போன புஸ்தகங்கள்தாம் பூமிசம்பந்தமான சாஸ்திரங்கள் என்று சொல்கிறார்கள். பின்பு கானாவும் மிஹிரும் அந்த இரண்டு புஸ்தகங்களுடன் விக்கிரமாதித்ய ராஜ்யத்தை அடைந்தார்கள். அப்புறம் வராகருக்கு மிஹிரைத் தன் புத்திரன் என்று தெரிந்துகொள்ள நாழிகை செல்லவில்லை. மகளையும் மருகியையும் அன்போடு தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு விட்டார்.

பின்பு ஒரு நாள் இராஜசபையில் 'வானத்தில் உள்ள நக்ஷத்திரங்களைக் கணக்கிட்டுச் சொல்ல முடியுமா' என்ற வினா உண்டாயிற்று. அதற்கு அனைவரும் வராஹர்தாம் அறிந்து சொல்லக்கூடும் என்றார்கள். அரசன் அவரைக்



கேட்க அவர் ஒன்றும் சொல்லாது வீட்டுக்குத் திரும்பி விசனமாய் உட்கார்ந்திருந்தார். ஜ்யோதிஷ சாஸ்திரத்தினால் தன் மாமனார் விசனத்துக்குக் காரணம் தெரிந்து கொண்ட கானா அவரிடம் சென்று "அன்புள்ள ஐயா! அரசன் வினாவுக்குத் தாங்கள் இப்பொழுதே சென்று விடை கூறிவிடுங்கள். நக்ஷத்திரங்களின் தொகையை இந்த விதம் கணக்கிட்டால் சுலபமாய்க் கண்டு பிடிக்கலாம்" என்று அவற்றின் விவரங்களையும் விடையையும் எடுத்துக் கூறினாள். வராஹர் தன் மருமகளுக்குக் கிடைத்திருக்கும் அற்புத சாமர்த்தியத்துக்கு வியந்து அவள் படித்த சாஸ்திரங்களைத் தெரிந்து தான் கேட்டும் இருக்காத அவற்றின் மஹிமையைப் புகழ்ந்து கொண்டாடினார். கானா தான் ஆற்றில் முழுகி எடுத்துவந்த சாஸ்திரங்களை அவரிடம் கொடுத்து மிஹிர் ஆற்றில் போக்கிய சாஸ்திரங்களையும் அவற்றின் பெருமையையும் அறியக்கூறினாள். வராகர் அப்பொழுது அடைந்த சந்தோஷத்தைச்சொல்லவும் வேண்டுமா? கானாவைத் தன் குடும்பத்துக்குக் குலதேவதையாகவே கருதிப் புகழ்ந்தார். மற்றை நாள் இராஜசபையில் நட்சத்திரக் கணக்கு விக்கிரமாதித்ய வேந்தனுக்குத் தெளியக் கூறப்பட்டது. அரசன் ஆச்சரியமடைந்து "பண்டிதரே! இதைத் தாங்கள் தெரிந்துகொண்ட தெப்படி? கேட்க விரும்புகிறேன்" என்றான். பொய்சொல்வது கெட்டவழக்கம் என்பதைத் தெரிந்தவராகர் அது கிடைத்த விதத்தை விவரமாய்க் கூறினார். அரசன் அதைக்கேட்டதும் ஆச்சரியமடைந்தவனாய்ப் "பண்டிதரே! தங்களுக்குத் தெரியாத ரகஸ்யங்களை யெல்லாம் நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கின்ற தங்கள் மருமகளைத் தாங்கள் நாளை இராஜ சபைக்கு அழைத்துவர விரும்புகிறேன். இந்தப் பட்டணத்

தில் அவ்வளவு பண்டிதர்கள் தங்கியிருக்கப் பெற்றது என் பாக்கிய விசேஷம்தான். அவர்களுக்கு மரியாதை செய்வது எனக்கு முதற்கடமை" என்றான். வராகருக்கு அரசன் வசனத்தில் சந்தோஷம் கிடையாது. மருமகளை •இராஜ சபைக்கு அழைத்துக் கொண்டு செல்வதற்கு அவர் மனம் ஒப்பவில்லை. அதைத்தன் குடும்பத்துக்கு ஒருபெரிய அவமானம் என்றே நினைத்துவிட்டார். அரிய விஷயங்களை எளிதிற் சொல்லித் தனக்குப் புகழ் உண்டாக்கிய மருமகளைக் கௌரவிப்பதற்குப் பதிலாக அவர் மனத்தில் வெறுக்கத் தலைப்பட்டார். முடிவில் கானாவைத்தன் புகழ்விளக்கை அணைக்கப் பிறந்த ஒரு பெருங்காற் றென்றே தீர்மானித்து விட்டார். வீட்டுக்குச் சென்றதும் கானா அவர் எதிரில்வந்து பணிந்து, "புகழ்மிக்க ஐயா! தாங்கள் ஒன்றுக்கும் சிந்திக்கவேண்டாம். தங்கள் உத்தேசத்தின்வண்ணமே இதோ வாளும் கொண்டுவந் திருக்கிறேன். நக்ஷத்திர கணிதத்தைத் தங்களுக்கு எடுத்துச் சொல்லும் பொழுதே அதன் வெகுமதி என் நா துண்டிக்கப் படுவதுதான் என்று எனக்குத்தெரியும். அதன் மூலமாய்த்தான் எனக்கு மரணம். நான் மரணத்துக்குக் கொஞ்சமும் அஞ்சவில்லை. என் நாவைத் துண்டிப்பது போலவே என் சாஸ்திரங்களையும் துண்டித்துவிடாமல் விருத்திசெய்ய வேண்டிக் கொள்ளுகிறேன். இதுதான் மரணகாலத்தில் என்னால் கேட்டுக் கொள்ளப்படும் உயர்ந்த வரம். இந்த வரத்தைத் தாங்கள் தடையின்றிக் கொடுப்பீர்கள் என்பதும் எனக்குத் தெரிந்ததுதான்." என்று அவற்றை விருத்திசெய்யும் வழிகளையும் அவருக்குத் தெரியப்படுத்தினாள். அந்தோ! என்ன பரிதாபம்! கானாவின் நா அடுத்த நிமிஷத்தில் அந்தப் பெரிய பண்டிதர் வராகரால் துண்டம் செய்யப்பட்டது. அது தான்



சமயம் என்று கூற்றுவனும் அவளைத்தன் நாட்டுக்கு ஜ்யோதிஷ சாஸ்திரியாக வரவழைத்துக் கொண்டுவிட்டான். கானாவின் பொய்யுடம்பு பூமியில் அழியப் புகழ் உடம்புமாத்திரம் முன்னையினும் எண்மடங்கு அதிகமாய்ப் பெருகி வளர்ந்து வருகின்றது. கானாவின் தைரியத்தையும் ஜ்யோதிஷத்தில் அவள் அடைந்த வெற்றியையும் யோசித்துப் பாருங்கள்: என்ன ஆச்சரியமான புத்தி! ஆச்சரியமானபடிப்பு!!

## லீலாவதி.

பண்டைக்காலத்து ஆரியர்களின் நாகரீகத்தைப் பற்றித் தற்காலத்திய நவநாகரிகர்களில் சிலர் குறைசொல்லக் கேட்டிருக்கிறோம். அரண்மனைகளில் வசித்து உண்பதும் உடுப்பதும் பருகுவதும் அணிவதும் தான் நாகரீகத்துப் பொருள் என்று இவர்கள் நினைத்துக்கொண் டிருப்பதாய்த் தெரிகின்றது. உயர்ந்த நோக்கங்களும் ஒழுங்கான ஆசாரங்களும் புகழத்தக்க மதியும் புத்தி விருத்தியும் உள்ளவர்கள் தாம் நாகரீக முள்ளவர்கள். எப்பொழுதும் விஷயங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று லௌகிகம். மற்றொன்று வைதிகம். லௌகிக விஷயங்கள் அவ்வளவும் உலகவாழ்க்கைக்கு இன்றியமையாதவை. இதற்குப் பலன் பொருள் பூமி முதலியன. வைதிகவிஷயங்கள் மறு உலகத்துக்கு யோக்கியமானவை. அதற்குப்பயன் கடவுளை அடைதல் ஒன்றேயாகும். ஆதிகாலம் முதல் ஆரியர்கள் தங்களுக்கு வைதிக விஷயங்களையே பிரதான நோக்கமாய்க் கொண்டிருந்தார்கள். என்றாலும் லௌகிகத்தை அடியோடு ஒழி

த்துவிட்டவர்களன்று. ஜாதி ஆசாரம் ஒழுக்கம் நீதி பரிபாலனம் வர்த்தகம் பயிர் முதலியவற்றில் எவரும் இவர்களைத்தான் பின்பற்ற வேண்டும். அந்தக்காலத்தில் பொருளைச் சேகரிப்பதும் நல்ல விஷயங்களில் அவற்றைச்செலவு செய்வதுமே சிலருக்கு ஓயா மணியமாயிருந்தது. பூருவ காலத்தில் ஆரியர்கள் கையாடி வந்த அநேக விஷயங்களை இங்குவர்த்தகம் செய்யவந்த கிரேக்கர் பாரஸீகர் அரேபியர் முகமாக ஐரோப்பியர்கள் ஆவலோடு கற்றுக்கொண்டார்கள். ஆத்துமக்யானத்தில் ஆரியர்கள் அபாரசாமர்த்தியம் பொருந்தியவர்கள். இந்தக் காலத்திலும் வேதாந்தத்தில் இவர்களை வெற்றி கொள்கின்றவர் இல்லை. ஆரியர்கள் மிகவும் உயர்ந்ததென்று கொண்டாடி வருவது ஆத்துமக்யானம் ஒன்றேயொன்றுதான். சாஸ்திரங்கள் அவ்வளவும் இந்தியாவிலிருந்து தான் பிறநாடுகளுக்குக் கொண்டுபோகப்பட்டன. கணிதத்தில் முதல் முதல் தேர்ச்சியடைந்தவர்கள் ஆரியர்கள் தாம். பிறநாட்டார்பலரும் இவர்களிடமிருந்து தான் இதனையும் கற்றுப்போனார்கள்.

வடதேசத்தில் பாஸ்கராசாரி என்ற புகழ்பெற்ற கணிதசாஸ்திரி ஒருவர் இருந்தார். அவருக்கு லீலாவதியென்று ஒருபுத்திரியுண்டு. அந்தக்காலத்தில் நாழிகை வட்டில் மூலமாய்த்தான் காலத்தைக் கணக்கிட்டுக் கொண்டுவந்தார்கள். நாழிகை வட்டிலின் துவாரத்தில் தற்செயலாய் ஒருமுத்து விழுந்து அடைபட்டுத் தண்ணீர் நின்றுவிட்ட துரதிர்ஷ்ட வசத்தினால் சுபலக்கினம் வந்துவிட்டதென்று நினைத்துக் கெட்டலக்கினத்தில் தன் அருமைக் குமாரி லீலாவதிக்கு விவாகம் செய்துவிட்டார். அந்தோ! பாபம்!! மணம்செய்துகொண்ட கொஞ்ச நாளைக்கெல்லாம் லீலாவதி



தன் அருமைக்காதலனைப் பறிகொடுத்து ஆயுள் காறும் அமங்கலியாய்த் துக்கரூபமாகவே காலத்தைக் கழிக்க வேண்டியிருந்தது. அனவரதமும் அழுத கண்ணும் சிந்தியமூக்குமாகத் தன் புத்திரி இருந்து வரும் துக்கவாழ்க்கையைக்கண்டு பெரிதும் வருந்திய பாஸ்கராசாரியார் அவள் மனத்தை வேறுவிஷயங்களில் திருப்பக்கருதிக் கணித சாஸ்திரத்தைக் கற்பித்தார். லீலாவதியின் அறிவு விசாலித்துக் கற்பூர தீபம்போல நாளடைவில் தந்தையினும் எண்மடங்கு அதிகமாக அந்தச் சாஸ்திரத்தில் பூரண பாண்டித்தியம் அடைந்து விளங்கினாள். தற்காலத்தில் 'லீலாவதி' என்று வழங்கிவருகின்ற கணித சாஸ்திரத்தை எழுதி வெளிப்படுத்தியது அந்தமாதர்க்கரசியேயாகும். ரஸாயனம் வைத்தியம், பூகோளம் முதலிய சாஸ்திரங்களிலும் நம் ஆர்யாங்கனைகளே அதிகமாகத் தேர்ச்சி பெற்று விளங்கினார்கள். சங்கீத சாஸ்திரத்தில் ஆரியர்களுக்கு அபாரமான சக்தியுண்டு. ஸ்வரங்களையும் ஸ்வரஸ்தானங்களையும் கண்டுபிடித்து விருத்திக்குக் கொண்டுவந்தவர்கள் இந்தியர்களும் இந்தியமாதர்களுமே. மிருதங்கம் தபேலா முதலிய தோற்கருவிகளும், நாகசுரம் புள்ளாங்குழல் முதலிய துளைக்கருவிகளும், வீணை, சித்தார் முதலிய நரம்புக் கருவிகளும், தாளம் ஜாலர் முதலிய கஞ்சக் கருவிகளும், வாய்ப்பாடலாகிய மிடற்றுக்கருவியும் இந்துக்களால்தான் முதல் முதல் கண்டுபிடிக்கப்பட்டன. நர்த்தன சாஸ்திரத்துக்குப் பிரதான ஆசாரியரான பரதர் என்ற மகர்ஷியும் ஒரு பெரிய இந்தியர்தான். சாவலாதேவி என்ற ஒரு அரசகுமாரி சங்கீதத்திலும் நடனத்திலும் அனைவரையும் மிஞ்சியிருந்தாள். அந்த இரண்டு சாஸ்திரத்திலும் அந்தக்காலத்தில் அவளால் அவமானமடைந்து திரும்பிய பண்டிதர்கள் அநேகராம். தவறுகண்ட

விடத்தில் நிர்லக்ஷ்யமாய் எடுத்துக் கூறித் தங்கள் அபிப்பிராயத்தை ஸ்தாபித்துக் கொள்ளும் சக்தி அவர்களுக்கு நிரம்பவும் பொருந்தியிருந்தது. இராஜமாபுரத்தில் காந்தருவதத்தை என்ற ஒரு வணிகன் மகள் எல்லாவரசரும் திரண்டிருந்த ஒரு பெரிய சபைக்குச் சென்று வீணைவாசிப்பில் அனைவரையும் தோற்றேடச் செய்து தான் வெற்றிமாலை சூடினுள். பானுமதியென்ற மற்றோர் அரசகுமாரி மாய வித்தையில் மகாவியாபகியாய் விளங்கினுள். அந்த வித்தையில் அவளை வென்றவர் ஒருவரும் இல்லை யென்று சரித்திரம் கூறுகின்றது. இப்பொழுது கூட மாய வித்தை செய்யப் புகுவோர்கள் அவளை முதற் கடவுளாகக் கௌரவித்து உபசரித்து வருகிறுர்கள்.

---

## அரேபியா.

---

அரேபியா என்பது ஆசியாகண்டத்தில் உள்ள ஒரு உஷ்ணதேசம். அங்கே அநேக பாகங்களில் மழைபெய்வது கிடையாது. பூமி எப்பொழுதும் வரண்டு புழுதியடைந்திருக்கும். அந்த இடங்களில் பசுமையான புல்பூண்டுகளை என்றும் காணமுடியாது. அங்குப் பாலைவனங்கள் தான் விசேஷமாய் இருக்கின்றன. ஆனுல் சிலபாகங்களில் பெரிய மலைகள் உண்டு. மலைப்பிரதேசங்களில் மாத்திரம் தான் மழைபொழியும். மழைத்தண்ணீர் பூமியில் ஊறிச் சுடு மணல் நிறைந்த பாலைவனங்களின் சில தாழ்ந்த பூமிகளில் ஊற்றுகக் கிளம்பும். அந்த ஊற்றைச் சுற்றிலும் திட்டுத் திட்டாய்ப் புல் பூண்டுகள் முளைத்தும் ஈச்ச மரங்கள் ஓங்கி வளர்ந்தும் காணப்படும். அரேபியாவின் விருக்ஷம் ஈச்ச மரங்கள் தான். வருஷம் பன்னிரண்டு திங்களும் வெயில் உக்கிரமாகவே யிருக்கும். சுழற் காற்றிலும் சுடுமணலிலும் அலைந்து வருகின்ற பிரயாணிகளுக்கு அந்தச் சிறிய ஊற்றுக் குட்டைகளும் ஈச்சமரங்களும் கங்கா நதியும் கற்பகச் சோலையும் போல இன்பத்தை உண்டு பண்ணுகின்றன. புல்பூண்டுகளும் தண்ணீரும் குறைந்திருப்பதனுல் அரேபியாவில் ஆடுமாடுகள் வசிப்பது அரிது. ஒட்டகங்கள் தான் விசேஷமாய் அகப்படும். அவைகளுக்குப் பாலைவனக் கப்பல் என்று பெயர். அந்தச் சுடுமணலில் பிரயாணம் செய்வதற்கு அவைகள் தாம் ஏற்றவை. பூருவம் அங்கு வசித்து வந்தவர்கள் ஒருவகை முரட்டுஜாதியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் எப்பொழுதும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டே யிருப்பார்கள். அவர்களுக்கு நிலையான வீடும் நிலையான இடமும் கிடையாது. ஒட்டகங்களின்மீது பெண்டு பிள்ளைகளுடன் எப்பொழுதும் அலைந்து திரிவது அவர்களுக்குத்தொழில். அவர்களுக்குத் தெய்வங்களும் அநேகம். குடிமுதலிய கெட்ட நட்வடிக்கைகள் அவர்களுக்குச் சொந்தமாயிருந்தன.



அரேபியாவில் முன்பு மக்காப்பட்டணத்தில் அமீனு என்ற ஒருஸ்திரீ இருந்தாள். அவளுக்குக் கி. பி. 572-ல் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு முஹம்மது என்று பெயர். குழந்தைபிறப்பதற்கு முந்தியே பிதா காலம் சென்றுவிட்டார். குழந்தையின் ஆறுவது பருவத்தில் தாயும் தந்தையைப் பின்பற்றினுள். முஹம்மது தன் சிறிய தந்தையினுல் அப்புறம் ஒரு வளர்ப்புத்தாதியின் வசம் ஒப்புவிக்கப்பட்டார். அவள் பெற்ற தாயைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமாகவே கவலை எடுத்துக்கொண்டு குழந்தை

யைக் காப்பாற்றி வந்தாள். அவையவ அமைப்பிலும் அழகிலும் இவர் அரேபியாவிலிருந்த அனைவரையும் மிஞ்சி விளங்கினார். இருபத்துநான்காவது வயது பரியந்தம் முஹம்மதுவைப் பற்றிய விசேஷ சரித்திரங்கள் ஒன்றும் காணப்படவில்லை. இருபத்தைந்தாவது வயதில் அவர் கடிஜாவென்ற ஒரு கைம்பெண்ணினிடத்தில் வேலைக்காரனாக அமர்ந்தார். அந்தக் கடிஜா மிகுந்த புத்தி கூர்மையும் தெய்வபக்தியும் உள்ளவள். நிரம்பிய தனம் படைத்தவள். அவளிடத்தில் உண்மையும் விசுவாசமுமாக முஹம்மது நடந்து கொண்டு வந்தார். பழகப்பழகக் கடிஜாவுக்கு முஹம்மதுவின்மீது ஆசை பெருகத் தலைப்பட்டது. அதனால் அவள் மறுபடி அவரையே புனர் விவாகம் செய்து கொண்டு விட்டாள். கௌதம புத்தரைப் போலவே முஹம்மதுவுக்கும் ஆத்துமவிசாரணை செய்து உண்மை மார்க்கத்தைத் தெரிந்து கொள்வதில் அதிக ஆசை இருந்தது. ஆனால் புத்தர் விரக்தி மார்க்கத்தைக் கைக்கொண்டு சந்நியாசியாகி உண்மையைக்கண்டறிந்தார். முஹம்மது அப்படியில்லை. மனைவி கடிஜாவோடு கலந்துவாழ்ந்து கொண்டே மலைக் குகைகளுக்குச் சென்று சிந்தனை செய்து வந்தார். நாளடைவில் முஹம்மதுவுக்குக் "கடவுள் என்பவர் எப்பொழுதும் ஒருவராகவேயிருக்க வேண்டும். அவர் கருணையினாற்றான் அகிலபுவனங்களும் நிலைகுலையாமல் சஞ்சரித்து வருகின்றன. கயிறு ஒன்றே பலவகை மணிகளையும் தன்னில் கோத்துக் கொண்டு தான் கொஞ்சமும் காணப்படாமல் அவை ஒவ்வொன்றுக்குள்ளும் அடங்கியிருப்பது போலக் கடவுள் ஒருவரே எல்லா வர்க்கங்களிலும் அடங்கியிருக்கிறார்" என்று தெளிவாய் விளங்கிற்று. அந்தக் கொள்கை நியாயமாயிருக்கலாமென்று பலவழிகளிலும் அதைப் பரிசோதனை செய்து உண்மைவழி



அது தான் என்று கடைசியில் தீர்மானித்துக் கொண்டார். அப்புறம் அவர் தன்ஆயுளின் அற்ப அரைநிமிஷத்தையும் வீணாக்கிக் கொள்ளவில்லை. தன் கொள்கைகளை அரேபியருக்கு அப்பொழுதே கற்பிக்கத் தொடங்கினார். முதல் முதல் அவர் மதத்தைப் பின்பற்றியவர்கள் மனைவி கடிஜாவும் சிற்சில அரேபியர்களும் தான். மூடரும் முரடருமாகிய அரேபியாவின் மற்ற மனிதர்கள் முஹம்மது தங்கள் அநாதியான பழக்கவழக்கங்களையெல்லாம் கெடுத்துவிட்டுத் தங்களை அக்கிரம வழியில் இறங்கச் செய்கிறான் என்று கோபங்கொண்டு அவரைக்கல்லால் அடித்தும் சுடுசாம்பலைக் கொட்டியும் உபத்திரவம் செய்தார்கள். முதலில் அவர் சிறுபிள்ளைகள் உண்டாக்கும் வசைக் காற்றுக்கும் கல்மழைக்கும் தப்பிப் பிழைப்பதே அரியதாய் விட்டது. இந்த மரியாதை இவருக்கு மாத்திரம் அன்று. இவர் கொள்கைகளைப் பின்பற்றியவர்களுக்கும் போதுமானபடி கிடைத்து வந்தது. இந்தத் துரதிர்ஷ்ட சமயத்தில் அவர் அருமை மனைவி கடிஜாவும் இறந்து விட்டாள். அப்பொழுது அவர் அடைந்த துக்கத்துக்கு எல்லையேயில்லை. அவர் 'என் மனைவி போகவில்லை; என் வலதுகை போய்விட்டது; ஒழிந்த ஒற்றைக்கரத்தோடு உலகத்துக்கு நான் என்ன உதவி செய்யப்போகிறேன்' என்று மனமழிந்து புலம்பினார். கடிஜாவினிடத்தில் அவருக்கு அதிக விசுவாசமும் கௌரவமும் உண்டு. அவர் மரிக்குந்தனையும் முஹம்மது பிற பெண்களைக் கண்ணெடுத்தும் பார்த்தது கிடையாது. இறந்த மனைவிக்குச் சிலமாதம் துக்கம் கொண்டாடி விட்டு அந்தத் தேசாசாரப்படி அவர் வேறு சில பெண்களை இரண்டாவது மணம் செய்துகொண்டார்.

அவருக்கு அரேபியாவின் எவ்விடத்திலும் பகைவர்கள் பெருகிக்கொண்டேவந்தார்கள். கடைசியில் அவர்கள் தனக்குச்செய்ததுன்பம் பொறுக்க மாட்டாமல் முஹம்மது மெடினா என்னும் நகரத்துக்குச் சென்று அந்தப் பட்டணவாசிகளால் மிகவும் அபிமானிக்கப்பட்டார். மெடினாவில் அவருச்சீரும் சிறப்பும் அதிகமாய்க்கிடைத்தன. 'காற்றுள்ளபொழுதே தூற்றிக் கொள்' என்றபடி மெடினாவாசிகளைத் துணை சேர்த்துக் கொண்டு அரேபியாவுக்கு வந்து தன் பழையவிரோதிகள் அத்தனை பெய்ரையும் எதிர்த்துச் சண்டைசெய்து தோற்கடித்து விட்டார். அங்ஙனம் தோற்றுச் சென்றவர் பலரும் முஹம்மது ஆங்காங்குச் செய்யும் அற்புத பிரஸங்கங்களைக் கேட்டு மனம் கரைந்து கொஞ்சம் கொஞ்சமாக அவர் கொள்கைகளைப் பின்பற்றத் தொடங்கினார்கள். முஹம்மதுவின் காலத்துக்குள்ளேயே அவர் கொள்கைகள் அரேபியா முழுவதும் பரவிப் புகழ் பெற்றுவிட்டன. தன் அறுபத்து மூன்றாவது வயதில் அதாவது கி. பி. 635-வது வருஷத்தில் ஒரு வெள்ளிக்கிழமையன்று அவர் பரலோகம் சென்றார்.

கடிஜாவுக்குப்பின்பு அவரால் மிகவும் அன்பு பாராட்டப்பட்ட மனைவியின் பெயர் அயேஷா. தன் அழகாலும் குணத்தாலும் அவள் அவர் அன்பை முழுவதும் அபகரித்துக்கொண்டு விட்டாள். முஹம்மது அயேஷாவின் அழகிய துடையில் தலைவைத்துப் படுத்தவண்ணமே உயிர் துறந்தார். இறக்கும்பொழுது தன் சிஷ்யர்களுக்கு அவர் கூறிய வார்த்தையாவது:--"எவ்வளவுபாபம் செய்தவர்களானாலும் மதத்துக்காக உயிர்ப்பலி கொடுக்கின்றவர்கள் கடவுள் மன்னிப்பைப் பெறுவார்கள். அவர்கள் உடம்பிலிரு



ந்து பெருகும் ஒவ்வொரு ரத்தத்துளிக்கும் கடவுளுடைய ஒவ்வொரு அநுதாபக் கண்ணீர்த்துளி பெருகி நிலத்தைச் சுத்தம் செய்யும். மதாபிமானிகளுக்குக் கடவுள் உலகம் திறக்கப்பட்டிருக்கின்றது. மதவிருத்திக்காகச் செய்யப்படும் கொடுந்தொழில்கள் என்றும் பாபமாக மாட்டா. எவ்விதத்திலும் உங்கள் மதத்தை உலகில் பரவச் செய்வதுதான் உண்மையில் என் கொள்கைகளை அநுசரிப்பதற்குப் பேரடையாளம்" என்பது தான்.

இவருக்குப்பின்பு இவர் சிஷ்யர்களில் அநேகர் கிளம்பி மதத்தை விருத்தி செய்வது பெரும் புண்ணியம் என்று நினைத்து எல்லாத்தேசங்களுக்கும் சென்று யுத்தம் செய்து முஹம்மது மதத்தைப் பரவச் செய்தார்கள். இவர்களிற் சிலர் பாரஸீகத்துக்குச் சென்று அங்குள்ளவர்களைச் சண்டை முன்னிலையில் முஹம்மதியர்களாக மாறிவிடும்படி கட்டாயப்படுத்தினார்கள். அதுவரையில் தங்கள் பெரியோர்களால் கைக்கொண்டு வரப்பட்ட சொந்த மதத்தை அடியோடு கைவிடுவதற்கு எண்ணமற்ற சில தீரர்கள் இவர்கள் உபத்திரவம் இல்லாத வேற்றுத் தேசங்களுக்குச் சென்று பிழைக்கலாம் என்று தீர்மானித்துக் கப்பல் ஏறிக் கடைசியில் நம் இந்தியாவுக்கே வந்து சேர்ந்தார்கள். அவர்கள் நோக்கத்துக்கும் வாச யோக்கியத்துக்கும் இந்தியா மிகவும் பொருத்தமாயிருந்தது. தன் தொன்று தொட்ட நாகரீகத்தினால் இந்தியாவானது இவர்களைப்போன்ற மனிதர்கள் கோடிக்கணக்காக வந்து குடியேறினாலும் அவர்களுக்கு அன்போடு அபயம் கொடுத்து ஆதரிப்பதில் பிரசித்தி பெற்றதல்லவா? அந்தப்பாரஸீகர்கள் அப்பொழுது இந்தியாவில் மேற்குக் கடற்கரையோரமாக வந்து குடியேறினார்

கள். அவர்கள் சந்ததியார் இன்னமும் பம்பாயில் சுகமாக வசித்துக்கொண்டு வருகிறார்கள்.

மஹம்மதிய அரசர்களில் முதல் முதல் இந்தியாவின் மீது படையெடுத்துவந்தவன் கஜினி மகம்மது. ராஜபுத்திர வீரர்களில் ஜயபாலர் என்ற அரசசிங்கம் தான் அவனை உள்ளே புகவிடாமல் தைரியமாய் எதிர்த்துச் சண்டைசெய்தவர். கஜினிமகம்மதுவைப் பின்பற்றி வந்த போர்வீரர்களின் தொகை அதிகமாயிருந்ததனால் எத்தனை நாள் எதிர்த்து நின்றாலும் ஜயபாலருக்கு வெற்றி உண்டாகவில்லை; தோல்வியே அடைந்து விட்டார். ஒரு முரட்டுத் துருக்கனால் தனக்கு அபஜயம் நேர்ந்ததென்ற மானத்தை முன்னிட்டு ஜயபாலர் தன்னைத்தானே மாய்த்துக் கொண்டு பின்பு உயிர்துறந்தார். கஜினி மகம்மதுவும் அகப்பட்ட மட்டில் கொள்ளை யடித்துக்கொண்டு அரேபியாவுக்குச் சென்றான். 'உருசிகண்ட பூனை உரியை உரியைத்தாவும்' என்றபடி நாலைந்து வருஷங்களுக்குப் பின்பு மகம்மது கஜினி இரண்டாவது தடவையும் இந்தியாவைக் கொள்ளை யடிப்பதற்குப் பெரும்படைகளைத் திரட்டிக் கொண்டு வந்து சேர்ந்தான். அப்பொழுது ஜயபாலர் புத்திரர் அனங்கபாலர் அரசராயிருந்தார். அவர் எல்லா அரசர்களையும் கூட்டிச் சபைசேர்த்துத் துருக்கர்களால் இந்தியாவுக்கு நேர்ந்திருக்கின்ற கஷ்டங்களை எடுத்துச் சொல்லி அனைவரும் ஒருமிக்கச் சேர்ந்து எதிர்த்தால் ஜயம்பெற முடியும் என்றுகூறினர். அரசர்கள் அனைவரும் அனங்கபாலர் ஆலோசனையை வெளிக்கு மாத்திரம் ஒப்புக்கொண்டார்கள். உடனே யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. அந்தச் சண்டைக்குத் தேசபத்தி நிரம்பிய இந்தியமாதர்கள் பலரும் சேர்ந்து பேசித் தங்கள் உயிரிலும் அதிகமாக மதிக்



கத்தகுந்த உயர்ந்த ஆபரணங்களை யெல்லாம் யுத்தசெலவுகளுக்காக உருக்கி யுருக்கி உதவினார்கள். சுதேசவரசர்கள் அந்தரங்கத்தில் கொண்டிருந்த ஒற்றுமைக் குறையினால் தன்மையைப்போலவே [illegible] தோல்வியை[illegible] தமாக்கிக் கொள்ள நேர்ந்தது. ஆனால், அந்த யுத்தம் வெகு மும்முரமாகவும் திறமையாகவும் நடந்தது. மகம்மது கஜினி அப்பொழுதும் கிடைத்த பொருள்களை வாரிக்கட்டிக்கொண்டு திரும்பிவிட்டான். அவன் மூன்றாவது படையெடுப்பில்தான் குஜராத்திலுள்ள ஸோமநாதபுரத்துக்குச் சென்று கோயிலை அடைந்து அவர்கள் எவ்வளவு வேண்டியும் கேளாமல் விக்கிரகங்களை உடைத்துப் பொருட்குவியலைப் பெயர்த்து எடுத்துக்கொண்டு சென்றது. அவனுக்குப் பின்பு அவனையே வழி காட்டியாய் வைத்துக்கொண்டு இன்னும் சில மகம்மதிய வரசர்கள் இந்தியாவின்மீது படை எடுத்து வந்து நம் இந்தியமாதாவின் அளவற்றதனங்களை அநியாயமாய் அபகரித்துச் சென்றுவிட்டார்கள்.

---

## சம்யுக்தா.

பதினோராம் நூற்றாண்டில் இந்தியமாதா தன்னைத் தோன்றுதொட்ட காலம்முதல் பரிபாலித்துக்கொண்டுவந்த, நீதி ஆளுகை முதலிய நற்குணங்களிற் சிறந்த, இணையற்ற, சூரியவம்சம் சந்திரவம்சம் அக்னிவம்சம் என்ற மூன்று க்ஷத்திரிய அரசகேஸரிகளின் அரசாக்ஷியிலும் வெறுப்படைந்து விட்டாள். க்ஷத்திரிய வம்சத்துக்குச் சக்கிரவர்த்திகள் சார்வபௌமர்கள் என்ற பெரிய பட்டங்கள் பலவும்

பரந்து தொலைந்து ராஜபுத்திரர்கள் ராஜபுத்திர வீரர்கள் என்று குலப் பெயர் மாத்திரம் விளங்கிக் கொண்டிருந்தது. இந்த வீரர்கள் ஆங்காங்குப் பூவிற்றகடையில் புல்விற்ற [illegible] சிறிய பாகங்களைக் கைப்பற்றிக்கொண்டு குறைந்து காணப்பட்டார்கள். இவர்கள் நிலைமை மிகவும் பரிதாபத்துக் கிடமாயிருந்தது. என்றாலும், உயர்ந்த குணங்களும் அபிப்பிராயங்களும் அவர்களுக்குச் சொந்தமாயிருந்தன. அதாவது, முதலில் சண்டைக்குச் சிறிதும் அஞ்சமாட்டார்கள். சமயம் நேரிடும் பொழுது தங்கள் உயிரைத் துரும்பிலும் அற்பமாக மதிக்கத் தகுந்தவர்கள். தைரியம் சௌரியம் கருணை முதலியவைகள் அவர்களை அலங்காரம் செய்தன. அற்பத்தன்மை அவர்களுக்கு லேசமும் கிடையாது. பெருந்தன்மையான புத்தியுள்ளவர்கள். பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்தொழுகுதலை அவர்கள் ஜன்மவிரதமாய்க் கொண்டிருந்தார்கள். உண்மை பேசுதல் அவர்களுக்கு உடன் பிறந்தது. பெரியோர்கள் பழக்கவழக்கங்களை மாற்றுவதைக் காட்டிலும் உயிரை மாற்றிக்கொள்வது மேல் என்பது அவர்கள் அபிப்பிராயம். ஆண்மக்களைப் போலவே பெண்மக்களும் இவ்விஷயங்களைக் கைக்கொண்டிருந்தார்கள். தங்கள் புருஷர்கள் இடம் பொருள் ஏவல் முதலிய குறைவுபாடுகளால் சோர்வடையும் பொழுதெல்லாம் தங்கள் கல்வி சொல்வன்மை அழகு ஒழுக்கம் முதலியவற்றால் அவர்களுக்கு உற்சாகமூட்டி உழைக்கச் செய்து வந்தார்கள். "மயிர் நீப்பின் வாழாக் கவரிமா வன்னார் உயிர் நீப்பர் மானம்வரின்." என்ற உண்மைமொழியை உண்மையாக்கி வந்தார்கள். தங்கள் கற்பின் விஷயமாகப் பிறர் எள்ளளவும் பழி சொல்லப் பொறுக்கமாட்டார்கள். இப்படிப்பட்ட உயர்ந்த குணங்களுக்கு உறை விடமானவர்களை



167703 600 008.

நாயகிகளாய்ப் பெற்றவர்களுக்குக் குறையுண்டா[illegible] ஆயினும், காலவித்தியாசத்தினால் முற்கூறியவாறு குறைந்துகொண்டே வந்தார்கள.

பதினோராம் நூற்றாண்டின் கடைசியில் வட இந்தியாவைப் பரிபாலித்துக்கொண்டுவந்த பிரசித்திபெற்ற குடும்பங்கள் இரண்டு. ஒன்று ராதர்வம்சம். மற்றொன்று சாஹான் வம்சம். ராதர்வம்சத்தைச் சேர்ந்தவர் ஜயசந்திரர். இவர் குஸுமபுரம் என்கிறகானோஜ் பட்டணத்தை ராஜதானியாய்ப்பெற்று விளங்கினார். மற்றொரு வம்சத்தைச் சேர்ந்தவர் பிருத்விராஜர். இவர் டெல்லியில் இருந்துகொண்டு தன் நீதியினால் சிலதேசங்களைப் பரிபாலித்துக்கொண்டு வந்தார். இருவரும் சுத்தவீரர்கள். பிருத்விராஜர் முகத்தை விளக்கம் செய்து கொண்டு பெண்களின் மனங்களாகிய மீனங்களை அகப்படுத்துவதற்குப் புறப்பட்ட தூண்டில் போன்ற மீசை அப்பொழுதுதான் கொஞ்சம் அரும்பிக் கடைவளைந்து காணப்பட்டது. அவர் தன் நற்குணத்தினாலும் நீதியொழுங்கினாலும் குடிகள் மனங்களைக் கொள்ளை கொண்டு விளங்கினார். பிறதேசங்களில் உள்ள பெருந்தன்மையான குடும்பங்கள்பல அவர் ஆளுகையில் என்றும் இருந்துவாழ விரும்பி வந்தன. பிருத்விராஜர் இராஜ்யபரிபாலனத்தைச் சிலவருஷகாலமாகவே வகித்துவர ஆரம்பித்தாலும் புகழிலும் பிரக்யாதியிலும் அனைவரையும் மிஞ்சி விளங்கினார். ஜயசந்திரர்கொஞ்சம் வயது சென்றவர். பிருத்விராஜாவின் புகழ்விளக்கம் பரவப்பரவ ஜயசந்திரர் அவரைப் பகைத்துப் பொறாமை கொள்ளத்தொடங்கினார். நாளுக்கு நாள் அந்தப் பொறாமை விருத்தியடைந்து அவர் மீது துவேஷத்தை விருத்தி செய்துவிட்டது. ஜயசந்திரருக்கு

ஆண்சந்ததி இல்லை. அவர் இல்வாழ்க்கை இருளடைந்து போகாவண்ணம் புத்திரி யொருத்தி உதயம் செய்து ஒளியுண்டாக்கினாள். அவள் பெயர் சம்யுக்தை. அனைவரும் அவளை ஸ்ரீமகாலக்ஷ்மியென்றே சொல்லிப் புகழ்ந்து வந்தார்கள். கல்வி குணம் ஒழுக்கம் என்ற மூன்றும் அவள் அழகுக்கு மெருகுசெய்தன. அவள், பராக்கிரமத்தையும் பெருந்தன்மையையும் புகழ்ந்துபேசுகின்ற சுவபாவமுள்ளவள். புருஷர்களுக்குத்தைரியமும் விடாமுயற்சியும் சிறந்த பூஷணம் என்று அடிக்கடி சொல்லுவாள். தேசசரித்திரங்களைக் கேட்பதும் வீரர்களைப் புகழ்வதும்தான் அவளுக்குப் பொழுதுபோக்கு. ரணக்களம் சென்று சண்டைசெய்வதில் அவளுக்கு மிகுந்த பிரியம் உண்டு. ஆகவே, யுத்த சாஸ்திரத்தின் அதிநுட்பமான விஷயங்களை யெல்லாம் அவள் மிகவும் நன்றாய்த் தெரிந்து கொண்டிருந்தாள்.

ராஜபுத்திரர்களில் சம்யுக்தாவின்மீது விருப்பம்கொள்ளாதவர் ஒருவரும் இல்லை. அவளை அடையும் விஷயத்தில் உயிரையும் பலி கொடுக்கச் சித்தமாயிருந்தார்கள். ஆனால், ஜயசந்திரர் ஒருவர்க்கும் இடம் கொடுக்க வில்லை. சம்யுக்தாவின்மீது அவர் அளவுகடந்த அன்பு வைத்திருந்தார். தன் பெண்ணுக்குத் தெரிவிக்காத அந்தரங்கம் அவருக்கு ஒன்றுமேகிடையாது. பலதடவைகளில் கேட்டும் சரியானபடி பதில் சொல்லாததனால், சம்யுக்தாவுக்குச் சுவயம்வரம் கொடுத்து விடவேண்டும், என்று நினைத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பண்டல்கண்ட் என்று சொல்லப்படும் சேதிதேசத்து அரசனாகிய பெருமாள் என்பவன் கொடுங்கோலனாகி நாட்டை உபத்திரவிக்கத் தொடங்கினான். அதனால், அவன் குடிகள் பலரும் கூக்குரலிட்டுக்



கொண்டு டெல்லிக்கு வந்து பிருத்வி ராஜரைச்சரணமடைந்தார்கள். இயற்கையிலேயே கருணைமிகுந்த பிருத்விராஜர் அவர்களை ஆதரித்துப் பெருமாள் அரசனுக்குக் குடிகள் சொல்லும் நிஷ்டூரவசனங்களையும் அவர்கள் படும் கஷ்டங்களையும் எடுத்துக்காண்பித்து இனியேனும் அவர்களை அன்பாய் நடத்த வேண்டும் என்று தூதனுப்பினார். சேதிநகரத்தரசன் அந்த ஹிதவசனங்களை ஏற்றுக்கொள்ளவேயில்லை. வந்த மந்திரியையும் அவமானப்படுத்தி அனுப்பிவிட்டான். பின்பு தண்டோபாயத்தினால்தான் அவனைத் திருத்தவேண்டும் என்று பிருத்விராஜர் பெரும்படைகளோடு சென்று பண்டல்கண்டைத்தாக்கினார். பெருமாள் அரசனும் ஏற்கெனவே யுத்தம் வரும் என்பதை எதிர்பார்த்திருந்தபடியால் தோற்பு கெலிப்பில்லாமல் சிலநாள்கள் வரையில சாமர்த்தியமாகவே எதிர்த்துப் போராடினான். ஆயினும தன் அக்கிரமத்தின் விளைச்சலாக அவன் தனக்கு அபஜயத்தைச் சொந்தமாக்கிக்கொள்ள நேர்ந்தது. அந்தச்சண்டையில் பிருத்விராஜாவின் பராக்கிரமம் புகழ்ந்து பேசுவதற்கு யோக்கியமாயிருந்தது. ராஜபுத்திரவரசர்களோடு துருக்கவரசர்களும் கீர்த்திக்கத் தொடங்கினார்கள்.

ஆனால், ஜயசந்திரருக்கு மாத்திரம் அந்தப்புகழ்ச்சொல்லைக் கொஞ்சமும் பொறுக்கமுடியவில்லை. அது அவருக்குப் பழுக்கக்காய்ச்சிய இரும்பு நாராசத்தை அழுகு புண்ணில் சொருகியது போன்றிருந்தது. எவ்விதத்திலும் பிருத்விராஜாவுக்கு அவமானம் உண்டாக்கவேண்டும் என்பது அவர் அந்தரங்க அபிப்பிராயம். என்ன செய்வார்! அவர் எண்ணத்தை அநுசரித்துப் பழிப்பதற்கு எவரும் முன்வரவில்லை. அதனால், அவர்கள் அனைவரையும் ஸ்துதிபாடகர்கள்

என்று வெறுக்கத்தொடங்கினார். அவர் செய்யும் பிரயத்தனங்கள் ஒன்றும் அநுகூலிக்கவில்லை. கடைசியில் தான் ஒரு அசுவமேதயாகம் செய்யத்தொடங்கி எல்லாவரசர்களுக்கும் பத்திரிகை அனுப்பினார். பிருத்விராஜாவுக்கும் அழைப்புப்பத்திரம் ஒன்று சென்றது. சூரர் சிகாமணியாகிய பிருத்விராஜர் அந்த அசுவமேதயாகத்துக்கு வந்து அனைவருக்கும் முன்னிலையில் தன்னை ஒரு சிற்றரசனாகத் தானே செய்து கொள்வதற்கு மனம் பொருந்துவாரா? அவரை ஒழிந்த அரசர்கள் பலரும் வந்து யாகசபையை அலங்கரித்தார்கள். ஜயசந்திரர் பிருத்விராஜாவின் மீது கொண்டிருந்த பழைய பொறாமையை யாகசபையில் நிறைவேற்றிக் கொள்ளப்பார்த்தார். அவர் பிருத்விராஜாவைப் போலத் தங்கப்பதுமை ஒன்றுசெய்து கீல்தாரினால் அதற்கு வர்ணம் தீட்டி வேலைக்காரன் உடை உடுத்தி வாளை ஏந்தியவண்ணம் யாக சபையில் காவற்காரனாக நிறுத்திவைத்தார். ஜன சமூகங்களின் எண்ணம் எப்பொழுதும் ஒன்றாயிருக்கமுடியாதல்லவா? சிலர் ஜயசந்திரரை மனத்தில் வெறுத்தார்கள். சிலர் தெரியாமற் செய்து விட்டாரென்று பொறுத்தார்கள். இன்னும் சிலர் நாமும் இந்த அவமானத்தை ஒரு சமயம் அடையவேண்டிவரும் என்று முகம் சிறுத்தார்கள். சில அறிவிலிகள் மாத்திரம் அங்ஙனம் நடந்ததற்கு உடம்பு பெருத்தார்கள். அனைவருக்கும் அவமானத்தை உண்டாக்கக்கூடிய இந்த விஷயம் இரண்டாவது நாள் சம்யுக்தாவுக்குத் தெரிந்தது. பிருத்வி ராஜாவினுடைய பெருங்கீர்த்திக்கும் வீரச்செயலுக்கும் ஏற்கெனவே மனத்தைப் பறிகொடுத்து விட்டவளுக்கு இதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? அவள் நெடுநாளைக்கு முன்னமேயே பிருத்வி ராஜாவை மனத்தால் வரித்துவிட்டாள். அதனால், மிகவும் வருந்தித் துடித்தாள். தனக்குத்தானே புலம்பினாள். "புகழ் அடைய விரும்புகின்ற எவன்தான் இந்த அக்கிரமத்தை மனம் கூசாமற் செய்வான்? இந்தக்காரியம் தந்தையின் க்ஷேமத்துக்குச் செய்யப்பட்டதன்று. 'கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது.' புருஷசிங்கமாகிய பிருத்விராஜர் இந்த அவமானத்தைக் கேட்டும் பொறுத்துக் கொண்டிருப்பாரா? பிருத்விராஜாவின் பெரும் புகழ்தான் தந்தையை இங்ஙனம் செய்யத்தூண்டிற்று. அந்தோ! நன்றாய்ச் சாணைபிடித்து விஷத் துவையலிட்டு விளங்கும் வாள்வாயை நாவால் நக்கப் பார்க்கிறார். என்ன அறியாமை? வயது செல்லச் செல்ல அற்பத்தன்மை குடிகொண்டு விட்டது. இனி இந்தக்குணத்தால் இவர் உலகத்தை அழிக்கத் தலைப்படுவதற்கு முந்தி இவர் அழிந்து விடுவதேமேல்" என்று பலவாறு எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். அப்புறம் அவளுக்குத் தந்தை வீடு ருசிக்கவே யில்லை. அது நரகத்தைக்காட்டிலும் ஒரு பெரிய பயங்கரமான காவற்சாலையாயிருந்தது.



இந்த லக்ஷணமான அசுவமேத சமயத்தில்தான் சம்யுக்தாவுக்கு ஜயசந்திரர் சுவயம்வரம் ஏற்படுத்தியிருந்தார். மற்றசமயங்களில் சுவயம்வரம் நியமித்தால் பிருத்விராஜர் வரக்கூடுமென்றும், ஒருசமயம் வந்துவிட்டால் தன் அருமைமகள் அவரையே நாயகனாக வரித்துக் கொள்வதுநிச்சயம் என்றும் நினைத்து, அவர் இல்லாத இந்தசமயத்தை அதற்கு முகூர்த்த மாக்கிக்கொண்டது. சம்யுக்தாவின் நிலைமை அப்பொழுது எவ்வாறாயிருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள்! விவாகமே வேண்டாம் என்று வெறுத்து விட்டால் தந்தையின் வெறுப்பை அடையவேண்டி வரும். மற்றொருவருக்கு மாலை சூட்டி

னால் கற்புக்குப் பழுதுவந்து நேரும். தற்கொலை செய்து கொண்டால் பெரும்பாபம் பின்தொடரும். ஒருவருக்கும் தெரியாமல் ஓடிவிடலாமென்றால் உலகம் அவதூறு பேசிப் பழிக்கும். இந்தக்கலவரங்களில் அவள் ஒன்றும் செய்யத் தோன்றாமல் விழித்துக் கொண்டிருந்தாள். யாகத்தின் கடைசி தினத்தன்று சுவயம்வர மண்டபம் சிங்காரிக்கப்பட்டது. ராஜபுத்திர அரசர்கள் பலரும் தங்களை நன்றாய் அலங்கரித்துக்கொண்டு சபையில் வரிசைவரிசையாக உட்கார்ந்திருந்தார்கள். சம்யுக்தா பிதாவின் கட்டளையினால் இராஜவைபவங்களுடன் மண்டபத்தை அடைந்து அரசகுமாரர்களின் பிரதாபங்களையெல்லாம் நன்றாய்த்தெரிந்த கிழவியொருத்தி தனக்குக் கூறிக் கொண்டுவர இரண்டு தடவை அனைவரையும் கவனித்துக்கொண்டு வந்தாள். சம்யுக்தா தன்னைத்தான் வரிக்கப் போகிறாள் என்று ஒவ்வொரு ராஜபுத்திர வீரனும் மனப்பால் குடித்துக் கொண்டிருந்தான். ஆனால், மூன்றாவது தடவை சம்யுக்தா மணமாலையைக் கரத்தில் எடுத்துக் கொண்டு அரசமண்டலங்களை விட்டு அப்புறம் நடக்கத் தொடங்கினாள். அவள் செய்யப்போகின்ற காரியம் இன்னதென்று ஒருவருக்கும் திட்டமாய்த் தெரியவில்லை. "மாலையை எங்கு எடுத்துச் செல்கிறாள்? நம்மைவிட இவளுக்குத் தகுந்தபுருஷன் அங்குயாவர் இருக்கிறார்கள்." என்றுபலரும் பலவிதமாய்ப் பேசிக் கொண்டார்கள். என்ன ஆச்சரியம்? சபைவாயிலில் பிருத்வி ராஜாவைப்போலத் தங்கத்தினாற் செய்து நிறுத்தப் பட்டிருந்த பிரதிமையின் கழுத்தில் மணமாலையைச் சூட்டி வணங்கினாள். ராஜபுத்திர வீரர்கள் அந்தச்செய்கைக்கு ஆச்சரியத்தினால் ஒருவரோடொருவா கண்ணால் பேசத்தொடங்கினார்கள். ஜயசந்திரர் அந்தப் பெரியசபையில் தன்னை அவ



மானப் படுத்துவதற்காகவே தன்குமாரத்தி பிருத்விராஜாவின் பிரதிமைக்கு மாலை சூட்டியிருக்கிறாள் என்று பெருங்கோபம் கொண்டு அவளை உடனே சிறைச்சாலையில் அடைத்து விடும்படி உரத்துக்கூவினார். சேவகர்கள் சம்யுக்தாவை அழைத்துச் செல்லவந்ததும், அவள் கொஞ்சமேனும் மனம் தளராமல் மிகுந்ததைரியமாய்ச் சந்தோஷத்தோடு 'என் மணமாலையை ஏற்றுக்கொண்ட என்தலைவர் எப்படியும் என்னைக்காப்பாற்றிக் கொள்வார்' என்று கூறிச் சிறைச்சாலைக்குச் சென்றாள்.

இந்தவிஷயம் அவ்வளவும் மற்றைநாள் இரவு பிருத்வி ராஜாவுக்குத் தெரிந்தது. 'தன்னையே சுதாவில்விரும்பித் தனக்கு அவமானம் உண்டாக்குவதன்பொருட்டுச் சபை வாயிலில் நிறுத்திவைத்திருந்த தன் போன்ற பிரதிமைக்கு மாலையிட்டுத் தனக்குக் கௌரவமுண்டாக்கியதன் பிரதிபலனைச் சம்யுக்தாதேவி சிறைச்சாலையில் வாசம் செய்கிறாள்' என்பதைக் கேட்டு எவன்தான் பொறுத்துக் கொண்டிருப்பான்? சம்யுக்தாவின் அழகு கல்வி குணம் முதலியவைகளைக்கேட்டு அவளைமணம்செய்துகொள்ள ஆசையிருந்தும் பகைவன் மகளாதலால் தனக்குக் கிடைப்ப தருமை என்று எண்ணிக்கொண்டிருந்த பிருத்விராஜர் அந்தப் பெண்கள் நாயகி தனக்கு வலுவில் கிடைப்பதாயிருந்தால் அவளை வேண்டாம் என்று வெறுத்துவிட மனம் துணியுமா? அந்த விஷயத்தை அப்பொழுதே தன் அந்தரங்க மந்திரிகளிடம் நன்றாய்க்கலந்து ஆலோசித்துக்கொண்டு மறுநாள் அதிகாலையில் கானோஜ் பட்டணத்துக்கு யுத்தயாத்திரை செய்தார். மூன்றாவது தினத்தில் கானோஜ்பட்டணம் பிருத்விராஜாவினால் முற்றுகை யிடப்பட்டது. அந்தயுத்தம்

உக்கிரத்தோடு ஒருவாரத்துக்கு அதிகமாகவே நடந்தது. அப்புறம் பிருத்விராஜர் ஜயலக்ஷ்மியுடன் சம்யுக்தாதேவியையும் சிறை மீட்டுக்கொண்டு டெல்லிக்குத்திரும்பினார்.

பின்பு மகாவிபவமாக டெல்லியில் பிருத்விராஜாவுக்கும் சம்யுக்தாதேவிக்கும் விவாகம் நிறைவேறிற்று. ஜயசந்திரருடைய அசுவமேதயாகத்துக்குச் சென்றிருந்த இராஜபுத்திரர்கள் அத்தனை பெயரும் டெல்லிக்குவந்திருந்து முகூர்த்தத்தைக் கண்டு ஆனந்தித்துச் சென்றார்கள். ராணி சம்யுக்தாதேவி தன் ஆருயிர்த் தலைவனை அரைக்கணமும் விட்டுப் பிரியாமல் அந்தப் புரத்தையும் அவர்மனத்தையும் அனவரதமும பிரகாசப் படுத்திக்கொண்டு விளங்கினாள். தன் முயற்சி அவ்வளவும் தனக்கே தலைபிரக்கத்தை உண்டு பண்ணி விட்டதற்கு ஜயசந்திரர் அடைந்த அவமானம் சொல்லி முடியாது. தன்னால் எப்பொழுதும் பகைத்துக்கொண் டிருக்கப்பட்ட ஒருவன் தன் கட்டளையின்றியே தனக்கு மருமகனும் ஆய்விட்டதை நினைக்க அவர் மனம் சமாதானம் கொள்ளவில்லை. பிருத்வி ராஜரைப் பழிவாங்கும் சமயம் எப்பெழுது வாய்க்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். பிருத்விராஜர் சம்யுக்தாதேவியோடு பழகப்பழக அவர் அறிவும் ஆண்மையும் ஆயிரம் மடங்கு அதிகமாக விளங்கிற்று. 'இவ்வளவு உயர்ந்த ஒழுக்கத்தோடு கூடிய இவள் அற்பகுணத்தையே ஆபரணமாய்க் கொண்டு விளங்குகின்ற ஜயசந்திரருக்குப் புத்திரியாய்ப் பிறந்து அவர் அரண்மனையில் அவ்வளவு காலம் அடைபட்டுக் கொண்டிருந்தது மிகவும் ஆச்சரியம்' என்று அடிக்கடி சொல்லுவார். இரண்டொரு வருஷம் இந்தத் தம்பதிகளின் வாழ்க்கை மிகவும் இன்பகரமாகவே இருந்து வந்தது.



இஃது இப்படி யிருக்க, மகம்மதுகோரி என்னும் ஆப்கானிய அரசனொருவன் பெருஞ் சேனையோடு இந்தியாவின் மீது அப்பொழுது படையெடுத்துவந்தான். அவன் மிகுந்த பராக்கிரமசாலி. பிருத்விராஜர் எல்லா ராஜபுத்திர வீரர்களையும் ஒன்றாய்த் திரட்டித் தானேசுவரம் என்றவிடத்தில் அவனைத் தாக்கினார். அப்பொழுது ஜயசந்திரர் ஒரு கக்ஷியிலும் சேராமல் தனித்து நின்று விட்டார். ஆனால், அவர் அங்ஙனம் நின்று விட்டதற்குக் காரணம் வேறு. அது, மகம்மது கோரிக்கு இந்தியாவில் இடம் கொடுத்து விடவேண்டும் என்பதன்று. 'பிருத்வி ராஜர் முதலில் சென்று தோல்வியடைந்து அவமான மடைந்த பின்பு நான் சென்று ஜயித்துப் பிரக்யாதி பெறலாம்', என்பது தான். "எண்ணி யொருகருமம் யார்க்கும் செய் யொண்ணாது; புண்ணியம் வந்தெய்து போதல்லால், கண்ணிலான் மாங்காய் விழ வெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே ஆங்காலம் ஆகுமவர்க்கு" என்பதைப் போல அந்தச் சண்டை ஜயசந்திரர் எண்ணத்துக்கு முற்றிலும் விரோதமாய் முடிந்தது. அவர் தோல்வி யடையப்படுவா னென்று நினைத்திருந்தவர் தோல்வி அடைவித்தார். மகம்மது கோரி ஓடியொளித்த விடமே இன்னதென்று விளங்கவில்லை. ஜயசந்திரருக்கு அந்தக் காரியம் உகிர்ச்சுற்றின்மீது அம்மி விழுந்ததாயிற்று. பிருத்வி ராஜாவுக்கு அவமானம் உண்டாக்க வேண்டும் என்று தான் நினைத்துச் செய்யும் ஒவ்வொரு பிரயோகமும் அபஜய மடைவதைக்காண அவர்மனம் சகிக்கவில்லை. அதனால் அவர் மதிமயங்கி "ஓ! இனி என்னால் அரைக் கணமும் பொறுக்க முடியாது; நேற்று என் கண்காணப் பிறந்த ஒரு பயனற்ற சிறுவன் தன் புகழ்விளக்கத்தினால் என்னுடைய அபாரமான கீர்த்தியை முழுவதும் விழுங்கிக்

கொண்டு வருகிறான்; அதை வெறுமனே பார்த்துக்கொண்டு உயிர் சுமந்துவாழ்வது ஒரு பெரும்பாரம்; இதனால், என் தேசம் உயிர் என்ற இரண்டையும் ஒருங்கே துறக்க நேர்ந்தாலும் எனக்குப் பெரிதில்லை; இனி அவனைத் தொலைக்காமல் இருக்கமாட்டேன்." என்று வீராவேசம் கொண்டு தான் செய்யப்போகும் காரியம் இன்னவிதமாக முடிவு பெறும் என்பதையும் கூடக் கருதாமல் இந்தியாவில் என்றும் நிலைத்து நிற்கின்ற. ஒரு பெரும்பழியான அபக்கியாதியைத் தேடிக்கொண்டு விட்டார். அதாவது:—தோல்வியடைந்து ஓடிப்போன மகம்மது கோரி திரும்பிவந்தால் தன் உதவியை அடைந்து பிருத்விராஜாவை எதிர்க்கலாம் என்றும், ராஜபுத்திர வீரர்கள் இனி அவனுக்குத்துணை செய்ய வாராதிருக்கும்படி அவர்களைக் கலைத்து அனுப்பி விடப்படும் என்றும், அந்த ஆப்கானிய வீரனுக்குக் கடிதம் அனுப்பினார். அபஜயத்தினால் அவமானமடைந்து ஓடிச் சென்ற அரசனுக்கு இதனிலும் வேறு என்ன அநுகூலம் வேண்டும்? கடிதம் கிடைத்த கொஞ்சநாளைக் கெல்லாம் பெரும் படைகளைத் திரட்டிக் கொண்டு இந்தியாவின் மீது இரண்டாவது தடவை படையெடுத்து வந்தான். ஜயசந்திரர் அவனோடு சேர்ந்து கொண்டதுமன்றித் தன் கடிதத்தில் கண்ட மற்றொன்றையும் நிறைவேற்றி விட்டார்.

ஜயசந்திரர் மகம்மது கோரிக்குக் கடிதம் எழுதியது முதல் ஒவ்வொருநாளும் கானொஜில் நடக்கின்ற அந்தரங்க ஆலோசனை அவ்வளவையும் பிருத்விராஜாவும் சம்யுக்தா தேவியும் ஒற்றர்கள் மூலமாய் நன்றாய் அறிந்து கொண்டிருந்தார்கள். மகம்மது கோரியின் இரண்டாவது படையெழுச்சிக்கு ராஜபுத்திர வீரர்கள் ஊக்கம் காட்டாதிருப்



பது அவர்களுக்குக் கொஞ்சம் விசனம்தான். ஆயினும், அப்பொழுது செய்யக்கூடியது ஒன்றுமில்லை யல்லவா? அந்தத்தம்பதிகள் மந்திரிகளோடு நன்றாய் யோசனை செய்து கடைசியில் எதிர்ப்பதென்றே தீர்மானித்துக்கொண்டு விட்டார்கள். தன் சேனைகளை நன்றாய் ஒழுங்குபடுத்தி உற்சாக மூட்டி நடத்திக்கொண்டு கடவுள் விட்டவழி நமக்குச் சொந்தமாகட்டும் என்று பிருத்விராஜர் தான் ஒருவராகவே தானேசுவரத்துக்குச் சென்றார். அப்பொழுது சம்யுக்தாதேவி தானும் தானேசுவரத்துக்குச் சென்றிருந்தாள். சண்டை துவக்குவதற்கு நாளும் குறிக்கப்பட்டுவிட்டது. இருதிறத்துப் படைவீரர்களும் அணிவகுத்து எதிருக்கெதிராய் நின்றுகொண்டிருந்தார்கள்.

அப்பொழுது மிகவும் சுந்தரவடிவத்தோடு கூடிய வீரனொருவன் கரத்தில் பெரியவாளை ஏந்தி அழகிய வெள்ளைக்குதிரை மீது ஏறிக்கொண்டு அந்தப்படைகளைக் கொஞ்சமும் லக்ஷ்யம் செய்யாமல் நடுவேபுகுந்து ஜயசந்திரர் கூடாரத்துக்குச் சென்றான். ஜயசந்திரர் ஒரு சாய்வுநாற்காலியின் மீது சாய்ந்துகொண்டபடியே என்னவோ யோசனை செய்துகொண்டிருந்தார். வந்த வீரன் குதிரையை விட்டிறங்கி அவருக்கு வந்தனம் செய்து எதிரில்நின்றான். ஜயசந்திரர் அவன் உருவத்தையும் அவன் முகத்தில் விளங்கும் சௌரியத்தையும் அழகையும் கண்டுவியந்து அவன் ஒரு உயர்ந்த அந்தஸ்தில் இருந்திருக்கவேண்டும் என்று மதித்துத் தன் பக்கத்தில் இருந்த ஆஸனத்தில் அவனை இருக்கச் செய்து "நீங்கள் யார்?" என்று கேட்டார். வீரன் "புகழ் பொருந்திய ஐயா! நான் பிருத்விராஜருக்குச் சண்டையில் உதவி செய்ய வந்திருக்கிறேன்; ராஜபுத்திர வம்சத்தைச்

சேர்ந்தவன்; தங்களோடு இரண்டொருவார்த்தை சொல்லிப்போகவந்தேன்" என்றான். ஜயசந்திரர் "பாலியவீரனே! நம்வம்சத்திற் பிறந்த வீரர்கள் பலரும் பிருத்விராஜன் துற்குணங்களையறிந்து அவனுக்கு உதவிசெய்தலை வெறுத்து நீங்கியிருக்கும் பொழுது நீ மாத்திரம் அவனோடு சேரக்காரணம் என்ன? உங்கள் உதவிகளைக்கொண்டு ஜயமடைந்தபின்பு அந்த நாட்டுக்கும் அவன் அல்லவோ அரசனாகப்போகிறான்; உயிருக்குத்துணிந்து நீங்கள் உழைப்பதனால் அடையக்கூடியலாபம் ஒன்றுமில்லையே; இவற்றை நன்றாக யோசித்துப்பார்" என்றுகூறினார்.

வீரன் முகத்தைச் சுளித்துக் கொண்டு "ஐயா! யோசிக்க வேண்டுகிறேன். தாங்கள் சிங்காதனம் ஏறி அநேக வருஷங்கள் ஆகின்றன. பல சண்டைகள் செய்திருக்கிறீர்கள். அநேகம் கோட்டைகளை முற்றுகையிட்டும் இருக்கிறீர்கள். தங்களுக்காக எத்தனையோ ராஜபுத்திர வீரர்கள் யுத்தத்தில் உயிர்ப்பலி கொடுத்திருக்கிறார்கள். சிலர் பகைவர்களை வெற்றிகொண்டு தங்களுக்கு ஜயலக்ஷ்மியைச் சொந்தமாக்கியிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் தாங்கள் செய்திருக்கும் உதவி என்ன? இப்பொழுது நம் மதத்துக்கும் தெய்வத்துக்கும் நமக்கும் ஜன்ம விரோதியாகிய துருக்கவரசனுக்கு இந்தியாவில் இடம் கொடுத்து அவனுக்குச் சண்டையில் உதவி செய்வதற்கும் முன்வந்து விட்டீர்கள். இந்தியாவின் லாப நஷ்டம் இப்பொழுது நமக்குள் இருக்கின்றது. அரியணையில் இருந்துகொண்டு அதிகாரம் செய்யும் அரசர்கள் ஒருவர் இருவர் நீங்கலாக, மற்றமந்திரித் தொழில் முதல் மடைப்பள்ளித் தொழில்வரையில் எல்லா வேலைகளையும் ராஜபுத்திர வீரர்களும் இந்தியர்களும் தங்



கள் தங்கள் யோக்கியதைக்குத் தகுந்தபடி ஒவ்வொன்றைக் கைக்கொண்டு வருகிறார்கள். எத்தனை விதத்தில் யோசித்துப் பார்த்தாலும் நம் இந்தியாவின் செல்வம் இந்தியாவுக்குள்ளேயே செலவிடப் பட்டுவருகின்றது. சந்ததி நசித்தல் முதலிய காரணங்களைக் கொண்டு அரசுரிமையும் பிறவும் அவர்களுக்கு அடுத்தவார்ஸுகள் அடைந்து வருகிறார்கள். சுற்றிச் சுற்றி வளைந்துவந்தாலும் பண்டைக் காலம் தொட்டு நம் பாரதமாதாவின் பாக்கியம் வெளியேறிச் சென்றது கிடையாது. இப்பொழுது தாங்கள் நம் பாரத மாதாவின் அருமைச் செல்வங்களை அநியாயமாக அந்நியனொருவனுக்குத் தாரைவார்க்கத் தலைப்பட்டு விட்டீர்கள். இவனுக்குச் சற்று முன்பு நம் இந்தியாவுக்கு வந்த முகம்மது கஜினி கொள்ளையடித்துக் கொண்டுசென்ற செல்வங்கள் எங்கேயிருக்கின்றன? இந்தியாவுக்கு உபயோகப்படுகின்றனவா? அல்லது உபயோகப்படலாம் என்ற யோசனைக்காவது இடம் கொடுக்கின்றனவா? அந்தச் செல்வங்களை எத்தனை இந்தியர்கள் நெற்றித் தண்ணீர் நிலத்தில் சொட்டச் சொட்டப் பாடுபட்டுத் தேடியிருப்பார்கள். போதாக்குறைக்குச் சோமநாத் முதலிய தேவாலயங்களையும் இடித்துப் பொருள்களைச் சூறையாடிச் சென்றுவிட்டானே; அப்படிப்பட்ட ஜன்ம விரோதியின் வம்சத்திற் பிறந்துவந்த ஒருவனைத் தாங்கள் தூதனுப்பியும் வரவழைத்திருக்கின்றீர்களல்லவா? இந்த விடத்தில் இவன் முதற்றடவையிற் செய்த யுத்தத்தைத் தாங்கள் கண்காக்ஷியாய்ப் பார்த்துக் கொண்டிருந்தது தருமமாகுமா? அந்நிய நாட்டானை நம் ஜன்மபூமிக்குள் அழைத்துக்கொண்டு வந்து அவனுக்கு இந்தியாவைச் சொந்தமாக்கி விடுவதற்காகவா தாங்கள் குடிகளிடத்தில் வரிப்பணம் வசூலித்துக் கொண்டு

அவர்களுக்கு அரசனாக இருக்கிறீர்கள்? பிருத்விராஜர் ஆதிமுதல் தங்களுக்குச் செய்த அக்கிரமம் என்ன? தங்கள் அசுவமேதத்துக்கு அவர் வராவிட்டால் அவரைப்போலப் பிரதிமைசெய்து சபைவாயிலில் நிறுத்தி வைப்பது தருமமாகுமா? தாங்கள் ஒரு ராஜபுத்திர வீரரல்லவா? தங்களுக்கு அவர்மீது அசூயை மேற்கொண்ட ஆத்திரம் இருக்கும் பக்ஷத்தில் ஏன் சண்டை முன்னிலையில் அதனை நிறைவேற்றிக்கொண்டிருக்கக்கூடாது? நேற்று இந்த ஆப்கானிய வீரனை நம் பாரத மாதாவின்மீது பரிந்து அவர் படாதபாடும் பட்டு உயிருக்குத் துணிந்து அடித்து ஓட்டியதற்குத் தாங்கள் செய்த வெகுமதி, மீட்டும் அந்த முரட்டுத் துருக்கனை வரவழைத்து அவர்மீது சண்டைக்கு விட்டதோடு இராஜபுத்திர வீரர்களை உதவிசெய்ய வொட்டாமலும் பிரித்துவிட்டதைத் தவிர வேறென்ன விருக்கின்றது? இதனால், இந்தியாவுக்கு நேரிட விருக்கின்ற எதிர்காலத் தீங்குகளை யோசித்துப் பார்த்தீர்களா? அரசசிங்கமே! இனியாவது முரட்டுத் துருக்கர்களின் சகவாசத்தை அறவொழித்து நம் ஜன்ம பூமியாகிய பாரதமாதாவுக்குத் துணைசெய்ய எழுந்திருங்கள். சோம்பி யிருப்பதற்கு இது சமயமன்று." என்று அவர்மனம் உளையும் வண்ணம் கூறினான்.

வீரனுடைய ஒவ்வொரு வசனமும் ஜயசந்திரருக்குப் பகைவனா லெறியப்பட்டுத் தன் மார்பில்வந்து தாக்குகின்ற ஒவ்வொரு வேலாயுதம்போல உபத்திரவத்தை உண்டுபண்ணிற்று. அவர் ஒரு சித்திரப் பதுமையைப்போல் அவ்வளவையும் காதுகொடுத்துக் கேட்டுக்கொண் டிருந்தார். பதில் சொல்வதற்கு ஒன்றும் தோன்றவில்லை. மிகவும் பரிசுத்தமான அந்த வீரன் வசனத்தை அவர் எங்ஙனம் மறுக்க



முடியும்? கடைசியில் "சிறுவனே! என்முன் இவ்வளவு தூரம் துணிந்துபேசிய உன் தைரியத்தைக் கொண்டே நீ ஒப்புயர்வற்று விளங்குகின்ற ஒரு வீரபுருஷன் என்பதிற் சந்தேகமில்லை. ஆனால், உன் குரலைமாத்திரம் நான் நெடுநாள்களாய்க் கேட்டுக்கொண்டிருந்த ஒரு பழங்குரல் என்று நினைக்கிறேன். ஆதலின், உன்னை இன்னானென்று முதலில் தெரிவித்துக்கொள்" என்றார். வீரன் கொஞ்சநேரம் யோசனைசெய்து தன் மேலாடையைக் களைந்து சம்யுக்தா தேவியாகமாறி அவரைப்பணிந்து நின்றான். தான் என்றும் எதிர்பாராதவிதம் தன்னை நெடுநாள்களாக விட்டுப்பிரிந்த தன் அரிய ஏகபுத்திரி ஆபத்து என்கிற கொடிய யுத்தகளத்தில் புகுந்து தன் ஜன்மபூமியின்மீது வைத்த அபிமானத்தினால் தன்னை வந்து கண்டு இவ்வளவு தூரம் பேசியதற்கு அவர்மனம் உருகியே போய்விட்டது. அந்த மனம் இருப்பதாக அவருக்கு எவ்வளவும் தோன்றவில்லை. தரையை நோக்கியவண்ணம் மௌனமா யிருந்துவிட்டார். சம்யுக்தா அப்பொழுதும் விடாமல் "தந்தையே! ஒன்றும் [illegible] வில்லை. கடமை நியாயம் என்ற இரண்டையும் கடைப்பிடித்து உண்மை மார்க்கத்தைச் சீக்கிரம் கைப்பற்றுங்கள். உலகத்தில் மனிதன் இறந்து விட்டாலும் அவன் செய்த காரியங்கள் என்றும் அழிவுபடமாட்டா. என்றும் இருந்து கோர நரகத்தை உண்டாக்குகின்ற லோகாபவாதமாகிய தீச்செயலுக்குத் தங்களை உள்ளாக்கிக்கொள்ள வேண்டாம். முன்பெல்லாம் தங்கள் அன்புக்குப் பாத்திரமாயிருந்த தங்கள் புத்திரி வேண்டிக்கொள்ளும் உயர்ந்த வரம் இதுதான்." என்று கல்லும் கரையக் கூறினாள். அரைமணி சாவகாசத்துக்கு அதிகமாகவே ஜயசந்திரர் யோசனையில் ஆழ்ந்திருந்தார். பின்பு அவர் "உன்

வசனம் அவ்வளவும் உண்மையானதுதான். பிருத்விராஜன்மீது காரணமின்றி எழுந்த பொறாமைப் பேய் வலுவடைந்து என்னை இங்ஙனம் ஆட்டுவிக்கின்றது. அதற்குமுன் என் நினைவுகள் அழிந்து போகின்றன, இப்பொழுது எல்லாம் தீர்ந்துவிட்டது. இனி என் தீர்மானங்களை மாற்ற முடியாது. தெய்வசம்மதம் போல யாவும் நடந்தேறட்டும்" என்றுவிடையளித்தார். அதைக்கேட்டதும் சம்யுக்தாதேவி கொண்ட கோபத்துக்கு எல்லையேயில்லை. யானையை எதிரில்கண்ட ஒரு சிங்கம்போலக் கர்ஜ்ஜித்துக்கொண்டு "ஐயா! தாங்கள் பரிசுத்தமான ராஜபுத்திர வம்சத்தைக் கெடுக்கப் பிறந்த கோடரிக்காம்பாயிருக்கிறீர்கள். தங்களுக்குப் புத்திரியாய்ப் பிறக்க நேர்ந்த என் ஊழ்வினையை மிகவும் வெறுக்கிறேன். "தீங்கினர் தம் கண்ணிற்றெரியாத தூரத்தில் நீங்குவதே நல்லநெறி." என்பதுபோல இனித்தங்களை எதிரிற் காணவும் நான் பயப்படுகிறேன். தங்கள் வயிற்றிற் பிறந்ததனாலுண்டாகிய பெரும்பாசம் என்னை இங்ஙனம் யுத்தபூமியில் ஆயிரக்கணக்கான போர்வீரர்களுக்கு இடையில் நுழைந்துவரச் செய்தது இதனுடன் என் கடமை முடிந்துவிட்டது. இந்தயுத்தத்தில் தாங்கள் வெற்றியடைந்தாலும் டெல்லிப் பட்டணமும் அதைச் சார்ந்த நாடுகளும் தங்களுக்கு ஒருபொழுதும் சொந்தமாகப் போவதில்லை. எங்களுக்குப் பின்பு துருக்கன் தங்களையும் கொன்றுவிட்டுத் தானே எல்லாவற்றையும் கைகொள்ளப் போகிறான். இது நிச்சயம்" என்று சொல்லிப் பழைய போர்வீரனைக உருமாறிச் சம்யுக்தாதேவி முன் வந்தவழியே பிருத்விராஜாவின் பாளையம் வந்து சேர்ந்தாள்.

உடனே இருதிறத்தாருக்கும் மிகவும் பயங்கரமான யுத்தம் நடந்தேறிற்று. சம்யுக்தாதேவி தன் புருஷனுக்குத் தெரியாமலேயே ஒரு போர்வீரனாகிக் குதிரையேறிச் சண்டையில் பிருத்விராஜாவைப் பின்பற்றினாள். இரண்டு தடவை பகைவரிடத்தில் அகப்பட்டுக் கொள்ளவிருந்த தன் ஆருயிர்த்தலைவனைப் பின்னின்று காப்பாற்றினாள். பிருத்விராஜர் அவனை ஒரு போர்வீரனென்றே மதித்து அவன் தன் உயிரைக் காப்பாற்றிய வீரச் செயலுக்கு வியந்து இரண்டு பெரிய வெகுமதிகள் செய்தார். மூன்றாவது தடவை குதிரைமீதேறி பிருத்வீ ராஜாவைத் தொடர்ந்து கொண்டு பின்புறத்தில் எவரும் அணுகாவண்ணம் எதிர்த்தவர்களை வெட்டிச்சாய்த்துப் பாதுகாத்துச் செல்கின்ற ஆண்வேஷம் புனைந்த சம்யுக்தாதேவியின் வலக்கரத்தைப் பின்புறமாய்ப் பதுங்கி வந்த ஒரு திருட்டுவீரன் அந்தோ! அநியாயமாக வெட்டி வீழ்த்தி விட்டான். கடலைக் கிழித்தோடும் கப்பலைப்போல் பகைவர் சேனைகளை வெட்டிவீழ்த்திய வண்ணமே முன்னோக்கிச் சென்றுகொண்டிருக்கின்ற பிருத்விராஜாவுக்குத் தன் ஆருயிர்க் காதலியாகிய மெய்க்காப்பாளனுக்கு நேர்ந்த ஆபத்து கொஞ்சமும் தெரியமாட்டாது. மகாதீரத்தோடு பகைக்கடலைக் கலக்கிக் கொண்டு முன்னுக்குச் செல்கின்ற பிருத்விராஜாவின் உற்சாகம் நிறைந்த மனம் அதைக்கண்டால் துக்கத்தில் அமிழ்ந்துவிடும் அல்லவா? அந்தக் காலத்தில் அதைத் தெரிவிப்பது அநுசிதம் என்பது அவளுக்கு நன்றாய்த் தெரியும். அதனால், அவள் ஒன்றும் சொல்லவில்லை. சம்யுக்தாதேவி அறுந்த கரத்திற் பற்றிக்கொண்டிருந்தவாளை இடக்கரத்திற்கு மாற்றி அவரைத் தொடர்ந்து சென்று அந்தக்கரத்தாலும் அநேகம் சூரர்களை வெட்டிவீழ்த்தினாள். சற்றுநேரத்துக்குள் சத்துருக்கள் வஞ்சனையால் அந்தக்கரமும் அவளைவிட்டு நீங்கிற்று. இனித் தன்னால் கொஞ்சமும்

உதவி செய்வதற்கில்லை என்பதை அவருக்குத் தெரிவித்து விடலாம் என்று 'அரசசிங்கமே!' என்று கூப்பிட்டான். அதேசமயத்தில் தன் மார்பிற் றாக்குண்ட வேலினால் 'ஹா! பிராணநாதா! என்று சொல்லிக் கொண்டே குதிரையிலிருந்து கீழேயும் விழுந்து விட்டாள்.

தன் மெய்க்காவலன் குரல் கேட்டமாத்திரத்தில் பிருத்விராஜர் உடனே திரும்பி நோக்கினார். அந்தோ! என்ன கஷ்டம்? உடனே குதிரையை விட்டுக் கீழே குதித்து அவன் சமீபம் அடைந்தார். அப்புறம் அவருக்கு அந்த வீரன் தன் உண்மைமனைவி யென்று தெரிந்துகொள்ள நாழிகை செல்லவில்லை. சம்யுக்தாதேவியை அணைத்துக் கொண்டு "பிராணநாயகி! பெண்கள் பலரும் உன்னைப் போலவே இவ்வளவு அபிமானத்தையும் வீரத்தையும் உடைத்தாயிருப்பார்களானால் நம் இந்தியா என்றும் துருக்கர்களுக்கு வசப்பட மாட்டாதே. அந்தோ! இந்தியமாதாவே! நீண்ட காலமாக உத்தம க்ஷத்திரியர்களுக்கே வாழ்க்கைப்பட்டு வந்த நீ இப்பொழுது முரட்டுத்துருக்கன் வசத்தில் அடங்கியிருக்கப் போகிறாய். நான் என்னசெய்யட்டும். ? உன்னைக் காப்பாற்றுவதற்குச் செய்த முயற்சிகளில் ஒன்றும் அநுகூலிக்க வில்லை. உன்னிற் பிறந்த நான் உன் பொருட்டு என் உயிரைத் தத்தம்செய்து விடுகிறேன். இனி அவ்வளவுதான் என்னால் முடிந்தது. என் உயிர்த்தலைவி சம்யுக்தாதேவி உன்னை மீட்பதற்கென்று ஆண் வேடம் புனைந்தும் யுத்தம்செய்து இதோ உயிர்துறந்துவிட்டாள். கேவலம் ஒரு பெண்ணுக்கிருந்த அபிமானமும் வீரமும்கூட ராஜபுத்திர வீரர்களுக்கு உண்டாகவில்லை. சம்யுக்தா! உன் வீரச்செயலைக்கண்டும் அவர்களுக்கு வெட்கம்



உண்டாக வில்லையே. என்பொருட்டும் பாரதமாதாவின் பொருட்டும் உயிர் துறந்து எனக்கு முன்பு நீ வீரசுவர்க்கம் சென்று என் வருகையை எதிர் நோக்கியிருக்கிறாய். இனி நான் எங்ஙனம் இங்கு இருக்கமுடியும்? ஆதலால் இதோ வந்து உன்னைத் தழுவிக்கொள்கிறேன்." என்று உரைத்துச் சம்யுக்தா தேவியின் பிணத்தை விட்டுக் குதிரையேறிப் பகைவர்களைக் கொன்று கொண்டே அந்த யுத்தகளத்தில் கௌரவமாக மரணமடைந்தார். பின்பு மகம்மதுகோரி தனக்கு அவ்வளவு உதவிசெய்த ஜயசந்திரரையும் சிறைச்சாலையில் அடைத்துக் கொன்று அவர் தேசத்தையும் கைக்கொண்டு விட்டான்.

---

## ரீஜியா.

---

மகம்மது கோரிக்குப் பிறகு அவன் சந்ததிகளுக்கு இராஜ்யம் கிடைக்கவில்லை. அவன் அடிமைகள் அரசரானார்கள். அந்த அடிமைகளுக்குள் முதலரசர் குதுப்உடீன். இவர் டெல்லியில் குதுப்மைனார் என்ற ஒரு உயர்ந்தஸ்தூபியைக் கட்டிமுடித்தார். இவருக்குப் பின்பு பட்டத்துக்கு வந்தவர்களில் தமஷ் என்ற அரசர் ஒருவர். இவருக்கு ஆண்சந்ததி கிடையாது. ஒரேயொரு பெண் இருந்தாள் அவளுக்கு ரீஜியா என்றுபெயர். அவள் பிறப்பினால் பெண் பிள்ளையாயிருந்தாலும் தைரியம் விவேகம் கலங்காதமனம் முதலியவற்றில் ஆண்மக்களை மிஞ்சி விளங்கினாள். யாவராயினும் ஒருதடவை கண்டுவிட்டால் அவர்கள் அறிவுகலங்கி அடியில் விழ்ந்து பணிந்து நிற்கும்படி அவள் இயற்கை

யழகு பொருந்தி யிருந்தது. இராஜ்ய வியவஹாரம் ஒவ்வொன்றையும் அவள் உண்மையில் கண்டறிந்து அனைவரும் அங்கீகரிக்கும் வண்ணம் சாதுரியமாய்ச் சமாதானம் சொல்லி அடக்கிவிடுவாள். எப்படிப்பட்ட கொடுந்தன்மை உள்ளவர்களானாலும் தன்னைக் கண்டமாத்திரத்தில் அவர்கள் முரட்டுச் சுவபாவங்களை அனைவருக்கும் முன்னிலையில் அப்பொழுதே மாற்றித் தன் கட்டளையை அங்கீகரிக்கச் செய்து கொள்வாள். இதனால் தமஷ் அரசர் 'ரீஜியா ஒருத்தியே தனக்கு இருபது ஆண்பிள்ளைகளுக்குச் சமானம்' என்று அரசர் சபையில் அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பார்.

தன்தந்தை கிழப்பருவத்துக்கு அடிமையான பிறகு ரீஜியா சிங்காதனத்துக்குத் தலைவியானாள். பெண் வேஷத்தோடு சிங்காதனத்தில் அமர்ந்து இராஜ்ய வியவஹாரங்களை நடத்துவதில் சிலருக்கு அலக்ஷ்யம் உண்டாகும் என்று ரீஜியா ஆண்வேஷம் தரித்து அனைவரும் கொண்டாடும்வண்ணம் இராஜ்ய பரிபாலனத்தை நடத்திக்கொண்டு வந்தாள். அநேக நற்குணங்கள் அவளுக்குச் சொந்தமாயிருந்தன. தற்புகழ்ச்சி வீண்பெருமை வஞ்சனை முதலிய பைசாசங்கள் அவளை என்றும் தொடர்ந்தது கிடையாது. வழக்குகளைத் தானே நேரில் விசாரித்தும், சட்டங்களைச் சீர்ப்படுத்தியும், குடிகள் குறைகளுக்குச் செவிகொடுத்துக் கேட்டு அவற்றைக் கருணைகொண்டு நீக்கியும் வந்ததுபற்றி அந்தக்காலத்து மனிதர்களாலும் சிற்றரசர்களாலும் மிகவும் புகழப்பட்டு வந்தாள். அவள் ஒரு சுத்தவீரனை ஆண்பிள்ளையைப்போலத் தேசத்தைப் பரிபாலித்து வந்தது பற்றிப் பிரபுக்களால் அவளுக்குச் சுல்தானா என்ற பட்டம் கொடுக்கப்பட்டது. சிற்சில இரவுகளில் அவள் பொய் வேஷம் புனைந்து உண்மையைக்கண்டறிவதற்குத் தன் பட்டணத்தில் திரிந்து வருவதும் உண்டு. பின்பு தன் பிரபுக்களில் ஒருவர் கலகம்செய்ய ரீஜியா அதை அடக்க முயலுகையில் சிறைப்பட்டு அநியாயமாய்க் கொல்லப்பட்டாள். 'என் மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் நீதியைச் செலுத்தியிருக்கிறேன். பொய்வேஷம் புனைந்த உங்கள் முன்னிலையில் நான் அநியாயம் செய்தவளாக எண்பிக்கப் பட்டாலும் சர்வ வல்லமையுள்ள கடவுள் சந்நிதியில் நான் சிலாகிக்கப்படுவது நிச்சயம். என் மரணத்தால் எனக்கு எள்ளளவும் துக்கம் கிடையாது. சந்தோஷமாய் ஒப்புக்கொள்கிறேன்' என்று ரீஜியா தான் இறக்கும் தருணத்தில் கூறினாள். நன்மையைக் கடைப்பிடித்து அநியாயத்துக்குப் பயந்து இறந்த ரீஜியாவின் புகழ் இன்னமும் ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கின்றது. சில காலத்துப் பின்பு அடிமையரசர்கள் இருந்தவிடமே தெரியவில்லை. அவர்களுடைய ராஜ்யம் கில்ஜி வம்சத்தார்களுக்குச் சொந்தமாய் விட்டது.



---

## பத்மினி.

---

கில்ஜி வம்சத்தில் மிகுந்த பராக்கிரமமும் சாமர்த்தியமும் உள்ள அரசன் அல்லாவுடீன். அவன் அநேக தேசங்களை ஜயித்து டெல்லிப்பட்டணத்தை ஓங்கி வளரச் செய்தான். இவன் காலத்தில் மீவார் ராஜ்யம் ராஜபுத்திர அரசர்களால் பரிபாலிக்கப்பட்டு மகா உன்னத பதவியை அடைந்திருந்தது. மீவார் ராஜ்யத்துக்குச் சித்தூர் இராஜதானி.

துருக்கர்களின் கொள்ளைக்கும் கொடுங்கோலுக்கும் பயந்த பிரபுக்களும் உயர் குலத்திற் பிறந்த உத்தமர்களும் சித்தூரில் வந்து தங்கினார்கள். சித்தூருக்குச்சொந்தவரசர் இலக்ஷ்மண ஸிங்கு. அவர் இளமைப்பருவமாயிருந்தபடியால் சிறிய தந்தையாகிய பீமஸிங்கு இராஜ்யத்தைப் பரிபாலித்துக்கொண்டு வந்தார். பீமஸிங்குக்குப் பத்மினி என்று ஒரு மனைவியிருந்தாள். அவள் அழகு இந்தியா முழுவதும் பரவியிருந்தது. ஆகாயத்தில் அநேக நக்ஷத்திரங்களுக்கு நடுவில் சந்திரன் விளங்குவது போலப் பத்மினி தன் அழகு ஒழுக்கம் முதலியவைகளால் பெண்கள் பலருக்கும் சூளாமணியாக விளங்கினாள். இந்தியாவின் எந்த மூலையிலும் பத்மினியின் பேரழகே பேசப்பட்டு வந்தது. பீமஸிங்கு தன் மகன் இராஜ்யத்தைச் சண்டை சச்சரவின்றி அமைதியும் நீதியும் நிலைத்து நிற்கும்வண்ணம் பரிபாலித்துக் கொண்டு வந்தார்.

அல்லாவுடீன் வட இந்தியாவின் நாடு நகரங்களையும் கோயில் குளங்களையும் கொள்ளை யடித்துக்கொண்டு நாசமாக்கி வருகையில் பத்மினியின் பேரழகைப் பலரும் வியந்து கூறக்கேட்டான். அவ்வளவுதான் தாமதம். உடனே பத்மினியைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்று அவனுக்கு எண்ண முண்டாய் விட்டது. அதிகாரமும் ஆண்மையும் கையிலிருக்கும் பொழுது அஞ்சியிருக்க முடியுமா? அதனால், அப்பொழுதே மீவார் ராஜ்யத்துக்குச் சென்றான். அந்த இராஜ்யத்தின் ஆளுகை சேனாபலம் ஒற்றுமை முதலியவற்றைக்கண்டு வியந்து அதை எதிர்த்துப் போர் செய்வதற்குத் தன்னால் முடியாதென்று நன்றாய்த்தெரிந்துகொண்டு விட்டான். ஆனாலும், பத்மினியைப் பற்றிய எண்ணத்தை மாத்திரம் மாற்றிக்கொள்ள அவனால்



முடியவில்லை. 'சில கெட்ட நடவடிக்கையுள்ள பெண்களின் தந்திரத்தினால் பத்மினியை அடையப்பார்க்கலாம்' என்று தன் உண்மைக்காதலை இராணி பத்மினிக்கு அவர்கள் மூலமாய்த் தெரியப்படுத்திக் கொண்டான். பத்மினியின் மனத்தைக்கலைத்து வசப்படுத்தும் அற்புத சக்தி அந்த அநாசாரப் பெண்களுக்கு எங்கிருந்து கிடைக்கும்? முதலில் அவளை நெருங்கிப் பேசுவதற்கே அச்சமடைந்தார்கள். அல்லாவுடீன் ஒரு மாதம் வரையில் பிரயத்தனம் செய்தும் அந்த உபாயம் பலன்தராமையால் தண்டோபாயத்தினால்தான் வசப்படுத்த வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு பலமான சேனா வீரர்களோடு வந்து சித்தூரை முற்றுகை செய்தான். மீவார் தேசத்து ராஜ புத்திர வீரர்கள் தைரியசாலிகள். யுத்தத்தில் தங்கள் உயிரைக் கொஞ்சமும் மதிக்க மாட்டார்கள். தேசாபிமானமும் இராஜ பக்தியும் மேற்கொண்டவர்கள். தங்கள் உயிர் இருக்குந்தனையும் தங்கள் இராஜ்யத்தில் துருக்கனுக்கு இடம் கொடுக்கக்கூடாதென்று எல்லோரும் ஆயுதபாணிகளாய் எதிர்த்து நின்றார்கள். அல்லாவுடீனும் 'அடைந்தால் பத்மினியை அடைவது; இல்லாவிட்டால் வீரசுவர்க்கம் அடைவது' என்று தீர்மானித்துக்கொண்டு விட்டான். ஜயாபஜயம் என்பது சிறிதும் இல்லாமல் அந்த யுத்தம் பதினெட்டு மாதத்துக்கு அதிகமாக நடந்தது. வீரர்கள் சண்டை செய்து செய்து அலுத்து விட்டார்கள். அநேகர் வீரசுவர்க்கத்தை அலங்கரிக்கச் சென்றார்கள். அதனால், துருக்கவரசனுக்கு வெற்றி கிடைக்கும் என்று எள்ளளவும் நம்புவதற்கு இடமில்லாமற் போய் விட்டது. வஞ்சனையில் தேர்ந்தவனாதலால் தன் சூது மார்க்கத்தினால் சித்தூரையும் பத்மினியையும் ஜயித்து விட வேண்டும் என்று நினைத்து 'ராணி பத்மினியை ஒரு

தடவை கண்ணுற்காண அனுமதி கொடுத்தால் அவ்வளவில் திருப்தி யடைந்து சேனைகளோடு தன் பட்டணத்துக்குத் திரும்பிச்சென்று விடுவதாக பீமஸிங்குக்குத் தூதுபோக்கினான். இராஜ புத்திரர்கள் அதற்குக் கொஞ்சமும் ஒப்பவில்லை. யுத்தம் செய்து அவனைக் கொல்வது தான் தருமம் என்றுஉரத்துக் கூவினார்கள். அவர்கள் அபிப்பிராயத்தில் பீமஸிங்குக்குச் சம்மதமில்லை.

அவர் இராஜபுத்திர வீரர்களை நோக்கிச் “சூரர்களே! சற்றுக் கவனியுங்கள். இந்த யுத்தம் தொடங்கியது இன்று நேற்றன்று; பதினெட்டு மாதங்களுக்கு அதிகமாகின்றது. இதுவரையில் ஜயத்தை ஒருவரும் கண்டுபிடிக்கவில்லை. அல்லாவுடீனும் சாமானியனன்று. பெரிய சூரன். இத்தனைநாளும் உங்களோடு எதிர்த்துப் போர் செய்ததனாலேயே அவன் பராக்கிரமம் எளிதில் அறிந்துகொள்ளலாம். நீடித்த யுத்தத்தினால் பொக்கிஷங்கள் வரவரக் குறைந்துகொண்டு வருகின்றன. இன்னும் சில மாதங்கள் காறும் இந்தயுத்தம் இப்படியே நடந்து வருமானால் அன்னபானாதிகளுக்கும் கஷ்டப்பட நேரிடும். நம் அரசனோ இன்னும் இளமைப் பருவத்தில் இருக்கிறான். என் மனைவியின் பொருட்டு இந்தச் சண்டை தொடங்கப்பட்டதேயன்றி இராஜாங்க சம்பந்தமாகத் தொடங்கப்படவில்லை. நான் ஒருபிரதிநிதி. ஒருவன் அல்லது ஒருத்தியின் நிமித்தம் பலவீரர்களைச் சண்டையில் உயிர்ப்பலி கொடுக்கச் செய்தலும் பொக்கிஷங்களையும் களஞ்சியங்களையும் செலவு செய்து பாழாக்கிக் கொள்ளுதலும் தருமமன்று; பீமஸிங்கு தன்மனைவிக்காக மீவார்; ராஜ்யத்தைப் பாழ்செய்து விட்டான் என்று எழும்பப் போகின்ற வசைச் சொல்லுக்கு என்னை என்றும் உள்ளாக்கிக்



கொள்ளமாட்டேன். என் வசனத்தைக் கேளுங்கள். அந்தத் துஷ்டன் ராணிபத்மினியை என்றும் ருஜுவிற் காணமுடியாது. வேண்டுமானால் கண்ணாடியில் அவளுடைய பிரதிபிம்பத்தைக் கண்டுசெல்லட்டும். இந்த ஏற்பாட்டையும் ராணி பத்மினி அங்கீகரிப்பது கடினம். இராஜாங்கத்துக்கு நேரிடும் கஷ்டங்களை எடுத்துக்கூறி ஒப்பச்செய்யலாம் என்று நினைக்கிறேன்.” என்று சொன்னார். பீமஸிங்கினுடைய சுத்த ஹ்ருதயத்துக்கு மந்திரிகளும் வீரர்களும் வியந்துகொண்டாடி அந்த யோசனையை அங்கீகரித்தார்கள்.

பின்பு அல்லாவுடீனுக்குத் தூது அனுப்பப்பட்டது. ஒன்றுமே பதில் கிடைக்காதென்று நினைத்துக் கொண்டிருந்த துருக்கவரசனுக்குப் பிரதிபிம்பத்தை யாவது கண்டு செல்லக் கிடைத்தது அதிர்ஷ்டமல்லவா! உடனே அந்த ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொண்டவனாய் ஒரு நாள் மாலை அவசியமான மூன்று மெய்க்காப்பாளர்களுடன் பீமஸிங்கின் அரண்மனைக்கு வந்து ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ராணி பத்மினியின் பிரதிபிம்பத்தைக்கண்டு மிகவும் ஆச்சரியமடைந்தான். அவனுக்குப் பீமஸிங்கினால் யுக்தப்படி மரியாதை செய்யப்பட்டது. பின்பு துருக்கவரசன் அவரை நோக்கி “ஐயா! நான் அதிக திருப்தியடைந்து விட்டேன். பெருந்தன்மையும் பராக்கிரமமும் நிறைந்த தங்களோடு காரணமின்றிப் போருக்குவந்து வீண் சிரமத்தையும் வருத்தத்தையும் உண்டாக்கிய என்னை மன்னிக்க வேண்டும். இனி என் உயிர் உள்ளவரையிலும் நான் தங்கள் சிநேகிதன் என்பதை நிச்சயமாய் நம்புங்கள். தங்கள் தேசாபிமானத்தையும் பெரும்புகழையும் கேள்விப்பட்டிருந்தால் முன்னரே சிநேகம் செய்து கொண்டிருப்பேன். நம்

இருவருக்கும் இன்றுடன் விரோதம் ஒழிந்தது. இனி நமக்குள் வித்தியாசம் கிடையாது" என்று சொல்லிப் பீமஸிங்கின் கரத்தைப் பிடித்துக்கொண்டு 'தாங்கள் நாளை கட்டாயம் என் விடுதிக்கு வந்து என்னைக் கனப்படுத்தவேண்டும். நாளை மாலை என் கூடாரத்தில் தங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்' என்றான். தன்னைப்போலவே அனைவரும் கௌரவமான புத்தியுள்ளவர்களென்று நினைத்துக் கொண்டிருக்கின்ற பீமஸிங்கு அப்படியே வருவதாகச் சொல்லி அல்லாவுடீனுக்கு விடை கொடுத்தனுப்பினார். இராஜபுத்திர வீரர்களும் சண்டை ஒருவாறு தொலைந்ததென்று சந்தோஷப்பட்டார்கள்.

பீமஸிங்கு இரண்டு ஸர்தார்களோடு மற்றைநாள் மாலை அல்லாவுடீன் இறங்கியிருக்கின்ற கூடாரத்துக்குச் சென்றார். அவ்வளவுதான் தாமதம்; அப்பொழுதே ஸர்தார்களையும் பீமஸிங்கையும் பிடித்துச் சிறைப்படுத்திவிட்டு "ராணி பத்மினியைத் தனக்கு ஒப்புவித்து விட்டாலன்றிப் பீமஸிங்கும் ஸர்தார்களும் உயிரோடு திரும்பமுடியாது; யுத்தமும் நிறுத்தப்படமாட்டாது; மூன்று நாள் சாவகாசம் கொடுத்திருக்கிறேன்" என்று அல்லாவுடீன் சித்தூருக்குச் செய்தி யனுப்பினான். ராணி பத்மினிக்கு அல்லாவுடீன் செய்தி அறிவிக்கப்பட்டது. அவளுக்குப் பன்னிரண்டு குழந்தைள் இருந்தார்கள். அவள் உடனே ராஜசபைக்கு வந்து அனைவரையும் நன்றாய்க்கலந்து ஆலோசனை செய்தாள். மற்றை நாள் அல்லாவுடீன் விடுதியில் ராணிபத்மினி துருக்கவரசனைச் சேர்ந்துவிடப் போகிறாள் என்றும், பீமஸிங்குக்கு அதனால் சிறை மீட்சி உண்டாகப்போகின்றதென்றும், ஸர்தார்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அல்லா



வுடீன் அன்றுகொண்ட ஆனந்தத்துக்கு அளவே கிடையாது. நூதன வஸ்திராபரணங்களினால் தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டிருந்தான். ஸர்தார்களும் வீரர்களும் குடித்துக் கூத்தாடிக் கொண்டிருந்தார்கள். மாலைப் பொழுதில் சித்தூர் அரண்மனையிலிருந்து அல்லாவுடீன் இறங்கியிருக்கின்ற பாளையத்துக்கு ஐந்நூறு பல்லக்குகள் எடுத்துக்கொண்டு வரப்பட்டன. எல்லாப் பல்லக்குகளும் திரைச்சீலையால் மூடப்பட்டிருந்தன. காவற்காரர்கள் முன்னிட்டே கட்டளை பெற்றிருந்தபடியால் பல்லக்குகளைத் தடைசெய்யாமல் உள்ளே விட்டு விட்டார்கள். அல்லாவுடீன் கரைகடந்த சந்தோஷத்தோடு தலைமைப் பல்லக்கின் எதிரில் வந்து நின்றான். அப்பொழுது "அரசரே! நான் தங்களைச் சுதாவில் வந்து அடைந்துவிட்டேன். தங்களுக்குச் சொந்தமானபின்பு மறுபடியும் பீமஸிங்கைப் பார்ப்பது கூடாது. ஆதலால், இப்பொழுது அவரைக்கண்டு என் வயிற்றிற் பிறந்த குழந்தைகளின் பாது காப்பின் நிமித்தம் இரண்டொரு சங்கதிகள் சொல்லிவிட்டு வருகிறேன். அது காறும் தாங்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று பல்லக்கிலிருந்து ஒரு குரல் உண்டாயிற்று. "இராணி பத்மினியவர்களுக்கு அல்லாவுடீன் அடிமை; அவன் இன்றுதான் புண்ணியம் செய்தவனானான். சீக்கிரம் பீமஸிங்கைக் கண்டுவர வேண்டும். அது காறும் இவ்விடத்திலேயே ஒவ்வொரு நிமிஷத்தையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்துக் கணக்கிட்டுக் கொண்டிருக்கிறேன்." என்று கூறினான்.

உடனே பல்லக்குகள் பீமஸிங்கு இருந்த கூடாரத்துக்குக் கொண்டு போகப்பட்டன. அங்குப் பீமஸிங்கு யுத்தகோலத்தோடு வந்திருக்கின்ற தன் மனைவியைக்கண்டு

திடுக்கிட்டு "என்ன இது! எதற்காக இங்கு வந்தாய்?" என்று கேட்கப், பத்மினி "நாதா! இப்பொழுது சொல்லச் சாவகாசமில்லை. குதிரைகள் தயாராயிருக்கின்றன. நம்மைக் காப்பதற்கு இதோ ஐந்நூறு ஸர்தார்கள் பல்லக்கில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். பல்லக்குப் போயிகள் அத்தனை பெயரும் சிப்பாய்கள்தான். அவர்கள் ஆயுதங்கள் பல்லக்கில் இருக்கின்றன. ஸர்தார்களோடு சீக்கிரம் எழுந்திருங்கள்" என்று கூறினாள். உடனே பீமஸிங்கு வெளியில் வந்து அங்கு நிறுத்தப்பட்டிருந்த குதிரைகளின்மீது நால்வரும் ஏறிக்கொண்டு எதிர்த்தவர்களைக் கொன்று கொண்டே சித்தூர் அரண்மனை போய்ச் சேர்ந்தார்கள். பீமஸிங்கும் ராணியும் ஸர்தார்களும் குதிரைமீது ஏறிக்கொண்டதும் ஒவ்வொரு பல்லக்கிலிருந்தும் ஒவ்வொரு ராஜபுத்திர வீரர்கள் ஆயுதபாணிகளாய்க் கீழே குதித்துச்சண்டை முடிந்து விட்டதென்று குடித்து மயக்கமடைந்திருந்த துருக்கப்படைகளை வெட்டி வீழ்த்திக்கொண்டே போயிகளாகிய சிப்பாய்களோடு முன் சென்றவர்களைப் பின்பற்றிச் சென்றுவிட்டார்கள். பத்மினி வருவாள் வருவாள் என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்த அல்லாவுடீனுக்கு நடந்த சங்கதிகள் வியக்தமாய் வெளியாயின. காமப்பேய் பிடித்துக்கொண்டவனுக்கு நல்லறிவு எங்ஙனம் கிடைக்கும்? மீட்டும் யுத்தம் செய்வதென்று அவன் தீர்மானித்துக் கொண்டான். பத்மினியின் நிமித்தம் ஆரம்பிக்கப்பட்ட அந்தக்கடுஞ்சண்டை மறுபடியும் ஐந்து மாதங்கள் வரையில் நடந்தது.

வெளியிலிருந்து ராஜதானிக்கு வந்து கொண்டிருந்த தானியங்களையெல்லாம் துருக்கர்கள் தமதாக்கிக் கொண்டு விட்டார்கள். நின்று தின்றால் குன்றும் குன்றுமல்லவா?



ஆதலால், களஞ்சியங்கள் பலவும் காலி செய்யப்பட்டன. யுத்தவீரர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு வேளைக்குமேல் ஆகாரம் கிடைப்பது அரியதாயிற்று. அந்த ஆகாரமும் பட்டணத்தில் வாழும் பெண்மணிகளின் பரோபகார குணத்தினால் கிடைக்கப்பட்டு வந்தது. அந்த ஸ்திரீக்கள் 'உண்டி சுருங்குதல் பெண்டிற்கழகு' என்ற அம்ருதவாக்கைப் பெரிதும் பாராட்டி விட்டார்கள். 'தங்களைத் துருக்கன் வந்து கற்பழித்தலைக்காட்டிலும் பட்டினிகிடந்து மரணமடைவது சர்வசிலாக்கியம்' என்று மிகவும் அற்பமான கஞ்சி முதலியவற்றைத் தாங்கள் உட்கொண்டு யுத்தவீரர்களுக்கு நல்ல சாப்பாட்டை உதவி உபசரித்தார்கள். இராஜபுத்திரர்கள் அந்த யுத்தத்தில் காட்டிய வீரத்தன்மை இப்படிப்பட்டதென்று சொல்லத்தரமன்று; என்ன செய்தும் என்ன? கடைசியில் பீமஸிங்கு முதலிய பலரும் தேசாபிமானத்துக்கும் இராஜவிசுவாசத்துக்கும் அறிகுறியாகக் கடுஞ்சண்டை புரிந்து அந்த யுத்தகளத்தில் சந்தோஷமாக மரணமடைந்து வீரசுவர்க்கம் அடைந்தார்கள்.

ராணி பத்மினி அந்தப்புரத்தில் நெருப்புக்குழி யொன்று பெரிதாகக் கெல்லி அதில் போதுமானவளவு தீயை வளர்த்தி மற்ற ராஜபுத்திர ஸ்திரீக்களை நோக்கிச் "சகோதரிகளே! மகா பாபியாகிய என்பொருட்டு நேர்ந்த இந்தக் கொடுஞ்சண்டையில் நம் நாட்டு வீரர்கள் பலரும் வீரசுவர்க்கம் அடைந்து நம் வருகையை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அங்குச்சென்று தழுவிக்கொள்வது கற்புப் பெண்களின் முதற்கடமையாகும். முரட்டுத் துருக்கனுக்கு நாட்டைப் பறிகொடுத்தது போலவே நம் மானத்தையும் பறிகொடுத்து விடாதபடி நாம் ஜாக்கிரதைப்பட

வேண்டும். அக்னிபகவான் நமக்கு அபயம் கொடுப்பதற்கு இதோ பிரஸன்னமாயிருக்கிறார். துருக்கர்கள் தொடர்ந்து வந்து நம்மைக் கைப்பற்றுவதற்கு முன்புநம்மைப்பரிசுத்தம் செய்து கொள்வது மேல். மானம் காத்துக்கொள்வதற்கு ஒவ்வொரு வரும் முந்திக்கொள்ளுங்கள். நல்வழியில் நடத்துதல் அரசியின் கடமை யாதலால் இவ்வளவும் உங்களுக்கு எடுத்துச் சொல்லலாயிற்று. இனி உங்கள் இஷ்டம்போல நீங்கள் நடந்து கொள்ளலாம். என் பிராண நாயகர் சென்ற விடத்தை நான் இதோ பின் பற்றப்போகிறேன். பரிசுத்தராகிய இந்த அக்னி பகவான் என் நாயகரிடத்தில் என்னைக் கொண்டு சேர்ப்பாரென்பது நிச்சயம்." என்று வழுதடவை அந்தத்தீயை வலம் வந்து மலர்ந்த முகத்தோடு அக்னியில் இறங்கி விட்டாள். ஆங்கிருந்த ராஜபுத்திர ஸ்திரீக்கள் பலரும் ராணி பத்மினியைப் பின்பற்றிக்கொண்டு அந்தத்தீயில் மூழ்கி விட்டார்கள். ஆ! என்ன கற்பு! என்ன தேசபக்தி!! என்ன ஒற்றுமை!!! சரித்திரத்தைப்படிக்கும் பொழுதே நமக்கு மனக்கிளர்ச்சி அதிகரிக்கின்றது.

---

## பாமினி ராஜ்யம்.

---

கில்ஜி வம்சத்தாருக்குப்பிறகு டோக்ளாக்கு வம்சத்தார் சக்கிரவர்த்திகள் ஆனார்கள். அவர்களில் முகம்மது டோக்ளாக் என்பவர் மிகவும் படித்தவர். ஆனால் அவர் அநேக மூடத்தனமான காரியங்களைச் செய்திருக்கிறார். அந்த அர



சர்களும் பலமில்லாதவர்களா யிருந்ததனால் நாளடைவில் துருக்கர்களுடைய ராஜ்யமே இந்தியாவில் க்ஷீணதசை அடைந்து விட்டது. இந்த சந்தர்ப்பத்தில் தக்ஷிணத்தில் இரண்டு ராஜ்யங்கள் வலுவடைந்துவந்தன. ஒன்று பாமினி ராஜ்யம். மற்றொன்று விஜயநகர ராஜ்யம். பாமினிராஜ்யத்தைக் கண்டு பிடித்தவன் சரித்திரம் மிகவும் வேடிக்கையாயிருக்கும்; அதைச் சொல்கிறேன் கேளுங்கள்.

முகம்மது டோக்ளாக்கு அரசனோடு காங்கு என்ற ஒரு பிராமணர் சிநேகம் செய்துகொண் டிருந்தார். அவருக்கு ஒரு வேலைக்காரன் உண்டு. அவன் பெயர் ஹாஸன். மிகவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன். ஒருநாள் ஹாஸன் நிலத்தை உழுதுகொண் டிருக்கையில் புதையல் ஒன்று அகப்பட்டது. அவன் உண்மைநெறி யுள்ளவனானதனால் அகப்பட்ட புதையலை அப்படியே எடுத்துக் கொண்டுவந்து யஜமானனிடம் கொடுத்தான். காங்குவுக்கு ஹாஸன் ஒழுக்கத்தில் மிகவும் மதிப்புண்டாயிற்று. அதனால், அவனுக்கு ராஜாங்கத்தில் ஒரு உத்தியோகம் செய்துவைத்தார். ஹாஸனும் தன் பரிசுத்தமான பரோபகார குணத்தினால் வேலையில் உயர்த்தப்பட்டு நாளடைவில் உயர்ந்த தலைவனாய் விட்டான். முகம்மது டோக்ளாக்கின் மூடத்தனத்தினால் அவன் காலத்திலேயே அநேகம் ராஜ்யங்கள் சுவயாதீனம் அடைந்து விட்டன. அவற்றில் ஹாஸன் தக்ஷிணத்தில் ஸ்தாபித்துக்கொண்ட ராஜ்யமும் ஒன்று. பூருவ யஜமானனிடத்திலிருந்த விசுவாசத்தின் அறிகுறியாக ஹாஸன் தனக்குக் காங்கு என்ற பெயரை வைத்துக் கொண்டான். இவன் ராஜ்யத்துக்குத்தான் பாமினி ராஜ்யம் என்று பெயர். ஹாஸன் காலத்துக்குப் பின்பு பாமினிராஜ்யம் பீடார் பீஜப்பூர், பீரார், கோலகொண்டா, ஆமத்நகரம் என்று ஐந்து பிரி

வாய்ச் சிதறிவிட்டது. இப்படியே ஹிந்துஸ்தானத்திலும் சிற்றரசர்கள் ஏற்பட்டுவிட அதனால் ஆங்காங்கு உட்சண்டைகள் விருத்தியடைந்து வந்தன. அப்பொழுது அந்தச் சிற்றரசர்களில் ஒருவன் தனக்குப் பேபர் என்ற மொகலாயவரசன் உதவியை விரும்பினான். பேபர் அங்ஙனமே அவனுக்கு உதவிசெய்து பின்பு அவனையும் ஏமாற்றித் தானே அரசனாய்விட்டான்.

---

## தாராபாய்.

---

ராஜபுதனத்தில் தோடா என்ற ஒரு சிறிய ராஜ்யம் இருந்தது. அதை அந்தக்காலத்தில் ஆண்டுவந்த அரசர் பெயர் சுராதனர். துருக்கச் சிற்றரசர்கள் ஆங்காங்குத் தலையெடுத் திருந்ததனால் நாட்டில் எந்தமூலையிலும் அவர்கள் உபத்திரவம் அதிகமா யிருந்தது. அந்தச் சிற்றரசர்களில் சிலர் ஒன்றுசேர்ந்து தோடா ராஜ்யத்தை எதிர்த்தார்கள். சுராதனர் தனக்கு உதவிசெய்ய வரும்படி இந்தியவரசர் பலருக்கும் தூதனுப்பினார். அந்த சமயம் ஒவ்வொருவரும் தம் தம் தேசத்தைக் காப்பாற்றிக் கொள்வதில் கவனம் செலுத்தவேண்டி யிருந்தது. இந்தியாவுக்குள் தலைமை யரசரா யிருந்த ராய்மல்லர் துருக்கர்களை இந்தியாவிலிருந்து வெளியே துறத்திவிடுவதற்குத் தகுந்த முயற்சி செய்துகொண்டிருந்தபடியினால், சுராதனருக்கு ஒத்தாசைசெய்ய வருவதற்கு அவரால் முடியாமற் போய்விட்டது. எதிர்பார்த்த வண்ணம் தனக்கு ஒருவரும் உதவிக்கு வராமற்போகவே சுராதனர் அதி சுலபமாகவே தோடாராஜ்யத்திலிருந்து துறத்தப்பட்டார்.



அவருக்கு ஆண்சந்ததி கிடையாது. ஒரே யொரு பெண்குழந்தை மாத்திரம் இருந்தது; அதற்குத் தாராபாய் என்று பெயர். அவர் தன் அரிய ஏகபுத்திரியோடு சித்தூருக்கு அருகாமையிலுள்ள ஒரு சிற்றூரில் வசித்துவரத்தொடங்கினார். தோடா ராஜ்யத்தை மீட்கும் உபாய[illegible] பிரதிதினமும் சிந்தனை செய்து செய்து பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பார். தனக்கு ஆண்சந்ததி இல்லாதது பற்றி எல்லாவற்றிற்கும் தாராவையே நம்பியிருந்தார். அதனால், ஒரு ராஜபுத்திர வீரனுக்கு உரித்தான எல்லாவித்தைகளிலும் புத்திரியைப் பழக்கப்படுத்திவைத்தார். தாராபாய் குதிரைச்சண்டை செய்யவும், வாள்போர் புரியவும், வில்யுத்தம் செய்யவும், நன்றாய்ப்பழகிப் பராக்கிரமசாலினியாய் விளங்கினாள். இவற்றுடன் ராஜபுத்திர ஸ்திரீக்களுக்குரியதான அழகு கல்வி குணம் முதலியவை அவளுக்குச் சொந்தமாயிருந்தன. துருக்கர்களிடத்திலிருந்து தோடாவை ஜயித்துக் கொண்டு வருகின்றவனுக்குத் தன் அருமைமகள் தாராவை மணம்செய்து கொடுப்பதென்று சுராதனர் நிச்சயம் செய்திருந்தார்.

சிலநாள்களில் ராய்மல்லருடைய மூத்தகுமாரன் ஜயமுல்லா என்பவன் தாராவை அபேக்ஷித்துச் சுராதனரைக் கேட்க, அவர் தன் சபத்தை எடுத்துச் சொல்லி அதை நிறைவேற்றிக்கொண்டு வந்தாலன்றிக் கொடுக்க முடியாதென்று நிராகரித்து விட்டார். ஜயமுல்லா தீக்குணம் நிரம்பியவன். அவனுக்கும் பெருந்தன்மைக்கும் நெடுந்தூரம். அவன் சிநேகிதர் பலரும் அவனைப்போலவே அந்தக்குணத்தில் மிஞ்சியிருப்பார்கள். தன் அபிப்பிராயத்துக்கு இணங்காமல் மறுத்துவிட்டதனால் ஜயமுல்லா அகௌரவமான வசனங்களை வெட்கமின்றிச் சொல்லிப் பழிக்கத் தொடங்கி

னான். சுராதனர் உடனே வாளை உருவி அந்த அற்பனைக் கொன்றுவிட்டார்.

பின்பு ராய்மல்லருக்குத் தன்மகன் இறந்த செய்தி தெரிந்தது. அவர் தன் கௌரவத்துக்கு ஏற்பச் சொன்னதாவது:—"ஜயமுல்லா மரணம் அடைந்ததுதான் தகுதியானது; அவன் ராஜபுத்திரர்களின் பெரும்புகழ் விளக்கத்தை அணைக்கப் பிறந்தவன்; அவனையும் அவன் நண்பர்களையும் அற்பகுணங்கள் அடிமை கொண்டிருந்தன; சிரசாக்கினை விதிப்பதற்குப் போதுமானவளவு அவன் கொடுந்தொழில்களில் ஒன்றும் ருஜுவாகாததனால் இத்தனைநாளும் தப்பித்துக் கொண் டிருந்தான்; ஒரு ராஜபுத்திர வீரன் செய்யத்தகாத காரியத்தை இவன் வெட்கமின்றிச் செய்ய முயன்றதன்பொருட்டுச் சுராதனன் கொன்றது குற்றமாக மாட்டாது; இனிச் சுராதனன் தோடாவை அடையப் பிரயத்தனம் செய்வானாக; நாம் உதவிசெய்யச் சித்தமாயிருக்கிறோம்." என்பதுதான். என்ன கம்பீரமான வார்த்தை! தன் பிள்ளையைக் காட்டிலும் பெயரும் புகழும் அவருக்கு அவ்வளவு உயர்ந்ததா யிருந்தது.

ராய்மல்லருக்கு இரண்டாவது குமாரன் பெயர் பிரிதிராய். இவன் நற்குணங்களுக்கு உறைவிடமானவன். தாராவை இவன் மணந்துகொள்வதில் அனைவருக்கும் விருப்பம் இருந்தது. ஆனால் 'தோடா ராஜ்யத்தில் உள்ள பிறைக்கொடியை அறுத்து ஹிந்துக்கள் கொடியை நாட்டினவனுக்குத்தான் தாராவைக் கொடுக்கப்படும்' என்று செய்துகொண்ட சுராதனர் சபதம் அதற்கு ஒரு இடறு கட்டையாயிற்று. தாராவை மனைவியாய்க் கொள்ளாமல் தன் வாழ்நாட்களைத் துக்கத்துக்கு உள்ளாக்குவதைக் காட்டிலும் போரில் கௌ



ரவமாக மரணமடைவது மேல் என்று பிரிதிராய் நினைத்துக் கொண்டான். அதனால், கொஞ்சம் ராஜபுத்திர சேனைகளோடு தோடாவை எதிர்க்கப் புறப்பட்டான்.

பிரிதிராயின் இந்த யுத்த யாத்திரை தாராபாய்க்குத் தெரிந்தது. சுராதனரிடத்தில் தெரிந்துகொண்ட யுத்த சாஸ்திரம் பயன் தருவதற்கு அதுதான் தக்கசமயம் என்று முடிவு செய்துகொண்டு ஆண்வடிவம் புனைந்து யுத்தகோலத்தோடு பிரிதிராயைப் பின்பற்றிச் சென்றாள். வெகு சீக்கிரத்திலேயே இருவருக்கும் நட்பு உண்டாய் விட்டது. இருவருமாக மொகரம் பண்டிகையன்று தோடாராஜ்யத்தைக் கைப்பற்றுவதென்று தீர்மானித்துக் கொண்டார்கள். அன்று ராஜபுத்திர வீரர்களை இரவில் கோட்டைக்குள் வரும்படி கட்டளை கொடுத்துவிட்டுத் தாராவும் பிரிதிராயும் விதேசிகளைப் போலப் பகலில் பட்டணத்துக்குள் நுழைந்து எல்லாவற்றையும் நன்றாய்க் கவனித்திருந்தார்கள். மொகரம் பண்டிகை மிகவும் மும்முரமாய்க் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு துருக்கவீரனும் தன்னை நன்றாய் அலங்கரித்துக் கொண்டு பகலில் குதிரைப்பந்தயம் சூது முதலியவற்றில் பொழுதுபோக்கி இரவில் அதிகமாய்க் குடித்து அறிவு மயங்கிக்கிடந்தான். பண்டிகை விசேஷத்தினால் கடமைகளை ஒருவரும் கவனிக்கவேயில்லை. பிரிதிராயும் தாராவும் அந்த இரவில் கோட்டைக் கதவுகளைத் திறந்து ராஜபுத்திர வீரர்களை உள்ளே புகவிட்டு மகா தைரியத்தோடு துருக்கர்களை எதிர்க்கத் தொடங்கினார்கள். பண்டிகையும் குடியும் எதிர்க்கச்செய்ய முடியாமல் எதிரிகளைத் தடைசெய்து விட்டன. அதனால், துருக்கவீரர்கள் எதிர்பாராது நேர்ந்த அந்தச் சண்டையில் உயிருக்குப் பயந்து ஓடத்தொடங்கினார்கள். அங்ஙனம் பயந்து ஓடுகின்றவர்களை ராஜபுத்திரவீரர்கள்

துரத்தவாரம்பிக்கவும், தாராபாய் "வீரர்களே! அவர்களைப் பின்பற்றவேண்டாம். அவர்கள் ஆயுதங்களைக் கைப்பற்றுங்கள். நம் உத்தேசம் ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொள்வதல்லாமல், துருக்கர்களைக் கொல்வதன்று; மேலும் பயந்து ஓடுகின்றவர்களைக் கொல்வது பாபத்துக்கும் பழிக்கும் இடமாகும். வாருங்கள்." என்று அவர்களைத் தடுத்துவிட்டாள். என்ன ஆச்சரியம்! யுத்தத்திலும் அவள் காட்டிய கருணை மெச்சத்தகுந்ததல்லவா? மற்றைநாள் அதிகாலையில் கோட்டை அலங்கத்தின்மீது இந்துக்கொடி பறந்துகொண்டிருந்தது. சுராதனரும் சிங்காசனம் ஏறினார்.

பின்பு பிரிதிராய்க்கும் தாராபாய்க்கும் தோடாராஜ்யத்தில் மிகுந்த விமர்சையாக விவாகம் நிறைவேறிற்று. பிரிதிராய்க்கு அப்பொழுது வயது இருபத்துமூன்று, தாராபாய்க்குப் பதினேழு வயது. ஆனால், இந்த வீரதம்பதிகள் நெடுநாள் உலகத்தில் இருந்து வாழக் கொடுத்து வைக்கவில்லை. எப்படியென்றால், பிரிதிராய்க்கு ஒரு அருமைத் தங்கை இருந்தாள். அவள் புருஷன் பெயர் பிரவுரி. அவன் துன்மார்க்கத்தில் தேர்ந்தவன். பெருங்குடியன். தன் நாயகி சொல்லும் நற்புத்திகளைக் கேட்காமல் அவளை அடிக்கடி அடித்துத் திட்டுவதை வழக்கமாய்க் கொண்டிருந்தான். மனைவி புருஷன் ஒழுக்கத்தைச் சகிக்க முடியாமல் தமையன் பிரிதிராய்க்கு ஒரு கடிதம் எழுதினாள். அதில் "என் அன்புள்ள அண்ணா! என் புருஷன் செய்யும் கொடுமையும் கொடுஞ்செயல்களும் பொறுக்க முடியவில்லை. நான் ஒரு சகோதரி என்பது தங்கள் நினைவிலிருந்தால் உடனே வந்து ஆதரிக்க வேண்டிக் கொள்ளுகிறேன்." என்று எழுதியிருந்தது. பிரிதிராய் உடனே பிரவுரியிடம் சென்று அவனைக்கண்டித்து 'இனியாவது



நல்ல நடக்கையோடு இரு' என்று புத்திசொன்னான். பிரவுரி மிகவும் பயந்தவன்போல நடித்து அவனைக் கொல்வதற்கு ஏற்பாடு செய்திருந்தான். மற்றைநாள் பிரிதிராய்க்குப் பிரவுரியினால் விருந்து அளிக்கப்பட்டது. அதில் விஷம் கலந்திருந்ததனால் பிரிதிராய் சாப்பாடு முடிந்து வெளியில் வந்ததும் விஷம் தலைக்கேறி இறந்துவிட்டான். நிர்நிமித்தமாய் நேர்ந்த அந்த சம்பவத்துக்குத் தாராபாய் மிகவும் துக்கித்துப் புருஷனைத் துடையின்மீது இருத்திக் கொண்டு கதறினாள். என்ன புலம்பியும் என்ன? இறந்தவன் பிழைக்கமுடியுமா? அந்தோ! தாராபாய் அடைந்த துயரத்தை எங்ஙனம் எழுதமுடியும்? கொல்லும்பேயும் கருணை கொண்டாடிற்று. சாஸ்திரப்படி பிரிதிராய் அடக்கம் பண்ணப்பட்டான். தாராபாய் உடனே உடன் கட்டை ஏறுவதென்று நிச்சயம் செய்துவிட்டாள். ஆனால், பக்கத்திலிருந்த சிலர் அவள் எண்ணத்தை மாற்றப்பார்த்தார்கள். ஒன்றும் அநுகூலிக்கவில்லை. தாராபாய் "நான் குழந்தைப் பருவத்திலும் வீரமுள்ள குழந்தையாய்வளர்க்கப்பட்டேன். மங்கைப் பருவத்திலும் ஒரு புருஷ சிங்கத்தை மணந்து சில நாள்வரையில் சுகத்தை அநுபவித்து வந்தேன். இப்பொழுதும் ஒரு ராஜ புத்திர ஸ்திரீயைப்போல இறக்கப் பார்க்கிறேன். தலைவனைப் பறிகொடுத்த பெண்களுக்கு இந்த உலகத்தில் என்ன வாழ்வு உண்டு. நாங்கள் இருவரும் வந்தகாரியம் முடிந்துவிட்டது." என்று சொல்லித் தீயில் இறங்கிவிட்டாள். குளத்தில் குளிப்பதைக்காட்டிலும் நெருப்பிற் குளிப்பது ராஜபுத்திர ஸ்திரீக்களுக்கு எளிதாயிருந்தது போலும்.

---

## பண்ணா.

ராய்மல்லருக்குப் பிறகு சங்கிராமஸிங்கு மீவார் தேசத்துக்கு அதிபதியானார். அக்காலத்திலுள்ள ராஜபுத்திர அரசர்களுக்கெல்லாம் அவர் தலைவராயிருந்தார். அவர் தன் சகோதரன் பிரிதிராயின் குமாரனான வனவீரனிடத்தில் அதிக வாஞ்சை வைத்திருந்தார். வனவீரனும் தன்புத்தி சாதுர்யத்தினால் சங்கிராமஸிங்கினுடைய அன்பைக் கொள்ளைக் கொண்டிருந்தான். பின்பு கொஞ்ச நாளைக்குள் வனவீரனை அவர் மந்திரிஸ்தானத்தில் அமர்த்தினார். மொகலாயவரசர்களுக்குத் தலைவனான பேபரை இந்தியாவிலிருந்து துறத்தும்பொருட்டு ராஜபுத்திர வீரர்களுடன் புறப்பீட்டுச் சங்கிராமஸிங்கு துருக்க வீரர்களைப் பலமாய்த் தாக்கினார். யுத்தம் முரமாக நடந்தும் ஜயலக்ஷ்மி மாத்திரம் அவரை அநாதரவு செய்துவிட்டாள். அதனால், சங்கிராமஸிங்குக்கு மனம் வேறுபட்டு அதே காரணத்தினால் சிலநாள்களில் மரணப்படுக்கையை அடைந்தார். தனக்குப் பரலோகயாத்திரை நிச்சயம் என்பதைத் தெரிந்துகொண்டபிறகு சங்கிராமஸிங்கு தன் அன்புக்குப் பாத்திரனாகிய வனவீரனை அழைத்து மிகவும் சிறுகுழந்தையாயிருந்த தன் அருமை மகன் உதயஸிங்கை அவன் வசம் ஒப்புவித்து "வனவீரா! இதோ என் குழந்தையை உன்னிடம் ஒப்புவித்துவிட்டேன். அவனைக் காப்பாற்றுவது உன் கடமை. தகுந்த பருவத்தில் ராஜ்யத்தை அவன் வசத்தில் ஒப்புவித்துவிடு. அவனை நீ வஞ்சித்தால் கடவுள் உன்னை வஞ்சிப்பது நிச்சயம்" என்று சொல்லி உயிர்விட்டார்.

அந்தக் குழந்தை பண்ணா என்ற ஒரு ராஜபுத்திர ஸ்திரீயின் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டது. பண்ணா



வுக்கும் அதே வயதில் ஒருகுழந்தை இருந்தது. தன் குழந்தையைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிகமாக அவள் அரசர் குழந்தையைக் காப்பாற்றிக்கொண்டு வந்தாள். அரண்மனையில் பரம்பரையாக உழைத்து வந்த நல்ல வம்சத்தில் பிறந்தவளான படியால் பண்ணாவுக்கு அந்தக் குழந்தையினிடத்தில் அளவு கடந்த விசுவாசம் இருந்தது. வனவீரன் துராசைக்காரன்; சுவயநயப்புலி; மீவார் ராஜ்யத்துக்குத் தானே அரசனாக வேண்டுமென்று நெடுநாள்களாக நினைத்துக்கொண்டிருந்தான். சங்கிராமஸிங்கு இருக்குந்தனையும் அவன் எண்ணம் முளையாகவேயிருந்தது. அவர் மரணத்துக்குப் பின்பு வனவீரன் அந்த முளையை எருவிட்டுப் பக்குவமாய் வளர்க்கத்தொடங்கினான். அதுவும் நன்றாய்ச் செழித்து வளர்ந்துகொண்டு வந்தது. உதயஸிங்கு உயிரோடிருக்குந்தனையும் அதற்குப் பலன்தர முடியாதல்லவா? அதனால், உதயஸிங்கை ரகஸ்யத்தில் கொல்வதற்கு ஆலோசனை செய்தான். காரியம் முடிவதற்கு முந்தி ஒருசமயம் தன் ஆலோசனை பிறருக்குத் தெரிந்துவிட்டால் தன் உயிரை நிராசை செய்துகொள்ள வரும் என்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஏனென்றால், ராஜபுத்திர வம்சத்துச் சிற்றரசர்கள் பலரும் உதயஸிங்கைத் தங்கள் உயிரைக்காட்டிலும் அதிகமாக மதித்துக் கௌரவித்து வந்தார்கள். வனவீரன் அத்தனை பெயர்களுக்கும் தெரியாமல் அந்தரங்கமாக ஆலோசனை செய்துகொண்டுவந்தான்.

நாள் செல்லச் செல்ல அந்த யோசனைக்காற்று அரண்மனையில் வேலை செய்துகொண்டிருந்த ஒரு வேலைக்காரன் மீது வீசத்தொடங்கிற்று. வனவீரன் செய்கைகளை அவன் ஏற்கெனவே கொஞ்சகாலமாகக் கவனித்துக் கொண்டிருந்

தான். அதனால், அவன் யோசனை அவ்வளவும் அவனுக்கு வெளிப்படையாய் விட்டது. அவன் ஆங்கு நெடுநாளாக வேலை செய்துகொண்டிருந்த ஒரு அம்பட்டன். அந்த அம்பட்டன் ஒருநாள் இரவு பத்துமணி சுமாருக்குப் பண்ணா இருந்த அறைக்குச் சென்று அவளை நோக்கித் "தாயே! இன்றிரவு வனவீரன் உதயஸிங்கைக் கொலை செய்வதற்குச் சற்று நேரத்துக்கெல்லாம் இங்கு வரப்போகிறான். ராஜகுமாரனைக் காப்பாற்றுவதற்கு நாம் என்ன செய்யலாம் என்பதைச் சீக்கிரம் யோசித்துப் பதில் சொல்லுங்கள்" என்றான். அதற்குப் பண்ணா 'ஐயோ! தெய்வமே!! இதற்கு என்னசெய்வேன்?' என்று அலறிக்கொண்டு அவனை நோக்கி "அப்பா! அம்பட்டா, சில நாள்களாக எனக்கும் இந்தச் சந்தேகம் காணப்பட்டு வந்தது. இப்பொழுது நிச்சயமாய் விட்டது. இனித் தாமதிக்காமல் உதயஸிங்கைக் காப்பாற்றும் வழியைத் தேடவேண்டும். அரசகுமாரனை நீ ஒரு கூடையில் வைத்துக் குப்பைகளால் மறைத்து வெளியில் இப்பொழுதே எடுத்துச் சென்றுவிடு. உன்னை ஒருவரும் சந்தேகிக்கமாட்டார்கள்." என்றாள். அம்பட்டன் "அம்மா! அப்படிச் செய்தும் பயன் இல்லை. குழந்தை உயிரோடு வெளியேறிவிட்டது என்பதைத் தெரிந்தவுடன் வனவீரன் சும்மாவிருக்கமாட்டான். பட்டண முழுவதும் சோதனைசெய்து கண்டுபிடித்துக் கொன்று விடுவான்." என்று கூறினான். பண்ணா திடமனத்தோடு "நல்லது அம்பட்டா! உதயஸிங்கு உயிரோடு வெளியேறி விட்டானென்று வனவீரன் எள்ளளவும் தெரியாதபடி செய்து விடுகிறேன். அதாவது:- அரசகுமாரன் ஸ்தானத்தில் அதே வயதுள்ள என் குழந்தை இருக்கட்டும். வனவீரனும் தன் உத்தேசத்தை நிறைவேற்றிக் கொள்வானாக. உதயஸிங்கு



பிழைப்பதற்கு என் குழந்தையைச் சந்தோஷமாக உயிர்ப் பலி கொடுக்கிறேன். வம்ச பாரம்பரியமாக இங்கு உழைத்துவருகின்ற எனக்கும் இதனால் ஒருபுகழ் உண்டாகட்டும்" என்று கூறிவிட்டு ஞெரேலென்று உள்ளே சென்று குழந்தையைக் கூடையில் எடுத்துக்கொண்டுவந்து குப்பையில் வைத்து மூடி அம்பட்டனை எடுத்துச்செல்லக் கட்டளையிட்டாள். அம்பட்டன் அவள் சாகசத்துக்கு வியந்து சற்றுத் தயங்கி 'அம்மா! என்ன செய்யத் துணிகிறீர்கள்? எனக்குக் கால் எழவில்லை' என்று சொல்லப், பண்ணா "வீண் வார்த்தை பேசாதே! காலதாமதம் ஆகின்றது. என் கடமையை நான் செய்தால் உன் கடமையை நீ செய்யக்கூடாதா" என்று சினந்து பேசினாள். உடனே அம்பட்டனால் அந்தக் குழந்தை ஒரு வர்த்தகன் வீட்டில் கொண்டு வைக்கப்பட்டது.

அன்று இரவு வனவீரன் அனைவரும் தூங்கிவிட்ட பிறகு உதயஸிங்கு இருந்த அறையைத் தேடிவந்தான். காவலர்கள் அகாலத்தில் தான் உள்ளே நுழைவதற்குச் சந்தேகம் கொள்ளாவண்ணம் "ராஜகுமாரன் தூக்கத்தைக் கவனித்து வரவேண்டியிருக்கின்றது. வைத்தியர் 'அவனுக்கு வியாதி வந்திருக்கின்றதென்றும், அது தூக்கசமயத்தில்தான் காணப்படும் என்றும்" தெரிவித்திருக்கிறார். அதன் உண்மையைச் சோதிப்பதற்கு நான் இங்கு வருவது அவசியம்,' என்று அவர்களுக்கு சொல்லி உள்ளே நுழைந்தான். தூக்க மயக்கத்தினாலும் ஊழ்வினையின் தூண்டுதலாலும் ஆங்குப் படுத்துக்கொண்டிருந்த பண்ணாவின் குழந்தையை உதயஸிங்கு என்று தவறாகநினைத்து அதைக் கைவாளுக்கு இரையாக்கிவிட்டுத் தன் இருப்பிடம் சென்றான். மரண சமயத்தில் குழந்தை வீரிட்டதனால் அரண்மனைப் பரிசார

கர்கள் விழித்துக்கொண்டு குழந்தை வெட்டுண்டு இரத்தத்தில் மூழ்கி இறந்து கிடப்பதையும் பண்ணா பக்கத்தில் மூர்ச்சைபோய் விழுந்திருப்பதையும் உள்ளேவந்து கண்டார்கள். மறுநாள் அதிகாலையில் அந்தச் செய்தி வெளியில் பரவி விட்டது. அனைவரும் வனவீரனை எதிரிலேயே தூஷித்துப் பேசத்தொடங்கினார்கள். வனவீரன் செய்த அக்கிரமத்துக்கு ராஜவம்சச் சிற்றரசர்கள் பலரும் ஒன்று சேர்ந்து அவனை வெளிவிடாமல் அநேக நாள் சிறைச்சாலையில் அடைத்து வைத்திருந்தார்கள்.

பின்பு பண்ணா வர்த்தகன் வீட்டுக்குச் சென்று உதயஸிங்கைத் தகுந்த பந்தோபஸ்தோடு வளர்த்துக்கொண்டு வந்தாள். அந்த ரகசியம் கொஞ்ச நாளைக்கெல்லாம் மீவார் ராஜ்யம் முழுவதும் பரவி விட்டது. அதன்பின் சிற்றரசர்களும் பிரபுக்களும் ஒன்று சேர்ந்து உதயஸிங்கை அரண்மனைக்கு அழைத்துக் கொண்டுவந்து தகுந்த பருவத்தில் அவனுக்கு மகுடாபிஷேகம் செய்து வைத்தார்கள். வனவீரனை அப்பொழுதும் ஏன் என்று கேட்பார் இல்லை. சிறைச்சாலையிலேயே அடைபட்டுக் கிடந்தான். உதயஸிங்கு அவன் செய்கையை உணர்ந்தும் மரணதண்டனை விதிக்கவில்லை. அவனைத் தன் தேசத்திலிருந்துமாத்திரம் அப்புறப்படுத்திவிட்டான். பண்ணாவின் பெயரால் அன்னசத்திரம் ஒன்று உண்டாக்கி, வருகின்ற விதேசிகளுக்குத் தினமும் அன்னமளிக்க ஏற்பாடு செய்து ராஜ்யத்தைப் பரிபாலித்துக்கொண்டுவந்தான்.

## தூர்க்காவதி.

பேபர் இறந்தவுடன் அவன் புத்திரன் ஹுமாயூன் பட்டத்துக்கு வந்தான். ஆனால், ஷேர்ஷா என்பவனால் யுத்



தத்தில் தோற்கடிக்கப்பட்டுப் பாரஸீகத்துக்குச் சென்று அங்கிருந்து பெருஞ்சேனைகளைத் திரட்டிவந்து தன் தேசத்தைத் திரும்பவும் கைப்பற்றிக் கொண்டுவிட்டான். ஹுமாயூனுக்குப் பிறகு பட்டத்துக்குவந்தது அக்பர். மகம்மதிய அரசர்களுக்குள் அவர்தான் முதன்மை பெற்றவர். அவர் அநேக தேசங்களை ஜயித்துத் தன் ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார். ராஜதந்திரம் அவ்வளவும் அவருக்கு வெகு நன்றாய்த் தெரியும். ஆளும் திறமையில் மகாநிபுணர். தோல்வி யடைந்தவர்க ளிடத்தில் அவர் காட்டும் மதிப்பும் மரியாதையும் அதிகம். தோல்வி யடைந்தவர்களுடைய அந்தஸ்துக்குத் தகுதியான வேலைகளை ஒவ்வொருவருக்கும் கொடுத்துத் தன் ராஜ்யத்தையும் தன்னையும் மிகுந்த பலம் செய்து கொண்டார். மதத்துவேஷம் அவருக்குக் கொஞ்சமும் கிடையாது. இந்துக்களும் துருக்கர்களும் எப்பொழுதும் ஒத்து வாழவேண்டும் என்பது அவர் நோக்கம். ராஜபுத்திரர்களைச் சிநேகம் செய்துகொண்டா லல்லாமல் மொகலாயராஜ்யம் இந்தியாவில் என்றும் நிலைத்து நிற்கமாட்டாதென்பதை அக்பர் வெகு நன்றாக அறிந்திருந்தார். இரண்டு வம்சத்தவர்களும் மனம் ஒத்து ஒருவரோடொருவர் சம்பந்தம் செய்துகொண்டா லல்லாமல் அவர்களுக்குச் சிநேகம் இருக்கமுடியாது என்று அவர் வெகு சிரமப்பட்டு, முதலில் ராஜபுத்திர ஸ்திரீக்களைத் தாம் மணம் செய்துகொண்டார். தன் புத்திரனுக்கும் அப்படியே மணம் செய்வித்தார். தன் வம்சத்துப் பெண்கள் பலரையும் ராஜபுத்திரர்களுக்குக் கொடுத்து விவாகம் நடத்துவித்தார். அவர் பெருந் தன்மைக்காகவும், இந்தியர்களைக் கொஞ்சமும் வித்தியாச மில்லாமல் நடத்திவரும் நீதி யாளுகைக்காகவும் சந்தோஷித்து, அநேகம் ராஜபுத்திர வீரர்கள் அவருக்கு

உண்மையில் வருந்தி உழைத்து வந்தார்கள். அவர் போர் வீரர்களில் பெரும்பான்மையோரும் ராஜபுத்திர வீரர்கள் தான். அந்தக் காலத்தில் ஒவ்வொரு விஷயத்திலும் நிபுணர்களாய் விளங்கிவந்த இந்துக்கள் பலரும் அவர் சபையை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள். அரசாக்ஷியின் பொறுப்பு அவ்வளவையும் ராஜபுத்திரர்களிடத்திலும் அந்தணர்களிடத்திலும் அவர் ஒப்புவித்திருந்தார். அவர்ராஜ்யம் தழைத்தோங்குவதற்கு அஃது ஒரு பெரிய முதற்காரணம்.

அக்பரால் ஜயிக்கப்பட்ட தேசங்களில் குருமண்டலமும் ஒன்று. அவர்காலத்தில் குருமண்டலம் ஒரு ஸ்திரீயினால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. அவள்பெயர் துர்க்காவதி. அவள் கீர்த்திஸிம்ஹர் என்ற ஒரு அரசர் புத்திரி. எல்லா லக்ஷணங்களும் அவளுக்கு ஆபரணமாய் விளங்கின. தந்தை துர்க்காவதியை ஒரு உயர்ந்த ராஜபுத்திர வரசனுக்கு மணம் செய்து கொடுக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருக்கும் பொழுது அவள் குருமண்டலத்துக்குத் தலைவனான தல்பத்ஷாவை மணம்புரிய விரும்பினாள். 'தல்பத்ஷாவுக்கு நீ தலைவியாகக் கூடாது' என்று எத்தனையோ விதங்களில் எடுத்துச் சொல்லியும் துர்க்காவதி தன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளவில்லை. அதனால், கீர்த்திஸிம்ஹர் தன் புத்திரியைக் கடுமையாய் நடத்தத்தொடங்கினார். அந்த சங்கதி தல்பத்ஷாவுக்கு எட்டிற்று. அவன் உடனே தன் படைவீரர்களோடு புறப்பட்டு வந்து கீர்த்திஸிம்ஹரை எதிர்த்து அவரை ஜயித்துத் துர்க்காவதியைத் தன் தேரில் வைத்துக் கொண்டு பட்டணம் சென்று மணம் செய்து கொண்டான். துர்க்காவதி தான் விரும்பிய கணவனுடன் குறைவில்லாமல் வாழ்ந்துவந்தாள்.



கொஞ்ச நாளைக்கெல்லாம் துர்க்காவதியின் வயிற்றில் ஒரு ஆண்குழந்தை உதயமாயிற்று. குழந்தை பிறந்த மூன்றாவது வருஷத்தில் தல்பத்ஷா திடீரென்று இறந்துவிட்டான். துர்க்காவதி தன் புருஷன் இறந்ததுக்கம் அளவு கடந்ததாயிருந்தாலும் அதைக் கொஞ்சமும் வெளிக்குக் காட்டாமல் புத்திரன் நிமித்தம் குருமண்டலத்தை ஜாக்கிரதையாய்ப் பரிபாலித்துவந்தாள். அவள் கம்பீரமும் ஆளும் திறமையும் மெச்சத்தகுந்தது. அந்தக் காலத்தில் அக்பர் சேனைகள் இந்தியாவின் எந்தப் பக்கங்களிலும் பரவிச்சென்று யுத்தம்செய்து ராஜ்யங்களை ஜயித்துக்கொண்டு வரத், தன் தேசத்தில் மாத்திரம் மொகலாய சேனைகளின் காற்றும் வீசாவண்ணம் துர்க்காவதி கவனமாய்ப் பாதுகாத்துக்கொண்டு வந்தது ஆச்சரியமல்லவா? குருமண்டலத்துக் குடிகள் பலரும் துர்க்காவதியின் ஆளுகையே தங்களுக்கு எப்பொழுதும் நிலைத்திருக்க வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். அக்பருடைய படைவீரர்கள் குருமண்டலத்தை ஜயிக்கவேண்டுமென்று அவரை எத்தனையோ தடவை உத்தரவு கேட்டார்கள். துர்க்காவதியின் ஆளுகையும் ஒழுங்கும் அவர் காதுகளுக்கு வெகு நன்றாக எட்டியிருந்தன. தன்போன்ற உயர்ந்த வரசர்களும் பின்பற்றும்படியான குணங்களோடு கூடிய துர்க்காவதியின் ஆளுகையை அடியோடு அடக்கிவிடுவதற்கு அவர் எண்ணம் கொள்ளவில்லை. அப்பொழுது குருமண்டலம் இந்தியாவில் மிகவும் முதன்மை பெற்ற ரர்ஜ்யமாக விளங்கிற்று.

கடைசியில், அக்பரின் ஸர்தார்களில் ஒருவனான ஆஸப்கான் என்பவன் குருமண்டலத்தைத் தாக்குவதற்குத் தனக்குக் கட்டாயம் உத்தரவு கொடுக்கவேண்டுமென்று அவரை

நிர்ப்பந்தம் செய்தான். சிலகாரணங்களை முன்னிட்டு அவன் வசனத்தைத் தட்டிப்பதற்கு அக்பரால் முடியாமற்போய் விட்டது. அதனால் அவருக்குத் தன் பழைய எண்ணங்களை மாற்றிக்கொள்ள நேர்ந்தது. பின்ப ஆஸப்கான் பெருஞ்சேனைகளோடு குருமண்டலத்தை எதிர்த்தான். குருமண்டலம் ஒரு சிறிய ராஜ்யம். அக்பரோடு எதிர்த்துப் போர் செய்வதற்குத் தன்னால் முடியாதென்பது துர்க்காவதிக்கு நன்றாய்த்தெரியும். ஆயினும் தன் தேசத்தின் சுவாதீனத்துக்காகத் தான் யுத்தம்செய்வது தருமம் என்று தீர்மானித்துக் கொண்டாள். அந்தச் சிறிய ராஜ்யத்தில் உள்ள ஆண்மக்கள் பலரும் ராணி துர்க்காவதியின் கட்டளை யில்லாமல் தாங்களே சுதாவில் வந்துசேர்ந்தார்கள். தங்கள் உயிர் உள்ளவரையில் ராணி துர்க்காவதியோடு நின்று சண்டைசெய்ய வேண்டும் என்பது அவர்கள் அந்தரங்க அபிப்பிராயம். ஆஸப்கான் வந்து தாக்கினதும் அந்தச் சிறு ராஜ்யத்தின் சேனைகளைக் கண்டு மிகவும் திகைத்துப்போய் விட்டான். முதலில் அவன் அவ்வளவு சேனாபலம் ஆங்கு இருக்கும் என்று நினைக்கவேயில்லை. மிகுந்த சுலபத்திலேயே அதனை ஜயித்துவிடலாம் என்பது அவன் கொள்கை. எதிர் நின்று தாக்கும்பொழுதுதான் அவன் மிகவும் அசாத்தியமாகிய ஒரு பெருங்காரியத்தில் இறங்கியிருப்பதாக உணர்ந்து கொண்டான். ராணி துர்க்காவதி உற்சாகத்தோடு தன் சேனைகளை அணிவகுத்து நடத்தத் தொடங்கினாள். அவள் வீரர்கள் தங்களை ஒரு பராசக்தி நடத்துவதாக நினைத்துக்கொண்டார்களே யன்றிச் சாதாரணமான ஒரு பெண்பிள்ளையின் கீழ்த் தாங்கள் அடங்கிநின்று யுத்தம்செய்வதாக நினைக்கவேயில்லை. ஆஸப்கான் ராணி துர்க்காவதியினால் இரண்டுதடவை தோற்கடிக்கப் பட்டான். அவன் படைவீரர்களில்



பெரும்பாலார் சண்டையில் உயிர்துறந்து விட்டார்கள். தானே வலுவில்வந்து அகப்பட்டுக்கொண்டதற்கு யாவரை வெறுத்துக் கொள்ளலாம்?

பின்பு அவமானத்துக்கு ... கொஞ்சநாள் கழித்து மூன்றாவது தடவை எதிர்த்து வந்த பொழுது குருமண்டலம் கொஞ்சம் சீர்கேடான நிலைமையில் இருந்தது. அதாவது: — முதல் இரண்டு தடவைகளிலும் நேர்ந்த யுத்தத்திற்குப் பொக்கிஷமும் பண்டங்களும் செலவு செய்யப்பட்டன. தலைமை வீரர்களில் பலரும் வீரசுவர்க்கத்தை அலங்கரிக்கச் சென்றுவிட்டார்கள். நின்றவர்கள் பிள்ளைத் தன்மையும் அற்ப புத்தியும் உள்ளவர்கள். இவர்களைத் துணையாய்க்கொண்டு ஆஸப்கானை எதிர்த்து நிற்பது அறியாமைத்தனம்என்பதை ராணி துர்க்காவதி உணராதிருக்கவில்லை. சண்டையை நிறுத்துவதற்கு எவ்விதத்திலும் வழி யில்லாததனால், அவமானமடைந்து ஆயுள்காறும் இருந்து வருந்துவதைக் காட்டிலும் தன் தேசத்தின் பொருட்டுச் சண்டை செய்து இறப்பது உத்தமம் என்று தீர்மானித்துக் கொண்டாள். அப்பொழுது அவள் அருமைக் குமாரனுக்கு வயதுபதினான்கு. ஒரு பெண் சிங்கம் தன் குட்டியோடு யானைக் கூட்டங்களை எதிர்த்து நிற்பதுபோல, ஆஸப்கான் பெருஞ் சேனைகளைத் தன் மகனுடன் எதிர்த்துத் தாக்கிநின்றாள். அந்தச் சண்டை மிகவும் கடுமையாக நடந்தது. யுத்த நடுவில் தன் புதல்வன், கண்ணுக்கெதிரிலேயே காயம் பட்டுக் குதிரையிலிருந்து கீழே விழுந்துவிட்டான். பக்கத்தில் சண்டைசெய்துகொண்டிருந்த ஸர்தார்கள் சாகும் தருணத்தில் இருக்கின்ற தன் புத்திரனைக் கண்டுபேசுவதற்குச் செல்லும்படி ராணி துர்க்காவதியைக் கட்டாயப்படுத்தினார்கள். அதற்கு

ராணி "நான் இப்பொழுது செல்லக்கூடாது. நான் திரும்பி விட்டால் சைனியங்கள் உண்மையறியாமல் தைரிய மிழந்து திரும்பிவிடுவது நிச்சயம். என் பக்ஷ [illegible] யுத்தகளத்தில் தான் இறக்கிற[illegible] வீரசுவர்க்கத்தில் கண்டு கொள் [illegible] என்று சொல்லிக் கொண்டே யுத்தம் செய்யத் தொடங்கினாள். பின்பு சண்டையில் தன் வலது விழியில் காயம் பட்டு அந்தக் கண்ணுக்கு ஊனம் உண்டாக, அதைச் சிறிதும் பாராட்டாமல் வேட்டையில் காயமடைந்த சிங்கத்தைப்போலக் கர்ஜித்துச் சத்துருக்களைக் கொல்லத் தொடங்கினாள். கடைசியில் தன் படைவீரர்கள் மெலிந்து விட்டதையும், துருக்கப்படைகள் தன்னைப் பிடித்துக் கொள்வதற்குக் கிட்டிவருவதையும் கண்டு குருமண்டவத்தின் பக்கமாகத் திரும்பித் தன் தேசத்தை ஏறவிறங்க ஒரு தடவை பார்த்து "நான் போய் வருகிறேன். என்னால் முடியுந்தனையும் முயன்று பார்த்து விட்டேன். இனி உன் கதி எப்படியாகுமோ? உனக்கும் எனக்கும் கடவுள் அநுக்கிரகம் செய்வாராக" என்று தன் தேசத்தின் பொருட்டுத் தியானம் செய்துவிட்டுக் கைவாளால் தன்னையே மாய்த்துக் கொண்டு உயிர்துறந்தாள். அவளுடையவும் அவள் புத்திரனுடையவும் சவங்களைத் துருக்கர்கள் கையில் அகப்படவிடாமல் அப்பொழுதே எடுத்து ராஜவைபவத்தோடு அடக்கம் செய்யப்பட்டன. இங்ஙனம் ராணி துர்க்காவதி தன்புகழை வளர்த்திக்கொண்டு வீரசுவர்க்கம் அடைந்தாள்.

## சாந்த்பீபி.

பாமினி ராஜ்யம் உண்டான விதமும் அது ஹஸன் காலத்துக்குப் பிறகு ஐந்து சிறு ராஜ்யங்களாகச் சிதறுண்டு போன விதமும் முன்பு சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த



ஐந்தில் ஆமத்நகரத்துச் சுல்தானாகிய ஹுஸேனுக்குச் சாந்த்பீபி என்று ஒரு பெண் இருந்தாள். அவளுக்குத் தன் சிறு பிராய முதல் துணிவு பொருந்திய வீரச்செயலை விளக்கும் காரியங்களைச் செய்வதில் மிக்க பிரியம் உண்டு. தன் தகப்பனார் கொலுவில் வீற்றிருக்கும்பொழுது தான் பக்கத்திலிருந்துகொண்டு வெகு கவனத்தோடு ஆளுகைசெய்யும் முறைகளைக் கற்றுத் தேர்ந்துவந்தாள். பின்பு யுக்தவயதில் பீஜப்பூர் ஸுல்தான் ஆலி ஆடில் என்பவனை மணம் செய்து கொண்டாள். ஒவ்வொரு யுத்தசமயத்திலும் தன் புருஷன் பக்கத்தில் இருந்துகொண்டு போர்புரிவது சாந்த்பீபிக்கு வழக்கமாய்விட்டது. யுத்தம் இல்லாத சாதாரண காலங்களில் தர்ப்பாரில் அமர்ந்து ராஜ காரியங்களைக் கவனித்துக்கொண்டு வருவாள். ஆலி ஆடில் என்பவன் கொஞ்சகாலத்தில் இறந்துவிட, அந்த வம்சத்தில் பிறந்த ஒரு குழந்தைக்காகச் சாந்த்பீபியே ராஜ்யத்துக்குப் பிரதிநிதியாக ஏற்பட வேண்டியதாயிற்று. அந்த சமயத்தில் ஆமத்நகரத்துச் சுல்தான் இறந்து விட்டான். அரசனுக்குப் பின்பு அந்தப் பட்டணத்தில் இரண்டு கக்ஷிகள் உண்டாயின. ஒவ்வொருகக்ஷியிலும் ஒவ்வொருவனை அரசனாக்கிக் கொள்ள முயன்றார்கள். அதில் ஒரு கக்ஷியைச் சார்ந்தவர்கள் தங்களைப் பலப்படுத்திக் கொள்வதற்காக ஆக்பரின் உதவியை விரும்பினார்கள். ஆக்பர் தன் புத்திரன் மூரட்என்பவனோடு ஒருபெருஞ்சேனையை அவர்களுக்குத்துணைசெய்ய அனுப்பினார். எதிர் கக்ஷிக்காரர்கள் தங்கள் பூருவவரசன் புத்திரியாகிய சாந்த்பீபியைச் சரணமடைய, அவளும் காப்பாற்றுவதாக வாக்களித்து விட்டாள். அப்பொழுது அவளுக்கு வயது ஐம்பது. உடனே அவள் ஆமத்நகரத்துக்கு வந்து கோட்டைமதில்களைச்சீர்ப்படுத்தியும், சமீபத்திலுள்ளராஜ்

யங்களோடு சிநேகத்தை விருத்தியாக்கியும், தன்னை வலிமை செய்துகொண்டு ஆக்பரின் படை வருகையை எதிர் பார்த்திருந்தாள். கடைசியில் மூராட் என்பவன் பெருஞ்சேனைகளோடு வந்து ஆமத்நகரத்தை முற்றுகையிட்டான். அந்த சமயத்தில் சாந்த்பீபியின் சேனாதிபதிகள் பட்டணத்தை விட்டு வெளியிற் சென்றிருந்தார்கள். அப்படியிருந்தும் சாந்த்பீபி யுத்தத்துக்குப் பின்வாங்கவில்லை. இருக்கின்ற வெடிமருந்து குண்டு முதலியவைகளைச் சித்தம் செய்துகொண்டு சண்டை ஆரம்பிப்பதற்குத் தயாராயிருந்தாள். ஆமத்நகரத்தின் கோட்டைச்சுவர் மிகவும் உயரமும் பலமும் பொருந்தியது. எப்படிப்பட்ட சத்துருக்களும் அதை இடித்துச் செல்லுவது அசாத்தியமான காரியம். மொகலாயர்களால் மதிலின்மீது ஏறிச்செல்ல முடியவில்லை. குண்டுகளினால் துவாரம் செய்யவும் முடியவில்லை. கடைசியில் பூமியின் கீழ்ப்பள்ளம் பறித்துச்சென்று ஆங்கு வெடிமருந்துவைத்து மதிற் சுவரைத் தாக்கவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார்கள். சத்துருக்களுடைய அந்த உத்தேசம் சாந்த்பீபிக்கு வெகுசுலபமாய்த்தெரிந்துவிட்டது. ஏனென்றால், அதைக்காட்டிலும் வேறு சிறந்த உபாயம் ஒன்றுமில்லை என்பது வெளிப்படைதான். மொகலாயர்கள் எந்தவெந்தவிடங்களில் வெடிமருந்து வைத்துக் கெட்டி செய்திருந்தார்களோ அந்தஅந்தஇடங்களைத்தான் உள்பக்கமாகச் சுரங்கம் செய்து கண்டுபிடித்து மருந்துகளை எடுத்துவிட்டாள். முன் ஜாக்கிரதையாக அவ்வளவு முயற்சி செய்தும் ஒரேயொரு இடத்திலிருந்து வெடிமருந்து வெடித்துச் சுவரில் கொஞ்சம் வழி உண்டாக்கி விட்டது.

மொகலாயர்கள் அந்த இடுக்குச் சந்தின் வழியாய் உள்ளே நுழையத் தலைப்பட்டார்கள். ஆனால், அந்த முயற்சி



அனுகூலிக்க வில்லை. சாந்த்பீபி உடனே கவசம்தரித்துத் தன் முகத்தை முற்றிலும் மறைத்துக்கொண்டு வாளை ஏந்தி அந்த இடத்துக்கு ஓடிவந்து சத்துருக்களைத் தடைசெய்து நின்றாள். அவளுடைய சிப்பாய்களும் வெகு மும்முரமாக எதிர்த்து நின்றார்கள். வெடிகுண்டு ரவைகளுக்காகவே தன் ஸர்தார்களும் சேனாபதிகளும் வெளியிற் சென்றிருப்பதனால் கையில் இருந்த கொஞ்சம் ரவைக்குண்டுகளை வைத்துக் கொண்டு உக்கிரமாகச் சண்டை நடத்தினாள். பகல் பன்னிரண்டு மணிக்கெல்லாம் குண்டுகள் செலவாய்விட்டன. உடனே தான் அணிந்துகொண்டிருந்த ஆபரணங்களைக் கழற்றிக் கொடுத்து அவற்றைக் குண்டாகவைத்துக் கெட்டித்துச் சுடக் கட்டளையிட்டாள். மொகலாயர்கள் என்ன பாடுபட்டும் அன்றுபகல் முழுவதும் உள்ளே நுழைய முடியாமற் போய்விட்டது. இருட்டுக் காலமான படியாலும், ஆரம்ப யுத்தமான படியாலும், மறுநாள் காலையில் வந்து தாக்குவதாக அவர்கள் தீர்மானித்துச் சென்று விட்டார்கள்.

மறுநாள் காலை மொகலாயர்களுக்குத் தாங்கள் நேற்றுத் தங்கியவிடம் இன்னதென்று கண்டுபிடிக்கவே முடியாமற் போயிற்று. அந்த ஒரு இரவுக்குள் இடிந்து விழுந்த இடுக்குச் சந்து முழுவதும் எட்டடி உயரத்துக்கு அதிகமாகப் புதிதாய்ச் சுவர் எழுப்பப்பட்டுவிட்டது. சாந்த்பீபி அந்த இரவு பூராவும் தூங்கவேயில்லை. மொகலாய வீரர்கள் பலரும் அவன் சாமர்த்தியம் தைரியம் சுறுசுறுப்பு முதலியவற்றை அதிகமாய்ப் புகழ்ந்து கொண்டாடினார்கள். சாந்த்பீபி அன்று இரவிலேயே ரவைக்குண்டுகளுக்கு வெளியிற் சென்றிருந்த தன் ஸர்தார்களுக்கும் சேனாபதிகளுக்கும் தூதனுப்பினாள். ஆனால், அந்தத் தூதுவர்கள் எவ்வளவு சாமர்த்தியமாய்ச் சென்றாலும் மொகலாய வீரர்களிடம் அகப்பட்

டுக் கொள்ளாதிருக்க முடியவில்லை. உடனே அவர்கள் மூரட்டின் முன்பு கொண்டு நிறுத்தப்பட்டார்கள். மூரட் அவர்கள் மூலமாய்ச் சங்கதி தெரிந்துகொண்டு சாந்த்பீபி யின் தைரியத்தைத் தன் பிரபுக்கள் முன்னிலையில் புகழ்ந்து தூதுவர்களை நோக்கி "நீங்கள் பட்டணம் செல்லுங்கள். நான் என் தூதுவர்கள் மூலமாய் உங்கள் ஸர்தார்களுக்கு ராணியின் கடிதத்தைச் சேர்ப்பிக்கிறேன்." என்றுசொல்லி அவர்களை அனுப்பிவிட்டுத் தன் ஆட்களிடம் அந்தக் கடிதத் தைக் கொடுத்தனுப்பினான். சேனாபதிகளும் ஸர்தார்களும் ஆமத்நகரம் வந்துசேர்ந்ததும் மூரட் சாந்த்பீபியோடு சமா தானம் செய்துகொண்டு திரும்பிச் சென்றுவிட்டான். மொகலாயர்கள் அப்புறம் சென்றதும் ஆமத் நகரத்தில் பழைய விரோதங்களும் கலகங்களும் அதிகரித்துக்கொண்டுவந்தன. அதனால், எதிர் கக்ஷிக்காரர்கள் சாந்த்பீபியை அவள் இருந்த அறையிலேயே அடைத்துக் கொலைசெய்துவிட்டார்கள். அந்தச்செய்தி அக்பருக்கு எட்டிற்று. அவர் உடனே தன் படைவீரர்களால் மிகுந்த சுலபத்திலேயே ஆமத்தைக் கைப் பற்றிக்கொண்டுவிட்டார். சாந்த்பீபி உயிரோடிருக்குந் தனையும் அக்பருக்கு அதைச்சொந்தமாக்கிக்கொள்ள முடிய வில்லை. தன் புத்திரனையே நேரில் சண்டைசெய்ய அனுப் பியும் வெற்றிகிடைக்காமற் போய்விட்டது. சாந்த்பீபி ஒருத் தியே அக்பருடைய பெருஞ் சேனைகளைத் தடைசெய்து கொண்டிருந்தாள். அவள் சென்றதும் அந்தத்தடை நிவர் த்தியாய் விட்டது. அந்தப் பெரிய நகரத்தில் அவளுக்குப் பின்பு எதிர்த்து நிற்பதற்கு ஒருவரும் இல்லாமற்போய் விட்டது மிகவும் ஆச்சரியம்.

---

M152
M151
14773
சென்னை-600 00

## விற்பனைக்கு தயாராயிருக்கின்றவை.

# தமிழ் புத்தகங்கள்.

* இக்குறியிட்டவைகள் துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டவை.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| * அனுபவமுறை பால்போதசணிதம் முதல் புத்தகம் ... | 0 | 6 | 0 |
| * ஷை ஷை இரண்டாவது புத்தகம் ... | 0 | 2 | 6 |
| * பூகோள சாஸ்திர பீடிகை ... ... ... | 0 | 2 | 6 |
| * கிராம ஆளுகை முறை ... ... ... | 0 | 3 | 0 |
| புதிய வட ஆற்காடு ஜில்லா பூகோளம் ... ... | 0 | 2 | 0 |
| வா. பி. வேங்கடராம சாஸ்திரியரால் எழுதப்பட்ட புதிய தமிழ் பால பாடம். ... ... | 0 | 1 | 6 |
| ஷை ஷை முதல் பாடம் ... | 0 | 2 | 0 |
| ஷை ஷை இரண்டாம் பாடம்... | 0 | 2 | 6 |
| ஷை ஷை மூன்றாம் பாடம் ... | 0 | 3 | 0 |
| சத்யவிஜயம் ஒருநாடகம் ... ... ... | 0 | 10 | 0 |
| இந்திய மாதர் சரித்திரம் முதல் பாகம் ... ... | 0 | 5 | 0 |

இதரதமிழ் புத்தகங்களும் பஜார் விலைக்கு வாங்கி அனுப்பப்படும்.

***Apply to:—***

ஆர். திருமலை அண்டு கம்பெனி,
114, பவழக்காரத் தெரு, மதராஸ்.